1044

உமா

ஆசிரியர். ஜி. உமாபதி

MADRAS
1044
4-56

சரும வியாதிகளுக்கு

சிராய்ப்புகள், வெட்டுகள், படை, சொரி, கரப்பான், கட்டிகள், கடி, விஷக்கடி, சதைத் தடிப்பு, முகப்பரு போன்ற இதர சரும உபாதைகளுக்கு

ஜெர்மெக்ஸ்

குளோரோபில் கலந்தது

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லிட். மதராஸ்-1

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 NOV 1956
MADRAS

For

QUALITY DIAMONDS

EXQUISITE JEWELLERY

ARTISTIC SILVER WARES



M/s. T. GOVINDARAJULU NAIDU

DIAMOND MERCHANTS & JEWELLERS

28, NETAJI ROAD :: MADRAS-1.

★

Phone: 4818 **T.G.N.** Grams: "ALANKAR"


நான்கு நன்மணிகள்
ZAMA INHALER
ஜாமா இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
ZAMA RUB
ஜாமா றப்
ஜலதோஷம் தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா ஆயில்
ஜலதோஷம் தலைவலி முதலியவைகளுக்கு
AMARCOSE
அமர்கோஸ்
அசல் குளுகோஸ பவுடர்
அமர்சந்த் சோபாசந்த்
தபால் பெட்டி 518 - - -சென்னை-3
போன் 2182
தந்தி "ஜாமா"

இனும்

இதோ–

மீண்டும் "ஒ. கே." வனஸ்பதி தயாரிப்பாளர்களே, முதன் முதலாக, ஒருபுதிய, உபயோகமுள்ள பரிசுத் திட்டத்தை, வாங்குபவர்களுக்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

வனஸ்பதி கெடாமல், எப்பொழுதும் புதுமையாகவும், சுகாதாரமாகவும் இருக்க முதலில் லீவர்லிட் டின்களை ஏற்படுத்தியது "ஒ. கே." வனஸ்பதி தான்.

"ஒ. கே." 1, 2, 5, 10 பவுண்டு வனஸ்பதி டின்களிலுள்ள பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள். அவற்றிற்கு மாற்றாக, உங்களுக்கு அருகிலுள்ள "ஒ. கே." வியாபாரியிடமிருந்து, உங்களுக்குப் பிடித்தமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களைப் பரிசாகப் பெறுங்கள்.

OK ஒ.கே வனஸ்பதி

ஒவ்வொரு அவுன்ஸிலும் 700 I. U. வைட்டமின் 'A' அடங்கியது.

இந்த "விசேஷ வெகுமதி" பற்றி மேலும் விவரங்கள் அறிய, உங்கள் "ஒ. கே." வியாபாரியிடமிருந்து படங்களுடன் கூடிய 'பேம்ப்லட்டை' வாங்கி பாருங்கள். "ஒ. கே." வனஸ்பதி வாங்குங்கள். 'இனும்' பரிசையும் பெறுங்கள்

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட். மதராஸ் -1.



Pilot
WORLD FAMOUS
PILOT INK
PILOT INK
FOUNTAIN PEN
AND INK
THE PILOT PEN CO., (INDIA) LTD.
OFFICE: CATHOLIC CENTRE, ARMENIAN ST, MADRAS-1. FACTORY RED HILLS, MADRAS.

ஆஸ்த்மாவா?
ஒரு நொடியில் அதை ஒழிப்பது
மல்ட்டிமிக்ஸ்
தாராளமாக மூச்சு வரச் செய்து,
தொண்டைக்கு இதமாக இருந்து,
மூச்சடைப்பையும் இருமலையும்
போக்குகிறது.
MULTIMIX
இந்தோ-ப்ரெஞ்ச் பார்மஸூடிகல் கோ.
காதோலிக் ஸென்டர், மதராஸ்-1

எனது இனப்பெயர்—தமிழன்
எனது கொள்கை—சமதர்மம்
எனது தாய்நாடு — தமிழ்நாடு
எனது குடும்பம்—இந்திய சமுதாயம்
எனது கோரிக்கை—தமிழரசு
எனது பண்பு—தெய்விகக் கலாசாரம்
எனது சமரசநெறி—சர்வதேச சகோதரத்துவம்

துணை ஆசிரியர்:

பூவை எஸ். ஆறுமுகம்

செடி 4 மலர் 8	டிசம்பர், 56	துன்முகி கார்த்திகை

பொருளடக்கம்

ஈடுசெய்ய முடியாதே! (தலையங்கம்) 9
கல்கி நினைவு நாள் 10
திரு படாஸ்கர் வருகிறார் 11
இதுவா இலக்கிய மதிப்பீடு? 12
தம்பிக்கு (கடிதம்) 13
உங்களுடன் ஒரு கணம் 15
மதிப்புரை 16
எங்கள் இதயங்கள் பேசுகின்றன 18
சின்ன அண்ணாமலை (பேட்டி) 19
வாடா விளக்கு (தொடர்கதை) 23
நிலவும் நினைவும் (கவிதை) 30
நவபாரதம் (ரேடியோப் பேச்சு) 35
அந்திவானம் (போட்டிக் கதை) 40
இலக்கியப் பட்டி மண்டபம் 48
ஏன் இந்தப் புனைபெயர்? 51
புது மணம் 52
தோல்வியில் வெற்றி 61
ஜாதி ரோஜா (தொடர் கதை) 68
ஐப்பசியும் கார்த்திகையும் (கவிதை) 70
அட்டைப்படப் பரிசு 77
திரை உலகம் 78
நடன உலகம் 79

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.

பிரசிடெண்ட்
வெஜிடபில் ஹேர் ஆயில்
ஸ்னோ
டால்கம் பவுடர்
மணத்திலும் குணத்திலும்
சிறந்தது.
Vyjayanthimala
PRESIDENT SNOW
PRESIDENT BORATED TALCUM POWDER
PRESIDENT VEGETABLE hair oil
RATHOD TRADING Co
MADRAS-1.


EXCELLENT
STEARINE CANDLES
SPECIALLY MADE FOR INDIAN-MARKET
CHURCH
TRADE MARK
ORC
O.R.C. CANDLE WORKS
O. RAJAMANICKAM CHETTY
MADRAS-3
& O. R. C. Bar Soaps

152217.

ஈடு செய்ய முடியாதே!

தமிழ் நாட்டிற்குச் சில காலமாக துரதிரஷ்டம் பிடித்திருக்கிறது. சமீபகாலமாக நடந்துவரும் பலிகளெல்லாம் போதாமல், ஐயகோ! சொல்ல நா எழவில்லை — தமிழகத்தின் காதுகள் இத்தகைய பயங்கரச் செய்தியை இதற்கு முன்னே கேட்டிருக்க முடியாது. அந்தக் கண்கள் இத்தகைய பிணக்குவியல்களைக் கண்டிருக்கவும் முடியாது— அரியலூருக்கு அருகில் பாலம் இடிந்ததால் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ஆற்றுக்குள் இறங்கிவிட்டது. இருநூற்று ஐம்பது பேர்களுக்கு மேல் மாண்டு போனார்கள்; மிகுதியுள்ள அத்தனை பேரும் இனி நடைப் பிணங்களே! எத்தனையோ குடும்பங்களின் குழந்தைகள் மாண்டு போனதைக் கண்டு தாய்கள் அலற, மனைவி மறைந்துபோனது கண்டு மணவாளன் கதறி அழ, ஆண்டவன் தரிசனத்துக்குச் சென்ற யாத்திரிகர் கூட்டங்களை அப்படியே கொள்ளை கொண்டு கொன்று குவித்துவிட்டது ரயில்; அல்ல, கடமையை ஒருசமயம் மறந்துபோய் உள்ள ரயில்வே நிர்வாக ஊழலினால்தான் இது நடந்ததோ என்று அச்சம் எழுகிறது.

விபத்து நடந்த பகுதிகளில் ஐந்தாறு நாட்களாகப் பேய் மழை பெய்திருக்கிறது. அங்கு சமீபத்தில் உள்ள ரயில்வே பாலங்கள் சரிவர இருக்கின்றனவா என்று பார்த்திருக்க வேண்டும். இதை இவர்களுக்கு ஞாபகப்படுத்த அண்மையிலே நடந்த இரண்டு பயங்கர ரயில் விபத்துக்களே போதுமானது. விமானங்கள் வானவீதியிலே செல்லுவதற்குச் சரியான கால நிலை இருக்கிறதா என்று பார்த்து எச்சரிக்க அதற்குப் பல உத்தியோகஸ்தர்கள் உண்டு. அதுபோன்றே ரயில்கள் செல்வதற்கும் குறிப்பாக, இத்தகைய பருவ மழைக் காலங்களிலாவது ரயில் பாலங்களைச் சரிபார்த்து 'சரி' என்று சொல்லிய பிறகே ரயில்கள் போகவேண்டும் என்ற கட்டாய சூழ்நிலை உருவாகி இருக்கவேண்டும். அப்படி இதற்காக வேறு இலாக்காக்கள் இருக்கின்றனவென்றாலும், கோடி கோடியாகக் கொள்ளை லாபம் பெறும் இந்த இலாக்கா அந்தப் பகுதிக்கு இனியாவது தயங்காமல் அதிகப் பணம் செலவு செய்யவேண்டும்.

மகபூப் நகர் ரயில் விபத்தைத் தடுக்க முன்வந்தது போல், இந்த விபத்தையும் தடுக்க யாராவது முன் வந்திருப்பார்கள். ஆனால், இந்த ஆட்சியில்தான் அபாய அறிவிப்பு கொடுப்பவர்களையும்கூடத் தண்டிக்கிறார்களே? இதைக் கேட்க மத்திய மந்திரிகளுக்குக்கூட அதிகாரம் இல்லையென்று அண்மையில் ரயில்வே மந்திரி சொல்லியிருக்கிறாரே? இத்தகைய இக்கட்டான நிலையினால்தானே அவர் ராஜினாமா செய்திருக்கிறார்!

விலை மதிப்பற்ற நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட இந்த விபத்துக்கு ரயில்வே இலாகாவினரும், அரசாங்கமும் எப்படி, என்ன ஈடு செய்யப்போகிறார்கள் என்பதை ஏங்கித் தவிக்கும் குடும்பங்கள் எதிர்பார்க்கின்றன. கணவனை இழந்த உத்தமிகள் இனி மலர் சூடமுடியாது; மங்கலநாண் அணிய முடியாது. ஆனால், வறுமை

யின் கொடுமைக்கு ஆளாகாமல் வாழவைக்கவாவது முயலவேண்டும். தாயை இழந்து அனுதையாகத் தத்தளிக்கும் குழந்தைகளுக்குப் பள்ளிக்குப் பணம் தரமுடியாது; பாதுகாக்கவும் முடியாது. ஆனால், அனுதை ஆஸ்ரமங்களுக்கு அனுப்பும் நிலையாவது மாற்றப் படவேண்டும். மிகுதியுள்ள சின்னஞ்சிறு குழந்தைகளான எதிர்கால வீரர்களும் வீராங்கனைகளும் பிறந்து வளர்ந்து வாழ்வு தேடுவதற்கு முன்னமே வானுலகம் அடைந்துவிட்டார்கள். மீதியுள்ள அனுதை மக்கள் வாழ இருக்கவே இருக்கிறது, நடைபாதை!

எதிரிகள் வந்து தாக்கி, நம் நாட்டைப் பாதுகாக்க இத்தனை உயிர்களும் மாண்டு போயிருந்தால், மகிழ்ச்சியடைந்திருப்போம். அது நம் நாட்டு வழக்கம். ஆனால், இது அநியாயக் கொள்ளையல்லவா? தமிழகமே! ஆட்சியாளர்களின் அஜாக்கிரதையினுல்தான் இத்தகைய விபத்து நடந்திருக்கிறதென்ருல், இனி இன்னும் நீ என்னென்ன நிலைக்கு ஆளாகப் போகிருயோ?

அஜாக்கிரதையான இத்தகைய கோரச் செயல் தனிப்பட்ட நிர்வாகத்தினரால் நடந்திருந்தால், அவர்களுக்கு இந்த அரசாங்கம் என்ன தீர்ப்பு அளிக்குமோ, அதே தீர்ப்பை இவர்களே அளித்துக் கொள்ளட்டும்! அப்போதுதான், நாட்டிலே ஜனநாயகம் ஓரளவாவது உயிரோடு நிலவி வருகிறதென்பதைப் பொதுமக்கள் உணர்வார்கள்!

இந்த விபத்தில் மாண்டுபோன அத்தனை குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

பாரதத்தின் தலைவரே, இந்தக் கோரமான ரயில் விபத்தைப்போல வேருென்றைக் கண்டும் கேட்டும் இருக்கமுடியாது. அந்தப் பகுதிகளிலே ஏதாவது விபத்தினுல் பத்துப் பதினைந்துபேர் மாண்டு போனுல் கூட, பறந்தோடிப் பார்க்கும் ஜனநாயகத்தின் தந்தையே, அமெரிக்காவுக்குப் பறக்குமுன்னே தமிழகத்தின் இந்தப் பரிதாப நிலையையும் வந்து பாருங்கள்.

கல்கி நினைவு நாள்

தமிழ்ப் பேராசிரியர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நினைவு நாள் இந்த டிசம்பர் மாதம் 5-ஆம் நாளில் வருகிறது. பொன்னி தந்த செல்வர் அமரராகி இரண்டு ஆண்டுகள் மறைந்து விட்டன. 'மாயமாய் வந்து மின்னலைப் போல மறைந்த' சரித்திரப் பெரியாரின் பெயரும் புகழும் நினைவும் தமிழகத்தில் என்றென்றும் நிரந்தரமாக நிலைத்திருக்கும் என்ற உண்மையைத் தமிழர்கள் பரிபூரணமாக அறிவார்கள்; தமிழ் கூறும் நல்லுலகம் முழுமையாக அறியும். 'கல்கி' காலத்தைவென்ற உன்னதக் கலைஞர்; மரணத்தை வென்ற சரித்திர புருஷர். பத்திரிகைத் தொழில், இலக்கியம், அரசியல், கலை, பொது நலப்பணி போன்ற சகல துறைகளுக்கும் தம் 'பேனு'வைக் காணிக்கை வைத்து, அல்லும் பகலும் உழைத்தவர் அவர்; கலைஞர்களையும் கவிஞர்களையும் அறிஞர்களையும் நல்ல நேரத்தில் தம் பத்திரிகையின் அட்டைப்படங்கள் மூலமாக உலகிற்கு அறிமுகப் படுத்திப் பிறரை உயர்த்தித் தானும் உயர்ந்த பெருந்தகையாளர்.

அந்த அதிசய மனிதரின் நினைவு நாளை ஆண்டு தோறும் பக்தி சிரத்தையுடன் – நன்றிப் பெருக்குடன் கொண்டாடி மரியாதை செலுத்த வேண்டுவது நம் கடமையாகும்.

திரு படாஸ்கர் வருகிறார்!

தமிழரசுக் கழகத்தினர் நடத்திய வடக்கெல்லை அறப்போர் நல்ல பலன் காணும் நாள் அருகில் நெருங்கி வந்து விட்டது.

தமிழ் நாடு—ஆந்திர தேசம் இவ்விரண்டுக்கும் இடையே உள்ள எல்லைத் தகராறைப் பரிசீலனை செய்து பேசி முடித்துத் தீர்வு காணுவதற்கென்று, மத்திய ஆட்சியமைப்பைச் சார்ந்த சட்ட அமைச்சர் திரு படாஸ்கர் அவர்கள் நாளது டிசம்பர் மாத நடுவில் சென்னைக்கு வரவிருக்கிறார். மகிழ்ச்சிக்குரிய செய்தி இது.

தலைவர் ம. பொ. சி. அவர்கள் மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நேருஜிக்கு விடுத்த வேண்டுகோள் அரசாங்க நடவடிக்கையாகச் செயல்படுவதற்கு, தலைவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஒன்றல்ல; இரண்டல்ல. உடல், பொருள், ஆவி என்ற முப்பிரிவிலும் தமிழரசுக் கழகம் தன்னைக் காணிக்கை வைத்த விவரத்தையும் தமிழ்ப் பண்பாளர்கள் அறிவார்கள். எல்லைப் போருக்கு உயிர்க் காணிக்கை வைத்த பழனி திரு மாணிக்கத்திற்கும் திருவாலங்காடு திரு கோவிந்தசாமிக்கும் நம் நன்றியைச் சமர்ப்பிக்கிறோம்.

நிற்க, ஒரு நாட்டின் எல்லையை நிர்ணயிக்க அந்த நாட்டின் பழக்க வழக்கங்களை அறிந்தவரால்தான் அறுதி யிட்டுக் கூற முடியும். ஆனால், இன்றோ வடநாட்டிலுள்ளவர், தென்னாட்டின் எல்லைக்குத் தீர்ப்பு கூற வருகிறார். பின் யார் வருவார்கள்? அவர்தானே வர முடியும்?

திரு ம. பொ. சி. அவர்கள் அமைத்துக் கொடுத்திருக்கும் இந்தப் புதிய உறவைப் பலன் காணச் செய்யும் நேர்மைத் திறனில் நம் தலைமை அமைச்சர் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். ஏனென்றால், ஆந்திரர்கள் தந்திரசாலிகள்; சுயநலவாதிகள். இல்லையென்றால், வடக்கெல்லைப் பிரச்சினையோடு, ஹொசூர்ப் பிரச்சினையையும் புதிதாக இப்போது கிளப்பி விட்டிருப்பார்களா?

நம்முடைய முதல் அமைச்சர் மத்தியஸ்தரிடம் நம் உரிமைகளைப் பற்றிய விளக்கங்களை அழுத்தம் திருத்தமாகக் கூறவேண்டும்; வடக்கெல்லைப் போராட்டம் அறவழிப் பட்டது; நேர்மையானதென்ற உண்மையை சட்ட மந்திரி மூலம் தலைமைப் பதவியாளர்கள் உணரும்படி எடுத்துச் சொல்ல வேண்டும்.

சட்ட அமைச்சர் தமிழகத்திற்கு நல்ல தீர்ப்பு வழங்கி நீதியைக் காப்பாற்றுவார் என்று நாம் நம்புகிறோம்.

மறுபடியும் மலையாள ஆதிக்கமா?

கடந்த 'உமா' இதழில் 'ஏன் இந்தக் கவர்னர்?' என்ற தலைப்பில் நாம் எழுதியிருந்த உப தலையங்கத்தைத் தமிழன்பர்கள் நினைவு வைத்திருப்பார்களென்று நம்புகிறோம்.

இப்போது கவர்னர் பதவி ஏற்கயிருக்கும் திருவாளர் ஏ. ஜே. ஜான் ஒரு மலையாளி. ஆம்; தமிழ் மண்ணிலே அவர்கள் ஆதிக்கம் மறுபடியும் நிலைத்துவிட்டிருக்கிறது. கவர்னர் பதவி அப்படி அவசியம் என்று நினைத்தால், இந்தத் தமிழ் நாட்டில் கவர்னர் பதவிக்கு எந்த ஒரு தமிழர் பெயரும் தலைமை ஆட்சியாளர்களுக்குக் கிடைக்க வில்லையா? பரந்த நோக்கமுள்ள தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள் கவர்னர் பதவியில் வேறு எங்குமே நியமிக்கப்பட வில்லையே!

பஞ்சாப்பிற்கும் கன்னடத்திற்கும் அந்தந்த நாட்டவர் கவர்னர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்; அதற்கு அந்தந்த மந்திரி சபைகள் செயற்பட்டன.

ஆனால், நம் அமைச்சர்கள் இந்த உரிமையை டில்லியிடமிருந்து கோரிப் பெறக் கூடத் துணிவு பெறாமல், ஏமாந்து விட்டார்கள்!

இதுவா இலக்கிய மதிப்பீடு?

இவ்வாண்டு 'சுதேசமித்திரன் தீபாவளி மலரி'ல் வெளியிடப்பட்டிருக்கும் 'சிறு கதை இலக்கியம்' 'நாவல் இலக்கியம்' என்ற இரண்டு கட்டுரைகளையும் படித்துவிட்டு நம்மால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. திரு சி. சு. செல்லப்பா, திரு க. நா. சுப்பிரமணியம் ஆகியோரது 'விமரிசனம்' கண்டு நாம் பெரிதும் வருந்துகிறோம்.

இலக்கியத்தின் தேக்கத்தை, அல்லது வளர்ச்சியை மதிப்பிட்டுத் தீர்ப்புக் கூறும் உரிமை எந்த ஒரு தனிப்பட்ட பேனாவுக்கு மட்டும் கிடையாது; அவ்வுரிமைக்கு உறவு கொள்பவர்கள் பொது வாசகர்கள், எழுத்தாளர் சங்கங்கள், இலக்கிய மதிப்பீட்டுக் குழுக்கள், பத்திரிகைகள் என்பதை இவ்விருவரும் மறந்து விட்டார்கள்.

வளரும் தமிழ் இலக்கியத்தில் சிறுகதையும் நவீனமும் 1947-க்குப் பிறகு அடைந்துள்ள—அடைந்து வரும் மகத்தான வளர்ச்சியைப் பற்றி அவர்கள் எண்ணிப் பார்க்கத் தவறி விட்டிருக்கின்றனர்கள். இந்த 'ஜோடி' தந்திருக்கும் பட்டியலுடன் சேர்க்கப்பட வேண்டிய பெயர்கள் இன்னும் எத்தனையோ உள்ளனவே!

தம்மை மட்டும் உயர்த்திக் கொண்டு, மற்ற எல்லோரையும் குறைத்துப் பேசுவோர், உண்மை ஆற்றல் பெற்றிருந்தாலும், மக்கள் மன்றத்தில் மதிக்கப்பட முடியாது. குற்றங் குறைகளை நீதிபதியின் மனப்பாங்கில் நின்று எடுத்துச் சொல்லியிருந்தால், அதில் அர்த்தம் உண்டு. ஆனால் இவ்விரு கட்டுரைகளிலும் சுயபுராணமும், இனவெறியும், ஒரு தலைப் பட்சமான கருத்துக்களுமே அடங்கி யிருக்கின்றன; இம்மாதிரிக் கருத்துவேற்றுமை கொண்ட—உண்மைக்குப் புறம்பான கட்டுரைகளை வெளியிட்டது சரியல்ல என்று நம் சகோதரப் பத்திரிகைக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

பஞ்சமோ பஞ்சம்!

அண்மையில் கல்கத்தாவில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், தற்போதைய நம் நாட்டு உணவு நிலை பற்றிப் பேசப்பட்டது. இந்த ஒரு வாய்ப்பையும் பயன் படுத்திக் கொள்ளத் தவறவில்லை காங்கிரஸ் தலைவர் திரு தேபர். வட நாட்டில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களுக்கு ஈடு செய்யவும் வழி வகுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட கூட்டங்களும் மாநாடுகளும் வடநாட்டவர்களுக்கு மட்டுமேதான் பயன் படுகின்றன.

நஞ்சையும் புஞ்சையும் நிறைந்துள்ள இந்த நாட்டிலே, பஞ்சமோ பஞ்சம் என்று பாதையிலே வரிசை வரிசையாக நிற்கும் தமிழ் நாட்டுப் பஞ்சைகளின் பரிதாப நிலையைப் பற்றி எண்ணிப் பார்க்கக் கூட மறந்து விடுகிறார்கள் டில்லி ஆட்சியாளர்கள். உலக சமாதானத்தை நிலை நாட்டுவதற்குப் பாடுபடுவதாகக் கூறிக் கொண்டு, அயல் நாடுகளுக்கெல்லாம் பறந்து சென்று கொண்டிருக்கும் நேருஜி வடநாட்டவருக்கு ஒரு நீதி, தமிழ் நாட்டவர்க்கு வேறொரு நீதி என்று பாரபட்சம் காட்டி வரும் பரிதாபமான நிலையை இனியாவது மாற்றிக் கொண்டு, தமிழ் நாட்டில் தலைவிரித்தாடும் பஞ்சப் பேயையும் பட்டினிப் பிசாசையும் விரட்டி, சுமுகமான சூழ்நிலை நிலவ ஆவன செய்யவேண்டும். உணவுப் பிரச்சினையில் வெற்றி பெற்றால் தான், பாரதம் முழு விடுதலை அடைந்ததாகக் கூறிக் கொள்ள முடியும்.

கானல் நீர்தான்!

அன்புள்ள தம்பி,

"அன்புள்ள அண்ணா! நமது அருமைத் தலைவர் ம.பொ.சி. அவர்கள் 'திராவிட நாடு என்பது கானல் நீர்தான்' என்று சொல்லியதைக் கேட்டு, முன்னேற்றக் கழகத் தோழர்கள் முணுமுணுக்கிறார்கள். அதற்கு, இன்னும் உங்களால் இயன்ற விளக்கங்களைத் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். காரணம், தமிழ் நாட்டின் தலைநகரில் தமிழினத்தின் தனித்தலைவரின் சொற்பொழிவுகளை எங்களை விட நீங்கள் அதிகமாகக் கேட்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தலைவர் அவர்களின் பேச்சை நீங்கள் அதிகம் புரிந்திருப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் தான் கேட்கிறேன்."

அன்புள்ள தம்பி, உன் அறிவு பொருந்திய அவசியமான கேள்விக்கு இதோ, என்னால் இயன்ற பதில்.

திராவிட அமைப்பு என்பது தமிழ், ஆந்திரம், கன்னடம், மலையாளம் பேசும் மொழிவழி மக்கள் ஒன்றாக இணைந்து, அப்படி இணைந்த பிறகு உருவாகும் கூட்டாட்சிதான். தம்பி! இந்த இடத்தில்தான் 'கானல் நீர்' என்ற பதத்தைப் பொருத்தியிருக்கிறார் நமது அருமைத் தலைவர். விசால ஆந்திரம் அமைக்கப் பாடுபட்ட தலைவர்களுக்குள்ளாகவே பொறாமையும் பூசலும் வளர்ந்து குழம்பிக் கொண்டிருக்கிறார்கள். கன்னடத்திலும் அப்படித்தான்; விரிந்த கர்நாடகத்தை ஆள வேறு யாரும் வரவில்லை; இருந்தாலும் அங்கேயும் இரண்டு பிரிவுகள். கேரளத்திலும் பிரிவு மனப்பான்மை எல்லைக்கே போய், அங்கே ஜனாதிபதி ஆட்சி நிலவுகிறது. இப்படி ஆங்காங்கே தம் சொந்த இனத்திலேயே விட்டுக் கொடுக்கும் மனம் வராமல், போட்டியும் பொறாமையும் உருவாகி வருகிறது. இப்படி அந்த மூன்று பிரிவுகளிலும் இத்தகைய பிரிவு வளர்ந்தாலும், பிற இனத்திடம் விட்டுக் கொடுக்கும் விவேகம் இல்லாதவர்கள் அல்ல. ஆதலால், அங்கே அறிவுப் போட்டியும், அத்துடன் யாருக்குப் பதவி பிடிக்கப் பலம் அதிகம் இருக்கிறதென்ற பலப் போராட்டமுமே நடக்கிறது.

இன்னும் கேள்: கன்னடர்களோ கடவுளையும் காகத்தையும் நினையாது உணவு உட்கொள்ள மாட்டார்கள். மலையாளிகளோ மலையாள பகவதியையோ ஐயப்பனின் அருளையோ அன்றாடம் நினையாமல் வாழ்வதில்லை. ஆந்திர நாட்டுப் பகுதியில் அதிகமான தெய்வத் திரு ஆலயங்கள் இல்லாமலிருந்தாலும், யாத்திரிகர்களாக நாடு பூராவும் சுற்றி வரும் சூழ்நிலை படைத்தவர்கள். இந்த மூன்று பிரிவினர்களிடத்திலேயும் தெய்வ பக்தியும் தேசபக்தியும் கலாசாரத்தின் கடைசியைக் காண விட்டாலும், அனாசார அழிவுக்குப் போகத் துணியாதவர்கள் இவர்கள்.

இப்படி இன்னும் பலபல. ஒன்று சேர்க்க முடியாத மனப்பாங்கு படைத்தவர்கள், கடவுள் பக்தி தேவையில்லை, அதிலே உதயமாகும் கலாசாரப் பண்பாட்டை விரும்பாதவர்கள்; அத்துடன் பயங்கரமான வகுப்புவாதத் தீய சக்திகளை வளர்த்து எந்த பாபத்தையும் செய்யத் துணிந்தவர்கள்.

இத்தகையோரின் திராவிட நாட்டுக் கூச்சலைக்கேட்டு, இந்த மூன்று பிரிவுகளும் எப்படிச் சேர்ந்து வாழ முன்வருவார்கள்? அத்துடன், இவர்களது இயக்கத்திலுள்ளவர்கள் நூற்றுக்கு 90 பேர் தமிழர்களே. அவர்கள் நடத்தும் சொற்பொழிவுகள் தமிழிலேதான். திட்டியுள்ள புத்தகங்கள் அத்தனையும் தமிழ். அவற்றில் அவர்கள் கூறிவரும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவை இம்மியளவும் கிடையாது. இப்படி ஒரு திராவிடநாடு இவர்களது கற்பனையிலே உருவானாலும், அந்த நாட்டில் முதல் அமைச்சர் எந்த இனத்தைச் சார்ந்தவராக இருக்க முடியும்? அப்படி இவர்களிலே ஒருவர் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், இவர்களை இது வரையிலும் சுற்றி வாழ்த்துரை எழுப்பியோர்களுக்கு வாழ்வு தராமல், புதிதாக இணைவோருக்குத் தர இயலுமா? அதற்கு பின்னே, இவர்களுக்குள்ளாக கோஷ்டி உருவாகாமல் இருக்க முடியுமா?

ஆந்திரத்தில் தெலுங்கானா ஆந்திரர்களா, ராயலசிமை ஆந்திரர்களா? கோஷ்டியிலே, கோபால ரெட்டியைச் சார்ந்தவருக்கா? சஞ்சிவி ரெட்டியோடு இருபவர்களுக்கா என்ற கோர தாண்டவம் அங்கே!

கர்நாடகத்தில் மைசூரைச் சார்ந்த கன்னடியர்களுக்கா, பெங்களூரைச் சார்ந்த கன்னடியர்களுக்கா? கோஷ்டியில், அனுமந்தையா கூட்டத்திற்கா, அல்லது நிஜலிங்கப்பா குழுவினருக்கா என்ற கோபதாபங்கள் இன்னும் தனியவில்லை.

கேரளத்திலோ, கொச்சியைச் சார்ந்த மலையாளிக்கா அல்லது திருவிதாங்கூரைச் சேர்ந்த மலையாளிக்கா? கோஷ்டியில் பனம்பள்ளியோடு இருப்பவர்களுக்கா? அல்லது கோவிந்த மேனனின் கும்பலுக்கா?

இப்படித் தம் தம் சொந்த மாகாணங்களிலேயே—தன் தன் சொந்த இனங்களிலேயே பூசல் உருவாகி வளர்ந்துவிட்ட இந்தக் காலத்தில், கானல் நீர் என்ன, கற்பனையில் கூட என்றும் கருதிப் பார்க்க முடியாதது, இந்த திராவிட நாட்டுப் பிரச்னை. இதைப் பெற்றெடுத்த பெரியாரே, 'திராவிட நாடு வேண்டாம்; வெங்காய நாடு வேண்டாம்!' என்று கூறியதோடு, இனி அந்த இனங்களை ஒன்று சேர்த்து இழுத்துச் செல்ல முடியாது என்று அவர்களை இழிவாகவும் பேசியிருக்கிறார். ஆதலால் அந்த இனங்கள் இவரிடம் எந்தக் காரணத்தைக் கொண்டும் அன்பு காட்டமாட்டார்கள்; காட்டவும் முடியாது. நினைத்ததைச் சொல்லும் நெஞ்சுரம் படைத்த வைக்கம் வீரரையே இழித்துப்பேசி வருகிறார்கள். அவரும் இவர்களை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்து வருகிறார். மற்ற மூன்று இனங்களாவது பதவிக்கு மட்டுமே பாசறை அமைக்கிறார்கள். ஆனால் இவர்கள் சண்டையோ மூன்றுந்தரம் மட்டுமல்ல; கடைசித் தரமானது. தேவிகுளம்-பீர்மேடு பிரச்னை வந்தபோது தமிழினத்திற்குப் பரிந்து மலையாள இனத்தை இழித்துப் பேசினார்கள். வடக்கெல்லைப் பிரச்னை வந்தபோது, ஆந்திரர்களிடத்திலும் அடக்கமாக நடந்து கொள்ளவில்லை. கன்னடக்காரர்களுக்கோ இவர்களைக் கண்டாலே ஆகாது.

பெரியார் அவர்கள் இனி தமக்கு எந்தப் பதவியும் தேவையில்லை என்ற பெருநோக்கத்தோடு, 'தமிழ் நாடு தமிழருக்கே!' என்ற உண்மை ஒலியைத் தம் வாழ்நாளிலேயே சொல்ல ஆரம்பித்துவிட்டார். அத்துடன் பிராமண துவேஷம் என்ற ஒன்றைக் கிளப்பி, பிராமணர் அல்லாதவர் பட்டியலில் மலையாளிகள் மளமளவென்று ஆட்சியில் நுழைவதைக் கண்டு அலற ஆரம்பித்துவிட்டார். அந்தமட்டிலுமாவது அவர் தமிழினத்திற்கு இழைத்து வந்த அநீதி இனித் தொடரக் கூடாது என்பதை உணர்ந்து விட்டார். தொட

ரும் முன்னேற்றக் கழக நண்பர்கள் தொலை தூரம் போய் விட்டால், துணைக்குப் பின்னே யாரும் வராமல் போய் விடுவார்கள். ஆதலால், அவர்களும் தமிழினத்தின் வாழ்வே நம் தமிழகத்தின் வாழ்வு என்பதை உணர்ந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தை மாற்றி, தமிழர் முன்னேற்றக் கழகமாகவோ, அல்லது தமிழர்கள் வாழ்வே தன்வாழ்வு எனக் கருதிச் செயலாற்றி வரும் தமிழரசுக் கழகத்தில் அங்கத்தினராக ஆகவோ ஆவது தான் புத்திசாலித்தனம். மற்றப் பலபல கழகங்களையும் கட்சிகளையும் போல நம்பிக்கையில்லாத கொள்கைகளோ, நடைமுறைக்கு வரமுடியாத செய்கைகளோ கொண்ட அமைப்பல்ல தமிழரசுக் கழகம். அது ஏற்படுத்திக்கொண்டிருக்கும் கொள்கைகள் நடை முறையில் நடக்கக் கூடியவை. அவைகளில் பலவற்றை வெற்றிகண்டு வீரநடை போட்டு வருகிறது. ஆதலால், அதைச் சார்ந்தவர்களைக் குறைகூறிச் சுலபமாகத் தப்பிக்க முடியாது என்பதையும், வீரமுழக்கத்தோடு நீ ஏறிப் பேசும் மேடைகளிலெல்லாம் முழக்கம் செய்; நீ எழுதும் எழுத்துக்களையெல்லாம் இன்னும் விளக்கமாக எழுதிக் காட்டு. மற்றவைகளை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புத் தமையன்.

உங்களுடன் ஒரு கணம்

'மன்றில் ஆடும் மணி'க்கு இந்த வாலைக் குமரியின் ஆட்டமென்றால் மிகுந்த ஆவல் போலும்! 'குறியொன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தை' இவள் எப்படி அறிவாள்? கால்மாறிக் குனித்தவனைக் குருவாகக் கொண்டு நடனமாடும் இந்தப் பெண்பாவையின் பக்திப் பெருக்கிற்கு அளவு கிடையாது. இவளுடைய செந்தாமரை முகத்தில் விளையாடும் மந்தகாசத்தில் தான் எத்தனை வகையான நடன பாவங்கள் விளையாடுகின்றன!

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய்—எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!"

என்று இவள் கேட்கிறாள்.

அதோ, சிருஷ்டியின் ரகசியத்தைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறதே அந்தக் குத்து விளக்கு!

ஆம்; ஓவிய மன்னர் திரு கே. மாதவன் அவர்களின் உயிரோவியம் சித்திரித்துக் காட்டிக்கொண்டிருக்கும் மையக் கருத்துக்கள் இவை.

'இலக்கியப் பட்டி மண்டபம்' 'பெண்டிர் நிலை' பற்றிச் சொல்கிறது. திருமதி இந்திரா அவர்களின் கட்டுரை இவ்விதழில் முழுமை அடைகிறது.

திரு சின்ன அண்ணமலை அவர்களின் பேட்டியையும் வெளியிட்டிருக்கிறோம். ரேடியோப் பேச்சு ஒன்றும் இடம் பெற்றிருக்கிறது. திரு நா. பார்த்தசாரதியின் கதையில் 'கனம்' அதிகம். திரு 'கஜமுகன்' குடும்பக் கதை ஒன்றை எழுதுகிறார். கதையம்சம் குறைவெனினும், டில்லி அனுபவங்கள் படிக்கச் சுவையாக இருக்கின்றன. போட்டிக் கதை வரிசையில் இம்முறை சகோதரி மாத்தம்மாளின் பெயரை அச்சிட்டிருக்கின்றோம். தொடர்கதைகள் இரண்டும் புதிய திருப்பங்களுடன் செல்கின்றன.

பொங்கல் மலர் விளம்பரம் வேறொரு பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. மலரை அணி செய்யும் அன்பர்களின் பெயர்கள் உங்களுக்குக் கட்டாயம் மகிழ்ச்சி தருமென்று நாம் நம்புகின்றோம். ஜனவரி இதழ் பொங்கல் மலராக ஜனவரி 11-ஆம் நாள் தமிழகமெங்கும் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கின்றோம். பிப்ரவரி இதழ் வழக்கம் போல முதல் தேதியன்றே வெளியாகுமென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வணக்கம். ஆசிரியர்.

நம் தமிழகத்தில் தீபாவளித் திருநாள் தொன்று தொட்டுக் கொண்டாடப்பட்டு வரும் நிகழ்ச்சியாகும். அதே மாதிரி, பத்திரிகை உலகத்தில் தீபாவளிக்கு இலக்கியக் கலை விருந்து அளித்து வருவதும் பழைய சம்பிரதாயமாக ஆகி விட்டது.

தீபாவளி மலர்கள் வரிசையில் இடம் பெறுபவை: 'ஆனந்த விகடன்'; 'கல்கி'; 'கலைமகள்'; 'அமுதசுரபி'; 'தமிழ் சினிமா'; 'காதல்'; 'சுதேசமித்திரன்'; 'கல்கண்டு'; 'பேசும் படம்'.

ஆனந்த விகடன்

'தமிழும், தமிழகமும், தமிழ் மகனும் என்றென்றும் உலக அரங்கிலே மங்காத ஒளியுடன் வாழ ஆசி கூறுங்கள்' என்று சரஸ்வதி தேவியிடம் விகடன் விண்ணப்பிக்கும் கோரிக்கை சித்தி பெற்ற இனிய காட்சியுடன் மலர் ஆரம்பமாகிறது. அமரகவி பாரதியாரின் 'செந்தமிழ் நாடு' பாடலை நாம் திரும்பத் திரும்பப் படித்துப் பரவசமடைய முடிகிறது. திருவாளர்கள் கொத்தமங்கலம் சுப்பு ('கலைமணி'), ஜி. என். பி, தி. ஜானகிராமன், கி. வா. ஜ. தேவன் போன்ற பிரபலஸ்தர்கள் மணம் பரப்பி நிற்கிறார்கள்.

கல்கி

'பித்தா, பிறைசூடி!' என்ற பக்திப் பரவச ஒலியில் அமரர் கல்கியின் 'குயில்ப் பாட்டு' எதிரொலிக்கக் கேட்டு ஆனந்தப்பட ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளது இம்மலர். ராஜாஜியின் பக்திக் கதை வழக்கம்போல் படிப்பினை ஊட்டுகிறது. ஓவியர் மணியம் காட்டும் சிற்ப விசித்திரங்கள் பாராட்டுக் குரியவை. திருவாளர்கள் பேராசிரியர் அ. சீ. ரா, க. சந்தானம், அழ. வள்ளியப்பா முதலியோரின் நல்ல எழுத்துக்களை அனுபவிக்க முடிகிறது. குறைந்த விலையில் சிறந்த கலை விருந்து.

கலைமகள்

ஸ்ரீராமர் பட்டாபிஷேகத்துடன் 'கலைமகள்' மலர் ஏடு விரிகிறது. இரண்டு மந்திரிகளின் சுவையான கட்டுரைகள் முடிந்ததும், 'தேவன்' அழகாகக் கதை சொல்லத் தொடங்குகிறார். கி. வா. ஜ. அவர்களின் 'ஜடைபில்லை' எழில் காட்டுகிறது. 'புரட்சிப் பாடல்—இரண்டாட்டம்'—பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் அருமையான கட்டுரை. லா. ச. ரா, 'மாயாவி', தி. ஜானகிராமன், த. நா. கு, பி. வி. ஆர் ஆகியவர்களின் பேனாக்கள் உண்மை உழைப்பை நல்கியிருக்கின்றன. 'பழம் பெருநகர்கள்' பலருக்குப் பயன் படும். 'கலைமகள்' கலைமகள்தான்.

அமுதசுரபி

ஓவிய மன்னர் கே. மாதவன் அவர்களுடைய உயிரோவியம் மேலட்டைக்கு அணி செய்கிறது. திரு த. நா. கு-வின் குறுநாவல் 'ரங்க மஹல்' படிக்க இனிக்கிறது. செந்தமிழ்ச் செல்வரின் 'கால் பிடிக்கத் தாதி உண்டு', என்ற கட்டுரையில் சிறப்பு மிகுந்திருக்கிறது. விக்கிரமனின் 'அரச குமாரனின் அற்புத சிருஷ்டி' இனிமை தருகின்றது. திரு ஸுபாவின் வர்ணச் சித்திரங்கள் வண்ணம் பரப்புகின்றன.

கல்கண்டு

திரு தமிழ்வாணன் அவர்கள் பல நாட்கள் இரவு பகலாக உழைத்த உழைப்பிற்குப் பலன் கண்டு விட்டார். மந்திரி சபை அமைப்பு—புதிய தொரு சிந்தனைப் பகுதி என்றே கூற வேண்டும். 'த. வா.'வின் குறுநாவல் 'முப்பது மணிநேரம்' படிக்கப் படிக்க அலுப்புத் தராதது. 'வணக்கம் அண்ணே! வாடா தம்பீ!' என்ற ஆசிரியரின் மற்றொரு கட்டுரையும்

கல்கண்டாக இனிக்கிறது. சுவைத்துப் படிக்கத் தக்க கதைகளும் கவிதைகளும் 'சூயஸ் கால்வாய்' கட்டுரையும் மலரை அணி செய்கின்றன. ஆம்; 'கல்கண்டு' மலர் மணக்கும் மாமலர்தான்!

சுதேசமித்திரன்

குறைந்த விலையில் வெளியிடப்பட்டிருக்கும் இம்மலரில் பெரும்பாலான பக்கங்கள் பயன் தருவனவாக அமைந்திருக்கின்றன. இலக்கியத்தின் தலைமையில் பிரிகின்ற கிளைகளிலே நாம் நன்கறிந்த அன்பர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால், சிறுகதை இலக்கியம் – நாவல் இலக்கியம் என்ற இவ்விரு கட்டுரைகள் ஒரு தலைப்பட்சமாக, ஏன், ஒரே சுயபுராணமாக, தவறான கருத்துக்களுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை தவிர, மிகுந்திருக்கும் விஷயங்கள் மனத்தை மகிழ்விக்கின்றன.

காதல்

'இராஜ ராஜ சோழன்' இராமநாதன் அவர்கள் தனக்கெனத் தனிவழி வகுத்துக் கொண்டவர். இவருடைய மலரில் அகிலன், டாக்டர் மு. வ, எம். வி. வெங்கட்ராம், சுகி, ரா. ஆறுமுகம், பூவை எஸ். ஆறுமுகம் ஆகியோர் சுவையுள்ள விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ் சினிமா

குறைந்த காலத்தில் அதிகமான வளர்ச்சியைக் காட்டியவர் திரு ஏ. கரீம். முதல் மலர் இது. அடக்கமான பதிப்பில், திரையுலகத்திற்குப் பெருமை தேடித்தரப் பாடுபடும் கலைஞர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள், பாடகர்கள், நடிகை-நடிகர்களின் பெயர்கள் புகைப்படங்களுடன் காட்சி தருகின்றன. எந்த எந்த நட்சத்திரம் எங்கெந்த மாதிரி கார் வைத்திருக்கிறார் என்ற விவரம் தேவையா? அதற்கும் இதில் பதில் கிடைக்கிறது.

பேசும் படம்

பல ஆண்டுகளாகத் திரையுலகிற்குப் பெருமை தேடித் தந்து கொண்டிருக்கும் சினிமாப் பத்திரிகைகளுள் 'பேசும் படம்' ஆற்றி வரும் பணி குறிப்பிடத் தக்கதே யாகும். படத் தயாரிப்பின் முழுக் கண்ணோட்டத்தை இறந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் நின்று ஆராய்கிறார் டைரக்டர் சுந்தர் ராவ் நட்கரிணி. 'எங்கள் பொழுது போக்கு' என்ற பகுதியில் நட்சத்திரங்கள் பலர் கலந்து கொண்டு, வாசகர்களின் பொழுது இன்பமாகக் கழிய வழி வகுக்கின்றனர். அதே மாதிரி 'நட்சத்திரக் குழந்தைகள்' என்ற பகுதி வர்ணப் படங்களுடன் அழகாகத் திகழ்கிறது. மொத்தத்தில் கண்ணுக்கும் கருத்துக்கும் சிறப்பான விருந்தளிக்கிறது.

ஈழகேசரி

வெள்ளி விழா மலர் இது. 'கொண்டல் சேர் கோபுரம்' கோல நகை புரிகிறது. பொருளடக்கத்தில், நாம் அறிந்த ஈழத்துத் தமிழ்ப் பெரியார்களும் தமிழகத் தமிழ்ப் பிரமுகர்களும் காட்சியளிக்கின்றார்கள். 'வெள்ளி மலர்' என்ற முன்னுரையில் 'ஈழகேசரி' யின் ஆசிரியர் திரு இராஜ அரியரத்தினம் அவர்கள் தம் பத்திரிகையின் இருபத்தைந்தாண்டுச் சேவை பற்றி விளக்கம் தந்துள்ளார். திருத்தலங்களின் புகைப் படங்கள் பக்திச் சுவை ஊட்டுகின்றன. பாராட்டத்தக்க ஆக்கம்.

சினிமா மெயில்

திரையையும் எழுத்தையும் இணைக்கும் மற்றுமொரு திரையுலக ஏடு, மெயில் வேகத்தில் புறப்பட்டிருக்கிறது. இலக்கியத்திற்கும் கலைக்கும் இடையே பண்பையும் அன்பையும் பாசத்தையும் நேசத்தையும் வளர்க்க நம் சகோதரப் பத்திரிகை பாடுபடும் என்று நம்புகிறோம்.

ஆசிரியர்: கே. யி. நாதன், முகவரி: 5, அருண் டேல், தெரு, சென்னை-4. விலை அணா இரண்டு. ★

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

...'உமா'வில் தொடங்கப் பட்டுள்ள 'இலக்கியப் பட்டி மண்டபம்' என்ற தலைப்பில் 'பெண்டிர் நிலை' என்ற தொடரை எழுதி வரும் திருமதி இந்திரா அவர்களுக்கு எங்கள் நன்றி. இலக்கியத்தை எளிய நடையிலே யாவரும் கருத்தறிந்து உணர்ச்சி வசப் படும் விதத்தில் அமைப்பது தமிழ் மக்களுக்கு வழங்கும் ஒரு சிறந்த தொண்டாகும்.

வெ. லலிதா கஸ்தூரி பி. ஏ.
அரக்கோணம்.

....தீபாவளிக்கு 'உமா'வைப் பெரிய மலராக எதிர்பார்த்தேன்—அளவில்தான். ஆனல் சிறியதாக இருக்கிறது. இருந்தாலும் விருந்து அபாரம்.

தலையங்கங்களும், 'பேசிப்பழகு' என்ற 'தம்பிக்கு' கட்டுரையும் மிகவும் உற்ற சமயத்தில் வெளி வந்துள்ளன. பேசிப் பேசித்தான் சிலர் பண்பாட்டை அழிக்கிருர்கள். பேசிப் பேசித்தான் அதைத் தடுக்க வேண்டும்.

இந்திராவின் கட்டுரை, நாமக்கல்லாரின் பேட்டி, பூவையின் ரேடியோ நாடகம், சுகியின் கதை யாவும் இனிமை தந்தன.

அகிலன், திருச்சி.

...'உமா'வில் வெளியாகியுள்ள 'பெண்டிர் நிலை' என்னும் கட்டுரையைப் படித்துப் பெரிதும் மகிழ்ச்சியுற்றேன். பேராசிரியை ஆ. ரா. இந்திரா அவர்கள் எழுதும் கட்டுரைகளைப் படிக்கும் பொழுது நான் அடையும் இன்பத்திற்கு எல்லையே இல்லை.

எத்திராஜ் கல்லூரியில் படிக்குங்கால், அவருடைய இனிமையான சொற்பொழிவுகளைக் கேட்கும் பாக்கியத்தை நானும் என் போன்ற மற்ற மாணவிகளும் அடைந்தோம். நான் அவருடைய தமிழ் மாணவியாக இருந்தேன் என்று கூறிக் கொள்வதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். அவர் செய்யும் தமிழ்த் தொண்டு போற்றற் குரியது.

ஆர். வத்ஸலா, சென்னை-8.

....இந்த இதழில் வந்துள்ள திரு அகிலனின் 'விளம்பரம்' என்ற சிறுகதை தற்கால நாகரிகப் பெண்களின் நடத்தையையும் அதனல் உண்டாகும் பலனையும் நன்கு சித்தரிக்கிறது. 'ஜாதி ரோஜா' நல்ல விருவிருப்புடன் செல்கிறது. 'என்று காண்பேன்?' உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. மேலும், 'பூவை'யின் பேட்டிக் கட்டுரையும், இந்திரா அவர்களின் 'பெண்டிர் நிலை'யும் 'தம்பிக்கு' கடிதமும் நன்ருக உள்ளன.

வேலு, கடலூர்

....நவம்பர் மாத உமா தேவியைக் கண்டேன். மகிழ்ச்சி கொண்டேன். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வரும் தேவியை என்ஞல் பாராட்டாமலிருக்க முடியவில்லை. 'பூவை' தீட்டிய 'ஒற்றை வளையல்' என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டது. 'மாயாவி'யின் 'வாடா விளக்கு', பூவையின் 'ஜாதி ரோஜா' இவற்றைப்பற்றி ஒன்று மட்டும் சொல்ல ஆசைப் படுகிறேன். தொடர் கதை முடிந்தவுடன், உமா பிரசுரமாகப் புத்தக உருவில் வெளியிட வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அ. ஹாஜா, பொதக்குடி.

....ஆசிரியர் 'பதி' அவர்களின் 'தம்பிக்கு' கட்டுரைத் தொடர் வழக்கம் போலவே பொருள் பொதிந்து பொலிவுறுகிறது. எம் போன்ற இளைஞர் குழாமிற்கு இவை பெரிதும் பயன்படும். நன்றி. பேட்டிக் கட்டுரைத்தொடர் சிறந்த இலக்கிய விருந்து.

எம். அப்துல், அரு. சங்கரன்.
மதுரை.

உங்களுக்கு எங்கள் நன்றி

சின்ன அண்ணாமலை

தாங்கள் அரசியலில் ஈடுபட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன?

சுமார் இருபதாண்டுகள் ஆகின்றன.

தங்கள் அரசியல் வாழ்விலே குறிப்பிடத் தக்க அனுபவங்கள் எவை?

1942-ல் தேவகோட்டையில் நடைபெற்ற புரட்சியில் கைதாகி, திருவாடானை ஜெயிலிலிருந்து பொதுமக்களால் விடுதலை செய்யப் பட்டது.

நீங்கள் எழுத்தாளரானது எப்படி? அந்தத் துறையில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகள் ஏதாவது உண்டா?

துண்டுப் பிரசுரங்கள் எழுதுவதின் மூலம் எழுத்தாளனேன் என்று சொல்லலாம். ஒரு சிறு அரசியல் நூல் எழுதியற்காக ஆங்கில அரசாங்கம் என்னை மூன்று மாதம் சிறைக்குக்கூட அனுப்பியது. எழுத்தில் உள்ள ஆர்வத்தில் புத்தக வெளியீட்டு நிலையம் ஒன்று ஆரம்பித்தேன். இதுவரை சுமார் 125 தமிழ்ப் புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறேன். இதில் நானே எழுதியது இரண்டு.

திரைப்பட உலகில் தங்கள் அனுபவம் என்ன?

புதிதாகப் புகுந்திருக்கிறேன். 'தங்கமலை ரகசியம்' என்ற என்னுடைய கதையை பத்மினி பிக்ஸர்ஸார் படம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையே 'ரத்தினகிரி ரகஸ்யா' என்று கன்னடத்திலும் எடுத்து வருகிறார்கள்.

பேட்டிக் கட்டுரை:

பூவை எஸ். ஆறுமுகம்

'முற்போக்கு இலக்கியம்' பற்றிய தங்களுடைய கருத்து என்ன?

தமிழ் இலக்கியம் வெகு காலத்திற்கு முன்னே 'முற்போக்கு இலக்கியம்' என்று அறிஞர்கள் பலரால் ஒப்புக் கொள்ளப் பட்டு விட்டது. இன்று வெளிவரும் புதுமை இலக்கியங்கள் அவைகளைவிட முற்போக்குத் தன்மை வாய்ந்ததாக இல்லை. நமது முன்னோர்கள் செய்து வைத்தவைகளே நமக்கு இன்றும் பெருமை அளித்துக் கொண்டிருக்கின்றன.

புத்தக வெளியீட்டாளர் என்ற உறவில், இன்னும் மிகுதியான அளவில் தமிழில் புத்தகங்கள் வெளிவரத் தங்களுடைய யோசனைகள் யாவை?

முதலில் தமிழ் அரசு மொழியாக வேண்டும். தமிழ் மக்கள் எல்லோரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக மாறவேண்டும். எழுத்தாளர்களுக்குப் போதிய



ஊதியம் கிடைக்கவேண்டும்; காகிதம்—அச்சுக்களின் செலவு நிரம்பவும் குறைய வேண்டும். புத்தகம் வாங்கிப் படிக்க வேண்டுமென்ற ஆசை தமிழ் மக்கள் உள்ளத்தில் வளர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் மிகுதியான அளவில் புத்தகங்கள் வெளிவர முடியும்.

தமிழுக்குக் கெடுதல் வராமல் இருக்கவேண்டுமானால், ஆங்கிலம், இந்தி ஆகியவற்றிற்கு கல்வியமைப்பில்—ஆட்சித் தகுதியில் எத்தகைய இடம் அளிக்கப்பட வேண்டும்?

ஆங்கிலம் பொது மொழியாக இருந்தால்தான், வடநாடு தென்னடு என்ற பேதம் மறையும். ஆகவே ஆங்கிலத்திற்கு இரண்டாவது இடமும், இந்திக்கு மூன்ருவது இடமும் தமிழ் நாட்டில் கல்வி அமைப்பில் கொடுக்கலாம். மத்திய அரசாங்க விஷயங்களில் இந்தி நுழைவதைவிட ஆங்கிலமே பொது மொழியாகி மாகாண அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளுவதே தமிழுக்குக் கெடுதல் வராத வழியாகும். இந்தியைப் படித்துக் கொள்ளுவது தவறல்ல. அதனுல் நன்மையே. ஆனுல் நாளடைவில் அது தமிழுக்குப் போட்டியாக மாறி விடாமல், முன் எச்சரிக்கையுடன் தமிழன் இருப்பது சரியே.

தாங்கள் மேடைப் பேச்சாளரான விவரத்தை அறிய ஆவல்.

சுதந்திரத்தின் மீதுள்ள ஆசையே என்னை மேடைப் பேச்சாளனுக ஆக்கியது. 'கல்கி'யின் எழுத்தே என்னை ஹாஸ்யமும் கதையும் கலந்து சொல்லும் சொற்பொழிவாளனுக மாற்றியது.

நம் எழுத்தாளர்களைத் திரைப் படத் தயாரிப்பாளர்கள் நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்ளத் தாங்கள் சொல்லும் வழிகள் என்னென்ன...?

தமிழ்த் திரைப் படத்திற்குக் கதை தயாரிப்பது என்பது நம் எழுத்தாளர்களுக்குக் கடினமானதல்ல. அதில் பலர் புகுந்து முயற்சி செய்வதில்லை. நல்ல கதையாக இருந்தால் திரைப்படத் தயாரிப்பாளர்கள் உடனே வாங்கிக் கொள்ளுவார்கள். சுமார் மூன்று மணி நேரம் ஓடக் கூடிய கதையாக நம் எழுத்தாளர்கள் எழுத முயற்சி செய்தால் வெற்றியடைய முடியும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

தாங்கள் விரும்பும் அரசியல் தலைவர் யார்?

காந்தியடிகளுக்குப் பிறகு நான் விரும்பும் ஒரே அரசியல் தலைவர் ம. பொ. சி. தான்.

பத்திரிகைத் தொழில் பொதுச் சேவையா? சொந்தச் சேவையா?

சந்தேகமென்ன?—பொதுச் சேவைதான்.

தங்களுடைய எதிர்காலத் திட்டங்கள் யாவை?

சுதந்திரம் பெற்ற இந்தியாவில் தமிழக மக்கள் தங்கள் உரிமைகளை அடைய வேண்டும். பட்டினி என்ற பேச்சே இல்லாமல், எல்லா மக்களும் சம அந்தஸ்து பெற்று—ஓலைக் குடிசைகளெல்லாம் ஓட்டு வீடுகளாகி—எங்கும் செழிப்பமாகி—இல்லந் தோறும் மகிழ்ச்சி உண்டாக உழைப்பேன். தமிழ் நாட்டில் தமிழரசு காண உழைப்பேன். தமிழன் தலை நிமிர்ந்து நடக்கத் தக்க காரியங்கள் செய்யும் தலைவர்களுக்கு நான் மிகவும் உதவியாக இருப்பேன்.

*　　*　　*

திருவாளர் நா. அண்ணமலை அவர்கள் நகைச் சுவைப் பேச்சாளர்; சிறந்த கட்டுரையாசிரியர்; கதாசிரியர்; புத்தக வெளியீட்டாளர்களின் முன்னேடி; தமிழரசுக் கழகப் பிரமுகர்களில் குறிப்பிடத் தக்கவர்; 'கல்கண்டு' அமைத்துக் காட்டியிருக்கும் தமிழரசுக் கழக மந்திரி சபையில் இவருக்குப் பிரசார இலாகா ஒதுக்கப்பட்டிருக்கிறது. இலக்கிய உலகத்தில் பவனி வந்த இவர், இப்

பொழுது திரையுலகத்திலும் பிரவேசித்திருக்கிறார்.

உங்களுக்கு அதிசயமாக இருக்கிறதா?—'யார் இந்த நா. அண்ணாமலை?' என்ற ஒரு கேள்வி உங்களுடைய சிந்தனை வட்டத்தில் 'சக்கரவியூகம்' அமைத்துக் கொடுக்கின்றதல்லவா?

ஆம்; இந்த நா. அண்ணாமலை அவர்கள் பெரிய அண்ணாமலை தான். ஆனால் இவரைச் 'சின்ன அண்ணாமலை'யாக ஆக்கிய பெருமை தலைவர் ராஜாஜியையே சாரும்.

அந்தச் சம்பவம் சுவை மிகுந்ததாகும்!

1944-ஆம் ஆண்டில் ஒரு நாள்.

மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றில் திரு சி. ஆர் அவர்கள், அண்ணாமலை அவர்களைப் பற்றி அறிமுகம் செய்து வைத்துப் பாராட்டிக்கொண்டிருந்தார். அப்பொழுது மேடையில் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களும் வீற்றிருந்தார். அண்ணாமலை என்று மட்டும் குறிப்பிட்டதால், பெரும்பாலான ஜனங்கள் 'ராஜா' வைத்தான் பாராட்டுகிறாரென்று கருதத் தொடங்கி விட்டார்கள். மக்களின் உள்ள நிலையை ஊகித்தறிந்த ராஜாஜி, "இப்பொழுது நான் பாராட்டுவதெல்லாம் இந்தப் பெரிய அண்ணாமலையை அல்ல; கீழே அமர்ந்திருக்கும் இந்த சின்ன அண்ணாமலையைப் பற்றித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்," என்று விளக்கினார். உடனே நாற்புறமும் பலத்த ஆரவாரம் எதிரொலித்தது. அந்த எதிரொலியில் 'சின்ன அண்ணாமலை' என்ற பெயர் குரல் கொடுத்தது.

பேச்சாளராக மட்டும் அறிமுகமான இவர், நல்லதொரு கட்டுரையாளராகவும் விளங்கினார்.

'கட்டுரையாகட்டும், கதையாகட்டும், விறுவிறுப்பாகவும் ஓட்டமாகவும் இருக்கவேண்டுமென்று இலக்கிய சிகாமணிகள் கூறி வந்திருக்கிறார்கள். ஆகையால், என்னுடைய கட்டுரையை திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஆரம்பிக்கின்றேன்!'

திரு சின்ன அண்ணாமலையின் முதற்கட்டுரை இப்படித் தொடங்கியிருந்தது. இவ் வரிகளைக் கண்ட பேராசிரியர் கல்கி அவர்கள், திரு சின்ன அண்ணாமலையை எழுத்துத் துறைக்கும் அறிமுகப்படுத்தினார்; 'கண்டறியாதன கண்டேன்!'; 'காணக் கண் கோடி வேண்டும்!' போன்ற பிரயாணக் கட்டுரைத் தொடர்களையும் இவர் உருவாக்க ஊக்கம் தந்தார்; கடைசியில், 'சின்ன அண்ணாமலை ஒரு கதாசிரியருங்கூட!' என்று நாலுபேர் நாலு இடத்தில் சொல்லும் அளவுக்கும் இவருடைய பெயரை உயர்த்தி வைத்தார்.

'மீனுக்குத் தண்ணீரிடமும், பக்தனுக்கு ஆண்டவனிடமும் இருக்கும் அன்பு போல, நான் அன்பு கொண்டிருக்கும் எனது வணக்கத்துக்குரிய கல்கி ஆசிரியரவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.'

'சீனத்துச் சிங்காரி' காணிக்கை வைக்கும் பகுதி இது.

சீனத்துச் சிங்காரி தன் பூச்சேர, தமிழ்ப் பெண் பூவாயி, மலாய் நாட்டு அழகி வான்மியாஸ் கியூ, சங்கரப்பதிக் கோட்டைப் பொன்னழகி போன்ற உயர்ந்த கதாபாத்திரங்களை உள்ளுறையாகக் கொண்டிருக்கும் சிறுகதைத் தொகுதி 'சீனத்துச் சிங்காரி'. இதற்கு முன்னுரை வழங்கினார் பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்கள்: 'திருகல், கோணங்கி, ஆவேசக் கோளாறு—இவை எதுவும் இல்லாத தெளிந்த நடை; சுவை நிரம்பிய சம்பவங்கள்; அவற்றையொட்டிய மனித இயல்பின் பொது அம்சங்களின் பிரதிபலிப்பு—இவற்றை இக் கதைகளில் காண்கிறேன்.'

1942-ல் அண்ணல் காந்தி அடிகள் கைதானவுடன், திரு சின்ன அண்ணாமலை திருவாடானை சப்

ஜெயிலில் அடைக்கப் பட்டார். அவரை விடுதலை செய்யும்படி கோரி, இருபதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொதித்தெழுந்து தேவகோட்டை சப்–கோர்ட்டில் தீ வைத்து, போலீஸ் ஸ்டேஷனில் பூட்டுப் போட்டார்கள். அந்தப் புரட்சியில் அறுபத்தைந்து பேர் வரை துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாயினர். திருவாடானை சிறைக் கதவை உடைத்து இவரை விடுதலைசெய்தனர் பொதுமக்கள். இந்திய சரித்திரத்தின் விடுதலைப் போராட்டத்தில் இச்சம்பவம் போன்று வேறெங்கும் நடந்ததில்லையாம்.

அண்மையில் நடந்த தேவிகுளம், பீர்மேடுப் போராட்ட சம்பந்தமாகச் சட்டசபை முன்பு அறப்போர் நடத்தி, போலீஸ் படையினரால் அமைக்கப் பெற்ற வட்டத்தைப் பிளந்து நேராகச் சட்டசபையினுள் பிரவேசித்து, மந்திரிகளை அதிர அடித்தவர் நம் அண்ணாமலை அவர்கள்.

இவருடைய இருபதாண்டுப் பொதுச் சேவையில் நாலாயிரம் மேடைப் பிரசங்கள் செய்திருக்கிறார்; இவருடைய பாதம் படாத ஊர் ஒன்றுகூட இல்லையாம்.

தமிழ் நாட்டில் முதன் முதலில் கவிஞரைக் கௌரவிக்க வேண்டுமென்று மக்கள் மன்றத்தைக் கூட்டி, ராஜாஜி தலைமையில் நாமக்கல் கவிஞருக்குப் பணமுடிப்பு அளித்த பெருமைக்குரியவர் இவர். 'இனிய தமிழில் பாடி இசைக் கலை வளர்ப்போம்!' என்று முழக்கம் செய்து தமிழிசை மாநாடு கூட்டிய புகழுக்குரிய செயலில் இவருக்கும் பெரும் பங்கு உண்டு.

இவர் 'தமிழ்ப் பண்ணை' அண்ணாமலையும் ஆவார். அழகிய கட்டட அமைப்புடன், தெளிவான அச்சோடு கூடிய நூற்றிருபத்தைந்து புத்தகங்களுக்குமேல் வெளியிட்டிருக்கிறார். ராஜாஜி, கல்கி, நாமக்கல் கவிஞர், ரசிகமணி போன்ற பெரியார்கள் இவரது பண்ணையிலிருந்து 'இதய ஒலி' எழுப்பினார்கள்.

காந்திஜியின் 'ஹரிஜன்' பத்திரிகையின் தமிழ்ப் பதிப்பை வெளியிட்ட பெருமையும் திரு அண்ணாமலைக்கே உரியது. காந்தியடிகளின் புகழ்ச்சிக்கும் பாராட்டுதலுக்கும் ஆளானவர்.

'குறுக்கெழுத்துப் போட்டி; காட்டன் மார்க்கெட்' போன்றவற்றைக் குழி தோண்டிப் புதைத்த புண்ணியத்தில் இவர் நடத்திய 'சங்கப் பலகை' முதல் இடம் பெறும்.

'திராவிடஸ்தான் வேண்டாம்!' என்ற கட்டுரையில் இவர் கூறும் கருத்துக்கள்: 'தமிழகம் செழிப்படைய வேண்டுமானால், அதற்குத் திராவிடஸ்தான் பரிகாரம் அல்ல. ஐக்கிய இந்தியாவின் அங்கமாகத் தமிழ் நாடு திகழவேண்டும். அந்தத் தமிழ் ராஜ்யத்திற்கு நிறைய அதிகாரம் வேண்டும்; தமிழருக்கு உரிமையான எல்லைகள் மீட்கப்படவேண்டும்; எல்லாத் தொழில்களும் தேசிய மயமாக்கப்பட வேண்டும்; எல்லாவற்றையும்விட முக்கியமாக, நல்ல யோக்கியர்களும் அறிவாளிகளும் ராஜ்யத்தை நடத்த வேண்டும். அப்போதுதான் தமிழகம் செழிப்படையும். ஆகவே, திராவிடஸ்தான் வேண்டாம்; தமிழரசே வேண்டும்.'

'உவமைக்கு ஒரு ராஜாஜி; அதே போல பழமொழிக்கு – ஹாஸ்ய வெடிக்கு ஒரு சின்ன அண்ணாமலை' என்ற நல்ல தீர்ப்பைத் தமிழ்நாட்டிலே பெற்றவர் திரு அண்ணாமலை.

'எல்லோருக்கும் பிரியமான அண்ணாமலைக்குச் சந்தோஷமும் உற்சாகமும் என்றைக்கும் குறையாமல் இருக்க வேண்டும் என்பது என் பிரார்த்தனை' என்று புதுதில்லியிலிருந்து ஆசீர்வாதம் செய்தவர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள்.

திரு சின்ன அண்ணாமலை அவர்களுக்கு 'உமா'வின் நன்றி உரியது. ★

அத்தியாயம் – 7

பிள்ளை பிழைத்தார்

தென்காசிக் குத்தாலிங்கம் பிள்ளையின் தங்கச்சியும், கொக்கர் குளம் சொக்கையாப் பிள்ளையின் வீட்டுக்காரியுமான கோமதி, கொக்கர்குளத்திலுள்ள தன் வீட்டில் ஐந்து வயது நிரம்பிய மகள் காந்திமதிக்குச் 'சடை' போட்டுக் கொண்டிருந்தாள். அவளுடைய தலை கொள்ளா முடியைச் சிவிப் பின்னல் போடும் பாடு பெரும் பாடாக இருக்கும் கோமதிக்கு. ஆனால் அன்றைக்கெல்லாம் அவள் தன் மகளுக்காக எப்பாடு படுவதையும் ஓர் இன்பமாகவே கருதி வந்தாள். அவளுடைய இல்வாழ்வு சூன்யமடைய வேண்டிய நிலையிலிருந்தபோது, அதற்குப் புது மலர்ச்சி அளிக்கத் தோன்றிய பூம்பாவையல்லவா அக் குழந்தை?

தான் வயிறு திறக்காதிருந்த காலத்தில், வயிறு திறப்போமா என்று ஏங்கிக் கொண்டிருந்த காலத்தில், கோமதி, தனக்கு அப்பாக்கியத்தை அருளுமாறு இடைவிடாது வேண்டிக் கொண்ட தெய்வங்கள் திருநெல்வேலியில் கோயில் கொண்டுள்ள நெல்லையப்பரும் காந்திமதியுந்தான். என்றாவது தனக்கு மக்கட்பேறு கிட்டினால், பிறக்கும் குழந்தை ஆணாயின் நெல்லையப்பன் என்றும், பெண்ணாயின் காந்திமதி என்றும் பெயரிடுவதாக அன்று அவள் 'வேண்டுதல்' செய்து கொண்டிருந்தாள். அதன்படியே தனது தலையாய மகளுக்கு அவள் திருநெல்வேலி அம்மனின் பெயரைச் சூட்டினாள். "என் ஆத்தா காந்திமதியே என் வவுத்திலே வந்து மகளாப் பொறந்திருக்குதா," என்று கோமதி தன் மகளை வாரியணைத்து உச்சிமோந்திருக்கையில், அவளுடைய உள்ளம் அத்தனையையும் நிறைத்திருப்பாள் காந்திமதி.

மகளைப் பற்றி கோமதி கொண்டிருந்த பெருமைக்கும், அவள் மீது வைத்திருந்த பாசத்துக்கும்,

பெற்றவள் என்பதும், 'தனது பிள்ளைக்கலி தீர்க்க வந்தவள்' என்பதும் மட்டுமே காரணமல்ல. காந்திமதியைப் போன்றதொரு எழிலுருவான குழந்தை எந்தத் தாய்க்கு எத்தனாவது குழந்தையாகப் பிறந்திருந்தாலும், அவளைப் பெற்ற மனம் பூரிப்படையாமல் இருக்க முடியாது. கவிகள் வர்ணிப்பதுபோல், 'ஜீவனுள்ள ஓவியம்' என்றோ, 'கல்லிலே வடித்தெடுத்த காவியம்' என்றோ, அல்லது எழிலை வர்ணிப்பதற்கு வேறு என்னென்ன சொற்றொடர்கள் உண்டோ. அவை அத்தனையையும் காந்திமதியின் அழகைப் புகழ ஒருங்கே உபயோகித்தாலும், அது மிகை-நவிர்ச்சியாகாது. "எட்டு வருசம் என்ன? எம்பது வருசம் காத்திருக்கலாமே, இப்பிடி ஒரு தங்கக் கட்டியெப் பெத்தெடுக்க," என்று கோமதி பெருமை மலரக் கூறிக் கொள்ளும்போது, "ஆம், நீ கொடுத்து வைத்தவள்தான்!" என்றே மற்றவர்களுக்குச் சொல்லத் தோன்றும். ஆனால், கோமதி உண்மையில் கொடுத்து வைத்தவள்தானா? இல்லையே!

அந்த வளரும் பொற்பாவை, படரும் பைங்கொடி, தன்னைச் சூழ்ந்த, தான் சுற்றப் போகும் விருட்சங்களுக்குப் பசுமை தரப் பிறக்கவில்லையே!

அதைப் பேதை கோமதியாகட்டும், அல்லது வேறு எவருமே ஆகட்டும், அன்று அறிந்திருக்கவில்லை. காந்திமதியின் வருங்காலத்தைக் கரை கண்டிருந்த குத்தாலிங்கம் பிள்ளையும் சொக்கையாப் பிள்ளையும், ஐந்து வருஷங்களுக்கு முன்பு ஆற்றங்கரைத் தோப்புச் சாவடியில் செய்து கொண்ட உறுதியை ஆயுள் உள்ளளவும் ஆட்டமுற விடுவதில்லை என்ற தீர்மானத்துடனேயே இருந்து வந்தனர். ஆகவே, காந்திமதியின் துன்பம் நிறைந்த வருங்காலத்தைப் பற்றிய ரகசியம் சிதம்பர ரகசியமாகவே இருந்து வந்தது. ஆனால்...?

பிரமன், விதி என்ற ஒன்றை வகுக்கும்போது, அது செல்ல வேண்டிய வழியையும் வகுத்துவிடுகின்றான். அப்புறம் அந்த விதி, தண்டவாளத்தின் மீது ஓடும் ரெயில் வண்டியைப் போல, நியமித்த பாதையிலேதான் செல்கிறது. தண்டவாளத்தின் மீது ஓடும் வண்டி நிற்க வேண்டிய கெடி (ரயில்வே ஸ்டேஷன்) களில் நின்று ஓட வேண்டிய இடங்களில் ஓடிக்கொண்டே தனது பிரயாண எல்லையை அடைவதேபோல், விதியும் தான் செல்லும் பாதையில் சாதிக்க வேண்டிய காரியங்களைச் சாதித்துக்கொண்டே தனது குறிக்கோளை நோக்கி ஓடுகிறது.

அவ்வாறு விதியின் பாதையில் அது நின்று சாதிக்க வேண்டிய முதல் காரியமாக ஒரு சம்பவம் காந்திமதிக்கு ஐந்தாவது வயது நடந்து கொண்டிருந்த போது நிகழ்ந்தது.

திடகாத்திரமாகத்தான் இருந்தார் குத்தாலிங்கம்பிள்ளை. ஆனால் நிர்மலமாயிருக்கும் வானத்தை மேகங்கள் சூழ்ந்து மழையாகக் கொட்டித் தீர்த்து விடுவதில்லையா? இனிய தென்றலாக வீசிக்கொண்டிருக்கும் காற்று அரை நொடியில் புயலாக மாறி அழிக்கும் தொழிலில் இறங்கி விடுவதில்லையா? இந்த உலகில் எதுவும் நிலையில்லை. எதையும் நிலையென்று நம்பிக் காரியங்கள் செய்வதைப் போல் அசட்டுத்தனமும் வேறில்லை. இது சுழன்று வரும் உலகம். எனவே, இதிலுள்ள பொருள்கள், இதைச் சூழ்ந்திருக்கும் இயற்கை எல்லாமே, ராட்டை சுழலும் போது அதில் சுற்றப் பட்டிருக்கும் கயிறும் சுழலுவதுபோல் சுழன்றே ஆக வேண்டும். மனிதரின் உடல் நிலையும் அப்படித்தான், எதிர்பாராமல் திடீரென்று சுழன்று, எவரும் எண்ணியே இராத முடிவை எட்டிவிடும்.

அப்பொழுது குற்றாலத்தில் 'சீஸன்' சமயம். ஒவ்வொரு வருஷமும் சீஸன் சமயத்தில் வரும் ஆடி

அமாவாசையன்று தவருமல் குற்ருல ஸ்னனம் செய்து வருவது பிள்ளையின் வழக்கம். இவ் வருஷமும் அந்தப் புண்ணிய தினத்தன்று அருவி ஸ்னனமும், குற்ருல நாதரின் தரிசனமும் செய்து வரப் போனுர் அவர்.

அன்று மழையென்ருல் சொல்லி முடியாத மழை. ஆடி அமாவாசையன்று குற்ருலத்தில் கூட்டத்துக்கோ கேட்கவே வேண்டாம். பிள்ளை சொந்த வண்டியில்தான் போயிருந்தார். இருந்தாலும், மகாராஜா பங்களாவுற்கு அப்பால் வண்டி போக முடியவில்லை; அத்தனை கும்பல். வண்டியை அங்கேயே ஒரு மரத்தடியில் நிறுத்தி விட்டு மீதியிருந்த ஒரு மைல் தூரமும் நடந்தே சென்ருர் பிள்ளை. ஸ்னனம், தரிசனம் எல்லாம் அன்று கொட்டுகிற மழையில் தான்.

மாலையில் வீடு திரும்பிய பிறகு, பிள்ளைக்கு நல்ல காய்ச்சல் வந்து விட்டது. ஏதோ கைமருந்தைச் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டார். அன்று படுத்தவர்தான். ஒரு மாதமாயிற்று; எழுந்திருக்கவேயில்லை. காய்ச்சல் ஏறுவதும் இறங்குவதுமாகக் கண்ணும்பூச்சி விளையாடிக் கொண்டிருந்தது. நாட்டு வைத்தியர் போதாதென்று சர்க்கார் ஆஸ்பத்திரி டாக்டரும் வந்து என்னென்னவெல்லாமோ மருந்துகளும், இஞ்ஜெக்ஷன்களும் பிரயோகித்துப் பார்த்து விட்டார். நாளுக்கு நாள் பிள்ளையின் நிலை மோசமாகிக் கொண்டு வந்ததே ஒழிய, அவர் குணமடையவில்லை.

அழகம்மை பயந்து விட்டாள். கோமதிக்கு விஷயம் தெரிந்தால் கவலைப் படுவாளேயென்று பிள்ளை காய்ச்சலாகக் கிடக்கும் விவரத்தைக் கொக்கர் குளத்துக்குச் சொல்லி அனுப்பவில்லை அவள். ஆனல் விளையாட்டுப் போல ஒரு மாதமாகியும் கணவர் குணமடையவில்லை என்ருனதும், அவள் மேலத் தெருச் செல்லம் பிள்ளையை அனுப்பி, கொக்கர் குளத்திலிருந்து கோமதியையும் சொக்கையாப் பிள்ளையையும் கூட்டி வரச் செய்தாள்.

சொக்கையாப் பிள்ளை மைத்துனரின் உடல் நிலையைப் பார்த்து மனம் கலங்கி விட்டார். அவர் உடனே ஸ்பெஷல் கார் வைத்துக் கொண்டுபோய், திருநெல்வேலியிலிருந்து பெரிய டாக்டர் ஒருவரை அழைத்துக் கொண்டு வந்தார்.

இந்தக் கட்டத்தில் விதி தனது அடுத்த கைங்கரியமாக இன்னெரு சின்ன விளையாட்டு விளையாடிற்று.

நெடுநேரம் பிள்ளையைப் பரிசோதித்த பெரிய டாக்டர், 'ஸ்டெதஸ்கோப்' பை மடித்துக் கோட்டுப் பைக்குள் வைத்துக் கொண்டு, "மிஸ்டர் பிள்ளை! இப்படி வாருங்கள் ஒரு நிமிஷம்," என்று சொக்கையாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு வீட்டு வெளித் திண்ணைக்கு வந்தார்.

"கேஸ் கொஞ்சம் ஸீரியஸ்ஸாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் பயப்பட ஒன்றுஇல்லை. நீங்கள் 'சாதாரன ஜுரந்தான்; ஒரு மாதமாக இழுக்கடித்துக் கொண்டிருக்கிறது' என்று சொன்னதால் நான் சாதாரண ஜுரத்துக்கான மருந்துகளையே கொண்டுவந்தேன். இது 'கிரானிக் கேஸ்'. ஆகவே இந்த மருந்துகள் பயன்படாது. நீங்கள் மறுபடியும் என்னேடு திருநெல்வேலிக்கு வர வேண்டும். ஸ்பெஷல் இன்ஜெக்ஷன் ஒன்றில் ஆறு டியூபுகள் தருகிறேன். நாளையிலிருந்து அந்த இன்ஜெக்ஷனைக் காலையிலும் மாலையிலும் ஒவ்வொன்று விதம் உள்ளூர் டாக்டரைக் கொண்டே போடச் செய்யுங்கள்; ஜுரம் இறங்கி விடும்," என்று கூறினுர்.

இதை அந்த டாக்டர் குத்தாலிங்கம் பிள்ளையின் முன்பே சொல்லியிருக்கக் கூடாதா? ஆனல், முப்பது மைல்களுக்கு அப்பாலிருந்து ஸ்பெஷலாகக் கூட்டிவரப்பட்ட தம்மிடம் நோயாளிக்குக் கொடுக்கத் தக்க மருந்தில்லை என்பதை அங்கே கூடி

யிருந்தவர்கள் முன் சொல்ல வெட்கியோ, என்னவோ, அவர் சொக்கையாப் பிள்ளையைத் தனியே கூட்டி வந்து அதைச் சொன்னார். ஆனால். இதன் மூலம் விதி தன் காரியத்தை எவ்வளவு எளிதாகச் சாதித்துக் கொண்டு விட்டது ?

நோயாளியைப் பரிசோதித்த டாக்டர் உடனடியாக மருந்தைக் கொடுக்காமலும், நோயைப்பற்றி எதுவும் கூறாமலும் வீட்டுக்கு உரியவரைத் தனியே கூட்டிச் சென்று பேசினால், எல்லோரும் என்ன நினைப்பார்கள்? 'இது கைவிடப்பட்ட கேஸ்!' என்று தானே கருதுவார்கள்? அவ்வாறுதான் அங்கு கூடியிருந்த அழகம்மை, கோமதி, செல்லம் பிள்ளை முதலியோர் நினைத்து உள்ளம் உடைந்து போயினர். இருந்தாலும், சில நிமிஷங்களுக்குப் பிறகு, டாக்டரை வாசலில் நின்ற காரில் உட்கார்த்திவிட்டு, 'உடுப்பு'ப் போட்டுக் கொள்ள உள்ளே வந்த சொக்கையாப் பிள்ளை விவரத்தை அறிவித்த போது, அவர்களுக்குப் போன உயிர் திரும்பி வந்து விட்டது. ஆனால் நோயாளியான குத்தாலிங்கம் பிள்ளைக்கு மாத்திரம் சமாதானம் ஏற்படவில்லை. தமக்குக் காலம் கிட்டி விட்டதாகவே அவர் கருதிவிட்டார்!

வேதாந்த மனப்பான்மையில் ஊறிய பிள்ளை, சாவைக் கண்டு அஞ்சவில்லை. ஆனால், சாகப் போகிறோம் என்பது தெரிந்த பின்னர், சாகுமுன் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை அவர் செய்ய வேண்டாமா? ஆகவே அதுபற்றிய சிந்தனையில் அவரது மனம் ஈடுபட்டது.

முதலில் அவர் சிந்தனையில் 'கு'ணா விலாசம் உண்டியல் கடையின் வருங்காலம் வந்து நின்றது. ஆனால் கடமையைப் பற்றி அவர் அவ்வளவாகக் கவலைப்பட ஏதுவும் இருக்கவில்லை. மாறி வரும் காலப்

போக்கை ஒட்டி, தமக்குப் பின் தமது மக்கள் அதைக் கட்டிக் கொண்டு அழ வேண்டாமென்று அவர் ஏற்கனவே தீர்மானித்திருந்தார். அதனால்தான் அவர் மூத்த மகன் நெல்லையப்பனைத் தங்கள் வம்ச வழக்கப்படி பதினைந்தாவது வயதில் படிப்பை ஏட்டைக்கட்டச் செய்துவிட்டுக் கடையில் இழுத்துப் போட்டுக் கொள்ளாமல், தொடர்ந்து படிக்கவிட்டிருந்தார். அதோடு கொடுக்கல்–வாங்கலையும் அவ்வளவாக விரிக்காமல், சுருக்கிக் கொண்டே வந்தார். நல்லவேளையாக தற்போது கடன்-நிலுவை என்று பெருந்தொகை எதுவும் வெளியே நிற்கவில்லை. அவர் கடையில் பணம் போட்டிருந்தவர்கள்தான் நிறைய இருந்தார்கள். அந்தப் பணங்கள் எல்லாம் அப்படியே ரொக்கமாகத்திருநெல்வேலி இம்பீரியல் பாங்கில், பிள்ளையின் இதர ரொக்கத்தோடு இருந்தன. ஆகவே, அவர் இறந்த உடனேயே கடையை மூடிவிட விரும்பினாலும், கணக்கப்பிள்ளையும், செல்லம் பிள்ளையும் செல்லுகளைக் கணக்காகத் தீர்த்துக் கடையைக் கட்டிவிடுவார்கள்.



சொத்துக்களைப் பராமரிக்கும் விஷயத்திலும்பிள்ளையவர்களுக்கு அதிகக் கவலை இருக்கவில்லை. அவருடைய மூத்த மகனான நெல்லையப்பன் இப்பொழுது சட்டப்படி மேஜர். நில – புலன்கள், தோப்பு – துறவுகள், இவற்றைப் பற்றி அவனுக்கு அதிகமாக எதுவும் தெரியாதெனினும், மச்சினர் சொக்கையாப்பிள்ளையும், மேலத்தெருச் செல்லம் பிள்ளையும் இருக்கும்போது, அவர்கள் அவனைக் கைவிட்டுவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை பிள்ளைக்கு இருந்தது.

ஆயிற்று, கடை விஷயம் தீர்ந்தது. கடைசியாகக் குடும்பம். குடும்பத்தைப்பற்றி நினைத்துப் பார்த்தபோது, பிள்ளைக்கு, அங்கும் தாம் ஏற்பாடு செய்துவிட்டுப் போக வேண்டியது எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. சொத்து அனைத்தும் பூர்விக சொத்து. அண்ணன் தம்பிகள் விரும்பினால், தேவையானபோது பாகம் பிரித்துக் கொள்ளலாம். இளையவன் திருமலை மைனர். ஆகவே மூத்தவன் விரும்பினாலும், சொத்துக்களை விற்கவோ, கொள்ளவோ முடியாது. சட்டப்படி அது செல்லுபடியும் ஆகாது. மேலும் நெல்லையப்பனின் குணம் அவருக்கு நன்றாகத் தெரியும். அவன் ஒருபோதும் அடாபிடியாகப் போகவும் மாட்டான்; தம்பியையோ, தாயையோ, மோசம் செய்யவும் மாட்டான்.

"அப்படியானால், நான் நிம்மதியாகச் சாகலாம் அல்லவா?" என்று பிள்ளை, தம் நெஞ்சைத் தாமே கேட்டுக் கொண்டார்.

"ஆம், சாகலாம்; ஆனால்....?"

பிள்ளைக்குச் சட்டென்று இன்னொரு விஷயம் நினைவுக்கு வந்தது. நல்லவேளை! இப்பொழுதாவது அதன் நினைவு தோன்றிற்றே!

அது வேறொன்றுமல்ல; காந்திமதியின் வருங்கால நினைவுதான்!

ஆறு வருஷங்களுக்கு முன்பு மேலகரம் ஜோசியர் கூறியவை அனைத்தும் இப்பொழுது பிள்ளையின் மனத்தில் அலை அலையாக

எழுந்து வந்தன. அவற்றை இன்று தாம் எதிர்பாராது சாகப்போகும் நிலையோடு இணைத்துப் பார்த்த போது, அவர் மனத்தில் புதிய பீதி ஒன்று புகுந்து கொண்டது. ஆம், காந்திமதி தமது மக்கள் இருவரில் ஒருவன் உயிருக்கு யமனாகி விடுவாளோ என்று பயந்து விட்டார் அவர்!

ஆனால், அதற்குத்தான் அவர்கள் – மைத்துனரும் மைத்துனரும் – ஏற்கனவே ரகசிய ஏற்பாடு ஒன்று செய்து வைத்திருந்தனரே? நெல்லையப்பன், திருமலை, இவர்கள் ஜாதகங்களோடு பொருந்தாத ஜாதகம் ஒன்றைக் காந்திமதிக்குத் தயாரித்து வைத்திருந்தனரே? உண்மைதான்; ஜாதகம் என்னவோ இருந்தது. ஆனால், அது ஊராரின் கண்களைத் துடைக்கவும், மைத்துனர் சொக்கையாப் பிள்ளையின் கண்களைத் துடைக்கவும் மாத்திரமே தயாரிக்கப் பட்டது என்பதைக் குத்தாலிங்கம் பிள்ளையைத் தவிர வேறு எவருமே அறிய மாட்டார்கள். ஏனென்றால், அந்த ஜாதகத்தையும் மிஞ்சிக்கொன்டு, முறைப் பெண்ணான காந்திமதியை, முறை மாப்பிள்ளையாகிய தமது மக்கள் இருவருள் ஒருவருக்குக் கட்டி வைத்துவிட வேண்டும்; அம் முயற்சியில் அவள் 'அறுத்தாலும்' அவளைக் கட்டிக் கொள்ள முனைகிற நெல்லையப்பனோ திருமலையோ மரித்தாலும் தமது மகளுக்குப் பயன் உண்டு என்று துணியும் அளவுக்கு சொக்கையாப் பிள்ளை வந்துவிடும் ஒரு நிலை ஏற்படும் என்பது குத்தாலிங்கம் பிள்ளைக்கு மாத்திரமே தெரியும். தாம் உயிரோடிருந்தால் அது நடக்காது. ஆனால் தனக்குத்தான் எதிர்பாராதபடி காலனின் அழைப்பு வந்து விட்டதே!

ஆகவே, பிள்ளை சடுதியில் ஒரு முடிவுக்கு வந்தார். எப்படி காந்திமதியின் பிற்கால நலனை ஒட்டி அவள் ஒரு துடைகாலி என்பதை அவர் மறைத்து வந்தாரோ, அப்படியே தமது சொந்த மக்களின் பிற்கால நலனை ஒட்டி அவளுடைய தலைவிதியைத் தம் மனையிடம் மாத்திரம் வெளியிட்டு எச்சரிக்க வேண்டும் என்பதுவே அம்முடிவாகும்.

அன்றிரவு மணி பதினொன்றிருக்கும். வெளியே மழை தூறிக் கொண்டே இருந்தது. மறுநாள் அமாவாசையாதலால் இருள் அதன் வருகைக்குக் கட்டியம் கூறிக் கொண்டிருந்தது. தென்காசி உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. மழைப்பூச்சிகளின் ரீங்காரத்தைத் தவிர தெருவெங்கும் ஒரே அமைதி.

பிள்ளை கூடத்தில் கட்டிலில் படுத்திருந்தார். அவருடைய கட்டிலின் அருகில் பாயை விரித்துக் கொண்டு படுத்திருந்தாள் அழகம்மை. பட்டகசாலையில் கோமதி தன் மகளுடனும், நெல்லையப்பன் மற்றும் திருமலையுடனும் தூங்கிக் கொண்டிருந்தாள். கூடத்து 'மாடப்புறை'யில் குருவி விளக்கு ஒன்று மெல்லிய ஒளியைப் பரப்பியவாறு எரிந்துகொண்டிருந்தது.

நோயின் கொடுமையால் பிள்ளை அயர்ந்து கிடந்தார். அவர் தூங்கவில்லை; இருந்தாலும் கண்கள் மூடியிருந்தன. தூரத்தில், ரெயில்வே ஸ்டேஷனில், திருவனந்தபுரம் செல்லும் பதினோறு மணி பாஸஞ்சரின் ஊதல் அமைதியான அந்த இரவில் ஒரு மைலுக்கு அப்பாலிருந்த பிள்ளையின் வீட்டுச் சுவரில் வந்து எதிரொலித்தது.

குத்தாலிங்கம் பிள்ளை விழித்துக் கொண்டார். அவர் கண்கள் அழகம்மையின் பால் திரும்பின. ''ஏளா,'' என்று மெல்லிய குரலில் அவளை விளித்தார்.

அழகம்மை நல்ல நாளிலே அயர்ந்து தூங்கக் கூடியவளில்லை. அதிலும் இழுப்பு நோய் வந்த பிறகு, கிட்டத்தட்ட பத்து வருஷ காலமாக அவள் தன்னை மறந்து தூங்கியதேயில்லை. இப்பொழுதோ, ஒரு மாதமாக நோயாகக் கிடக்கும் கணவரைப் பற்றிய கவலை வேறு. உடல் ஓய்வை

வேண்டினல்கூட உள்ளம் உறக்கத்தை நாடுமா ?

பிள்ளையின் முதல் குரலிலே அவள் விழித்துக்கொண்டு, ''என்ன செய்யிது ஒங்களுக்கு ?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்தாள்.

''மொள்ளமாப் பேசுளா. இப்பிடி வா, சொல்லுதேன்,'' என்ருர் பிள்ளை.

அவருடைய அந்த நள்ளிரவு அழைப்பு அழகம்மையின் மனத்தில் விபரீதக் கற்பனையை எழுப்பிற்று. ஒருகால் புலம்புகிருரோ என்று அவள் திகிலடைந்தாள். ஆகவே மீண்டும், ''ஒங்களுக்கு என்ன செய்யிது? கோமுவெ எழுப்பட்டுமா ?'' என்ருள்.

''எனக்கு ஒண்ணும் செய்யலளா; இப்பிடி வந்து இரியேன், சொல்லுதேன்.''

''ஐயோ! நீங்க என்ன இப்பிடிப் பேசுதிக ? ஒங்க ஒடலு இருக்குத இருப்புக்கு நீங்க நல்லதனமாப் பொளச்சு எளுந்திரிக்கணுமேன்னு...''

பிள்ளை அவள் சந்தேகத்தைப் புரிந்துகொண்டு சிரித்தார். பிறகு, ''மூதி! நெனப்புத்தான் போகுதே ஒனக்கு. இங்கிட்டு வாளா, ஒரு சங்கதி ரகசியமாச் சொல்லணுமின்னு, இவ என்னமோ நெனெச்சுக்கிட்டு...நல்லாத்தான் இருக்குதுளா !'' என்ருர்.

அழகம்மை தயங்கிக்கொண்டே அருகில் வந்து நின்ருள்.

''கோமு எங்கனே படுத்திருக்கா ?'' என்று கேட்டார் பிள்ளை.

''பட்டகசாலேலே. ஏன் ?''

''புள்ளைக ?''

''அதுகளும் அங்கனெதான் ஒறங்கிக்கிட்டிருக்குதுக.''

''சதி, அப்பிடின்னு போயி அந்தக் கதவை அடைச்சுக்கிட்டு வா....''

அழகம்மைக்கு மீண்டும் சந்தேகம் தட்டிற்று. ''வேண்டாம்; அதுக அடிச்சுப் போட்டாப்பிலே ஒறங்கிக்கிட்டிருக்குதுக. நீங்க சொல்லுங்க,'' என்ருள்.

பிள்ளை அவளை வற்புறுத்தவில்லை. கூடியவரையில் சட்டுப்புட்டென்று அந்த முக்கியமான தகவலை மாத்திரம் அறிவித்துவிட விரும்பினர். ஆகவே சொன்னர் : ''அஞ்சு வருசமா என்னெனப் போட்டு அரிச்சுக்கிட்டிருந்தியே, 'ஏன் ஒரு மாரிதியா இருக்கீக, இருக்கீக'ன்னு, அந்த 'ஒரு மாரிதியா' இருந்த விசயத்தெத்தான் இப்பொம் ஒங்கிட்டே சொல்லப் போறேன். மூதி! இங்கனே பக்கத்திலே வந்துதான் இரியேன் ; நான் என்ன ஒன்னெக் கடிச்சா திண்ணுடப் போறேன் ?''

அழகம்மையின் மனத்திலிருந்து வெளியேருமல் சண்டித்தனம் பண்ணிக்கொண்டிருந்த சந்தேகம் பிள்ளையின் இந்த வார்த்தைகளைக் கேட்ட பின்னர்தான் வெளியேறி ஓடிற்று. அவள் கட்டிலில் வந்து அமர்ந்துகொண்டு, பிள்ளையின் மீதிருந்த போர்வையை இழுத்து அவர் உடலைச் சரியாக மூடிவிட்டாள். பிறகு, ''அஞ்சு வருசமாப் பொத்திப் பொத்தி வச்சுக்கிட்டிருந்தீக. இப்பொம் நீங்க இப்பிடி எளுந்திரிக்காமக் கெடக்கும் போதுதான் அதெச் சொல்லுதுக்குப் பொளுது பாத்தீக போலிருக்குது !'' என்ருள்.

''ஆமாளா, மனுசங்க பொளப்பு என்னன்னு இப்பொந்தான் தெரிஞ்சுக்கிட்டேன். பெரியவங்க சொல்லுதுபோலே, இன்னிக்கு இருக்கிறவங்க நாளைக்கு இருப்பாங்கன்னு நிச்சியமில்லாம இருக்குதபோது....''

அழகம்மை அவர் பேச்சை வெட்டினள்: ''நீங்க இப்பிடியெல்லாம் போசாதீங்க. ஒங்களுக்கு ஒண்ணும் ஆயிடாதுன்னுதான் பெரிய டாக்டரு சொல்லிட்டாராமில்லா ?''

அவளுடைய நம்பிக்கைக்கு மாருக, தாம் பிழைக்கமாட்டோம் என்பதைச் சொல்லி மனைவியைக்

கவலைக்குள்ளாக்க பிள்ளை மனங் கொள்ளவில்லை. ஆகவே, "அதுக் காக இல்லேலா. நான் அன்னைக்கே ஒங்கிட்டே சொன்னேனில்லே. 'எனக்கா எப்பொம் அதெ ஒங்கிட்டே சொல்லணுமின்னு தோணுதோ, அப்பொந் தான் சொல்லுவேன்'னு. இது இன்னிக்குத்தான் தோணிச்சு; சொல்லுதேன்." என்றார்.

"சதி, அப்பொம் சட்டுப்புட்டுனச் சொல்லிடுங்க. இப்பிடிச் சும்மா வெட்டிப் பேச்சுப் பேசி ஏன் அலட்டிக்கிடணும்?"

"ஏளா! நம்ம காந்தி இருக்குதில்லே, அது போன எடத்தையெல்லாம் தொடைச்சுப் போடுமின்னும், அதெ எந்தப் பய கட்டிக்கிடணுமின்னு வாரானே, அந்தப் பய, அதுங் கழுத்திலே தாலியைப் போடுதுக்கு முன்னமேயே பட்டுன்னுப் போயுடுவான்னும், மேலகரம் சோசியரு. சோளி உருட்டிப் பார்த்து நிச்சியமாச் சொல்லியிருக்காரு. அதுனாலே, நாளைக்கு நான் இருந்தாலும், போயிட்டாலும் மொறைப் பொண்ணுச்சேன்னு அதெ நம்ம பயக எவனுக்கும் கட்டி வச்சிடணுமின்னு மனசிலே கூட நெனைச்சுடாதே!"

ஒரு தேள் கொட்டினாலே மனிதர் 'ஓ' வென்று அலறுவார்கள்; ஆயிரந் தேள்கள் ஒருவரை

ஏடெடுத்தேன் பாட்டெழுத: 1

நிலவும் நினைவும்

நா. புகழேந்தி

கொத்துமுல்லை மலர்தொடுத்துக்
குழல் முடித்தாளாம்; அன்னை
குழல் முடித்தாளம்!
கோபங்கொண்டே எடுத்துவிண்ணில்
எறிந்து விட்டாளாம்; — தங்கை
எறிந்து விட்டாளாம்!
தொத்திக்கொண்டே கொத்துமுல்லை
நிலவாய் மாறிற்றும்; — வெண்
நிலவாய் மாறிற்றும்!
சிதறிவிழுந்த உதிரிப்பூக்கள்
உடுக்க ளாயிற்றும்; — மின்னும்
உடுக்க ளாயிற்றும்!

கொதிக்கும் வெயிலை மறைக்கவெள்ளைக்
குடையைத் தந்தாராம்; — அப்பா
குடையைத் தந்தாராம்!
கொண்டுசெல்லக் காற்றுவந்து
பிடுங்கிப் போனதாம் — அந்தோ!
பிடுங்கிப் போனதாம்!
குதித்துக்காற்று பிடுங்கிச் சென்ற
குடைதான் விண்மேலே; — பட்டுக்
குடைதான் விண்மேலே!
கொள்க இன்பம், கொள்க என்னும்
நிலவாய் மாறிற்றும்;—வெண்
நிலவாய் மாறிற்றும்!

* * * * * *

கட்டிவெண்ணெய் கையில்வைத்துத்
தின்ன நினைத்தானும்; — தம்பி
தின்ன நினைத்தானும்!
கண்டுவிட்டாள் அன்னையென்று
விட்டெறிந் தானும்; — பயந்து
விட்டெறிந் தானும்!
ஒட்டிக்கொண்ட கட்டிவெண்ணெய்
நிலவாய் மாறிற்றும்; — வெண்
நிலவாய் மாறிற்றும்!
ஒன்றுக் கொன்றாய் சிதறி விழுந்து
உடுக்க ளாயிற்றும்; — மின்னும்
உடுக்க ளாயிற்றும்!

கேடயத்தைக் கைப்பிடித்தே
சண்டை செய்தாராம்; — முன்பு
சண்டை செய்தாராம்!
கேட்டைத்தரும் போரிதென்றே
வாட்ட முற்றாராம்; — மன
வாட்ட முற்றாராம்!
நாடமாட்டேன் இனிக் களத்தை
என நவின்றாராம் — அகிம்சை
என நவின்றாராம்!
நமக்குவேலை தீர்ந்ததென்றே
நிலவாய் மாறிற்றும்; — கேடயம்
நிலவாய் மாறிற்றும்!

ஒருங்கே கொட்டினால் அவர் எப்படி அலறுவார்? அப்படிப்பட்ட அலறலாகத்தான் வெளி வந்தது, அழகம்மையின் அடி நெஞ்சத்திலிருந்து, ''என்ன? நம்ம காந்தியா?'' என்ற ஓலமிட்ட சொல்லடுக்கு.

பிள்ளை காந்திமதியைப் பற்றிக் குறிப்பிட்டபோது, ''நம்மகாந்தி'' என்றுதான் கூறினார். அழகம்மையும் அவ்வாறுதான் குறிப்பிட்டாள். ஆனால் அந்த இரு 'நம்ம' களுக்கும் இடையே எத்தனை வித்தியாசம் இருந்தது? பிள்ளையின் 'நம்ம' வெறும் இலக்கணப் பன்மையாக வந்த சொல். அதாவது, 'நமது குடும்பத்தைச் சார்ந்த', 'நமக்குள் ஒருத்தியான' என்ற பொருளில்தான் அவர் அச்சொல்லைப் பிரயோகித்தார். ஆனால், அழகம்மையின் 'நம்ம' வில் பன்மையில்லை. அச்சொல்லில் அவள் புகுத்திய அழுத்தம் அதை ஒருமையாக்கி விட்டது— 'என்' என்ற பொருள்படும்படி!

ஆம், அழகம்மை, காந்திமதியைத் தன் நாத்தியின் மகளாகக் கருதவேயில்லை. அவள் பிறந்த நிமிஷந் தொட்டுத் தனது மூத்த மகன் நெல்லையப்பனின் மனைவியாகத்தான் கருதி வந்தாள். மாமியாளுக்கும், மருமகள் ஒரு மகள் தான் என்றபோதில், அழகம்மை காந்திமதியைத் தன் சொந்த மகளாகப் பாவித்ததில் வியப்பு என்ன இருக்கிறது? ஆகவேதான், தன் மகளின் வருங்காலம் இருள் சூழ்ந்தது என்பதைக் கேட்ட தாய் துடிப்பதைப்போல் அவள் உள்ளம் துடித்தது. அப்படியானால், அவள் இதுநாள் வரையில் கண்டு வந்த அந்தக் கனவு வெறும் அற்பன் கண்ட கனவுதானா? அழகம்மையின் உள்ளத்திலே ஊறியிருந்த உறுதியானது, தனது கணவர் கூறுவது உண்மையாக இருக்குமா

என்றுகூட அவளைச் சந்தேகிக்கச் செய்தது. ஆகையால், அவள் தொடர்ந்து, "மெய்யாத்தான் சொல்லுதியளா?" என்ற ஐயம் தோய்ந்த கேள்வியை உதிர்த்தாள்.

பிள்ளை, மேலகரம் ஜோசியர் சொன்ன பலன்கள் எல்லாவற்றையும் அவளுக்கு விவரமாகக் கூறினர். கொக்கர் குளம் சுப்பையாப் பிள்ளை ஒரு மாதத்தில் இறந்து விடுவார் என்று அவர் அறிவித்தது; அது அப்படியே பலித்தது; அவர் இறந்த பிறகுதான் கோமதி கருத்தரிப்பாள் என்று அவர் கூறியது; அதன் படியே அவள் கருத்தரித்தது; கோமதிக்குப் பெண்தான் பிறக்கும் என்று அவர் சொன்னது; அதுவும் பலித்திருப்பது—எல்லாவற்றையும் அவளுக்கு விளக்கினர். பிறகு, இப்படி அவர் கூறிய பலன்கள் ஒன்றுவிடாமல் சரியாக நடந்து வந்திருப்பதால், காந்திமதியின் வருங்காலத்தைப் பற்றிய அவருடைய ஜோசியமும் பலித்துத்தான் ஆகவேண்டும் என்றே தாங்கள் நினைக்க வேண்டியிருக்கிறது என்றும் விளக்கினர்.

இவ்வளவையும் கேட்ட பிறகு, அழகம்மையின் நம்பிக்கையில் பெரும்பகுதி கரைந்து விட்டது. இருந்தாலும், அற்ப நம்பிக்கையில் ஊசலாடிக் கொண்டிருந்த அவளுடைய ஆசை, "சாமி இருபை வச்சு, இதெ மட்டும் பலிக்காமப் பண்ணிப் போட்டாரின்னு?" என்ற கேள்வியாக வெளிப் பட்டது.

பிள்ளை சொன்னர்: "பண்ணிட்டா நல்லதுதான். ஆனு, அவரு பண்ணிட்டார், பண்ணலேங்கற விசயத்தைத் தெரிஞ்சுக்கிடுதுக்கு நம்ம புள்ளைகளிலே ஒண்ணேடே உசிரையில்லா மொய்யெளுதிப் பாக்க வேண்டியிருக்குது ....?"

அழகம்மையின் கடைசி ஆசையிலும் மண்ணடித்து விட்டது, பிள்ளை எடுத்துக் காட்டிய இந்த விவரம். ஆமாம். எந்தத் தாய்தான் தன் மகளை விஷப் பரீட்சையில் ஈடுபடுத்தத் துணிவாள்? ஐயோ! கடைசியில், தனக்குப் பெண்ணில்லாக் குறையைத் தீர்க்க வந்த பொற்குவியல் என்று அவள் உள்ளம் களித்திருந்த காந்திமதியின் தலைவிதி இத்தனை விபரீதமாகவா எழுதப்பட்டிருக்கிறது? அவளுக்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. மண்ணுந்தையாக உட்கார்ந்துவிட்டாள்.

அவளுடைய மௌனத்தைத் தவருக அர்த்தம் செய்துகொண்டார் பிள்ளை. மனைவிக்கு, இத்தனைக்குப் பிறகும், காந்திமதியை மருமகளாக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆசை விடவில்லை என்று அவர் நினைத்தார். ஆனுல் அவருக்கு மாத்திரம் அந்த ஆசை இல்லையா? ஏன்? தமது மனத்தின் ஒரு மூலையில்கூட அதற்கு இன்னும் இடமளித்திருப்பது, இச்சமயம் பிள்ளையின் நினைவில் எழுந்தது. அன்று மேலகரம் ஜோசியரிடம், கோமதிக்கு குழந்தை பிறக்குமா என்பதைக்கேட்கப்போனபோது, அவர் காந்திமதியின் பிறப்பையொட்டி அக்குடும்பத்துக்கு ஏற்படப்போகும் வேறு சில துயர நிகழ்ச்சிகளையும் விவரித்திருந்தார். ஜோசியரின் வாக்குப்படி அவை நிகழ இன்னும் சிறிது காலமிருந்தது. ஒருகால் அவைகளில் ஒன்றிரண்டாவது நிகழாமல் போனுல், அதைப்போலவே, காந்திமதியைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறவன் இறந்துவிடுவான் என்று அவர் கூறியிருந்ததும் நிகழாமல் போகலாம் என்று கருத இடமேற்படும் என்றும், அப்பொழுது மீண்டும் ஒரு தடவை அதே ஜோசியரையோ, அல்லது அவருக்கு இணையான வேறு யாராவது ஒரு ஜோசியரையோ கலந்து ஆலோசித்து, காந்திமதியைத் தமது மருமகளாக்கிக் கொள்ளலாமா என்பதைக் கண்டறிய வேண்டும் என்று அவர் நினைத்திருந்தார். ஆனுல், இப்பொழுதுதான் சாவு தம்மை

அழைத்துப் போக வீட்டுத் திண்ணையில் காத்திருப்பதாகப் பிள்ளை கருதிவிட்டாரே...? ஆகவே, தமது மனத்திலிருக்கும் இந்தத் திட்டத்தையும் மனைவிக்குக் கூறிவிட அவர் துணிந்தார். அழகம்மையைத் தேற்றும் தோரணையில், அவர் பேச்சை ஆரம்பித்தார்: ''இந்தப் பொம்புள்ளைங்களே இப்பிடித்தான்; மூதிகளுக்குத் தன்னாலும் தெரியாது; பெறத்தியான் சொன்னாலும் தெரியாது. ஏளா! நான் என்ன அந்தக் கொளந்தை மேலே வர்மம் வச்சு இப்பிடியெல்லாம் சொல்லுதென்னுட்டில்லா நீ நெனெச்சிட்டே போலிருக்கு? அன்னிக்கு சோசியரு இவ்வளவுதான் சொன்னாருன்னு நெனெச்சுக்கிடாதே. இன்னங்கூட நாலஞ்சு முக்கியமான விசயங்களைச் சொன்னாரு. அதுகளெல்லாம் இனிமேத்தான் நடக்கப் போகுது. நான் இருந்தாலும் சரி; நீ இருந்தாலும் சரி; அவரு சொன்ன அந்த விசயங்களும் அப்பிடியே நடந்திடிச்சுன்னா, அவரு காந்தியின் கல்யாண விசயமாச் சொன்னதும் பலிக்கத்தான் செய்யுமின்னு நிச்சயமா நம்பிக்கிடலாம். அதினாலே, அதுகளையும் சொல்லிடுதேன்; பெறகு நீயே பாத்து, ஒனக்குச் சரின்னு பட்டிச்சின்னா, காந்தியைக் கட்டிக்கிடற விசயத்தை முடிவு கட்டிக்கிடு.''

பிறகு, பிள்ளை மனைவியைத் தம் முகத்தருகில் குனியச் செய்து அந்த விஷயங்களை ரகசியமாக ஓதினார். அவை ஒவ்வொன்றையும் கேட்டபோது, அழகம்மை அதிர்ச்சியால் துடித்துப்போனாள். சே! என்ன என்ன பயங்கரங்களெல்லாம் அவர்கள் குடும்பத்தில் நிகழப் போகின்றன? ''நெல்லையப்பா! காந்திமதியாத்தா! ஒங்களைக் கும்பிட்டுக் கும்பிட்டு எங்க கோமுவுக்குக் கெடெச்ச இந்த ரெத்தினத்தின் தலையிலே இப்படியெல்லாம் எளுதி வைக்க அது என்ன பாவத்தெச் செய்துது, தாயே? இல்லே ஏன் கோமுதான் ஒனக்கு என்ன தீங்கு செய்து போட்டா?'' என்று புலம்பி அழுதாள் அழகம்மை.

விதி தன் பாதையிலுள்ள அந்தக் 'கெடி'யில் நின்று நிறைவேற்ற வேண்டிய காரியத்தை நிறைவேற்றி விட்டுப் புறப்பட்டு விட்டது. ஆம், குத்தாலிங்கம் பிள்ளையின் மனத்தில் மரண பீதியைக் கிளப்பி, அவர் இதுவரையில் மனைவிக்கு மறைத்து வந்த ரகசியங்களைக் கக்கச் செய்ய வேண்டும் என்பதுதான் அது அந்தக் கெடியில் நிறைவேற்ற வேண்டியிருந்த காரியம். அது நிறைவேறி விட்டது. ஆகவே அந்தப் பூட்டுக்குக் குத்தாலிங்கம் பிள்ளை சாகவில்லை. எப்படிச் சாவார்? அவர் சாவை வேறொரு கட்டத்தில், இதே விதியே, இன்னும் கொடூரமாக நிறைவேற்றி வைக்க வேண்டியிருக்கையில், இப்பொழுது அவரைச் சாக விட்டுவிடுமா அது? எனவே, திருநெல்வேலி டாக்டருக்கும், அவருடைய இன்ஜெக்ஷன் மருந்துக்கும் பெருமையைத் தேடிக் கொடுத்துவிட்டு, அடுத்த சில நாட்களுக்கெல்லாம் குண்டுக் கல்லாகப் பிழைத்து எழுந்து விட்டார் குத்தாலிங்கம் பிள்ளை!

(தொடரும்)

கொள்கைக்காக நீ உன் உயிரை இழப்பது மிகவும் இலேசான காரியம். அதைவிட மகத்தானவற்றை, உன்னுடைய சொந்த வாழ்வில் உனக்கு மிகவும் அருமையும், விருப்பமும் நிறைந்தவற்றைக்கூட நீ தியாகம் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட மகத்தான தியாகத்தினால்தான், நீ எந்த ஒரு சத்தியத்துக்காகப் போராடுகிறாயோ, அந்தச் சத்தியம் எப்படி ஒரு மகா சக்தியாக வளர்ந்தோங்கிப் பெருகுகிறது என்பதை உன்னால் பார்க்கமுடியும். அந்தச் சத்தியம்தான் இந்த உலகில் உனக்கு மிகவும் அருமை வாய்ந்த அரிய பொருளாக இருக்கும்.

— கார்க்கி

உமா
பொங்கல் மலர்

★

பொங்கல் மலரைச் சிறந்த இலக்கியப் படையலாக ஆக்கும் பொறுப்பில் பங்குபெற இணக்கம் தெரிவித்த இலக்கியத் தமிழன்பர்கள் இவர்கள் :

ம. பொ. சிவஞானம், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், கி. வா. ஜகந்நாதன், நாமக்கல் கவிஞர், யோகி சுத்தானந்த பாரதியார், 'சோமு', கவி கா. மு. ஷெரீப், அ. சீநிவாசராகவன், அகிலன், புத்தனேரி ரா. சுப்பிரமணியம், இராஜ அரியரத்தினம், டி. கெ. சண்முகம், தி. ஜ. ர., ஏ. கரீம், தி. ஜானகிராமன், அழ. வள்ளியப்பா, டி. வி. சுவாமிநாதன், 'எல்லார்வி', 'ஜமீலா', கோமதி சுப்பிரமணியம், 'கணையாழி', தங்கமணி, எல். என். சியாமளா, ச. அய்யாப்பிள்ளை, அ. வேதாசலம், 'குழலன்'.

தொடர் பகுதிகள் மூன்றும் மலரில் இடம் பெறுகின்றன. **1957, ஜனவரி 11-ஆம் நாள்** பொங்கல் மலர் எங்கும் கிடைக்கும்.

★

விலை அணா எட்டு

★

'உமா' — சென்னை-1.

கடந்த 27-10-56ல் சென்னை, திருச்சி வானொலியில் இடம் பெற்ற பேச்சு இது. உரிமை பெற்று இப்பொழுது வெளியிடப்படுகிறது.

நவ பாரதம் - அடிப்படைக் கல்வி

உலகத்தின் இருட் பாதையிலே ஒளி உதவும் நல்லதொரு அற நாடாக விளங்கி வருகின்றது நம் நவபாரதம். 'குடிமக்கள் சொன்ன படி குடியாட்சி' என்ற பெருமித நிலையை நாம் எட்டி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. வித்தகச் சித்தன் பாரதியார் சொன்னது போல, 'பாரத தேசமென்று நாம் தோள் கொட்ட' முடிகிறது. ஏழை யென்றும் அடிமை யென்றும் எவனும் இல்லாத 'நன்னல ராஜ்ய' மாக (Welfare State) பாரதத்தின் மாண்பை உயர்த்தத் திட்டங்கள் பல நிறைவேறி வருகின்றன.

அரசியல் சுதந்திரம் அற்ற நிலையில், விடுதலை தவிர வேறெதையும் பற்றி நினைக்கவே முடியாது: நினைத்தும் பலன் இல்லை. 'தண்ணீர் விட்டோ வளர்த்தோம், சர்வேசா! கண்ணீர் விட்டே வளர்த்தோம், கருகத் திருவுளமோ!' என்று கவிஞர் மன்றுடிய தன் துடிப்பும் இதனால்தான்.

ஆனால், விழித்தெழுந்து விடுதலை பெற்றுத் திகழும் நாட்டோர் இதர எல்லாத் துறைகளிலும் முன்னேற்றத்தை நாடிச் செயல் புரிய வேண்டும். இல்லாவிட்டால், நூறாண்டு பாடுபட்டுப் பெற்ற இன்ப சுதந்திர வாழ்வு பொருளும் பொலிவும் இழந்து விடும்.

நமது ஐந்தாண்டுத் திட்டங்களில் விவசாயம், மின்சக்தி உற்பத்தி, தொழிலியல் வளர்ச்சி, மருத்துவம் முதலிய பல துறைகளிலும் மேம்பாட்டைக் கோருவது போலவே, கல்வித் துறையிலும் பல லட்சியங்களை நிறைவேற்றத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

சொல்லப் போனால், இந்நாட்டின் முதல் விரோதி 'எழுத்தறிவின்மை' யே (illiteracy) என்று கூறி விடலாம். தொன்மையான நாகரிகச் சிறப்பும், மலைகளைக் குடைந்து கோவில்கள் கட்டி, மரக்கல வணிகம் நடத்திய சரித்திரப் புகழும் பொய்யாய், கனவாய், பழங்கதையாய்ப் போய்விடக் கூடாதென்றால், குறை கூற முடியாத ஒரு கல்வித் திட்டம் உருப்பெற வேண்டியது இன்றியமையாததாகும்.

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'

என்று புதுயுகக் கவிஞன் பாட வில்லையா?

'நாம் எல்லோரும் இந் நாட்டு மன்னர்' என்று பாரதி முழக்கினார். வயது வந்தவர் அனைவருக்கும் 'வாக்குரிமை' அளிக்கப்பட்டுள்ள நம் நாட்டிலே கவிஞனின் கனவு இது என்ற எல்லையைக் கடந்து, நனவாகி, ஒரு தேர்தல் முடிந்து விட்டது.

'பூரண கல்வி வளர்ச்சி இல்லாத நாட்டில், வயது வந்தவர்களுக்கு வாக்குரிமைவழங்குவது அபாயம்' என்றே அறிஞர்கள் பலர் எச்சரிக்கிறார்கள். அது, குழந்தையின் கையில் ரவைகள் போட்டுக் கெட்டிக்கப்பட்ட துப்பாக்கியைக் கொடுப்பது போலாகும் என்றும் சிந்தனையாளர்கள் பலர் பயந்தார்கள். அத்தகைய விபத்துக்கள் எதுவும் நம்முடைய ஜனநாயகத்திற்கு நேரவில்லை. மண்ணுடனேயே ஒட்டி இயல்பாக ரத்தத்தில் ஊறி விட்ட ஓர் அனுபவ அறிவால், எழுத்தறிவற்ற மக்களும் தமது வாக்குகளை நல்ல முறையிலேயே பயன் படுத்தி விட்டார்கள். என்றாலும், அந்த அறிஞர்களின்

பூவை எஸ். ஆறுமுகம்

> எப்போதும் பிறரைக் குறை கூற வேண்டாம். ஆக்க முறையைக் கடைப்பிடி. நீ சொல்ல வேண்டியதைப் போதி. அத்துடன் நின்றுவிடு.
>
> — விவேகானந்தர்

எச்சரிக்கையைப் புறக்கணிப்பதும் சரியன்று. கல்விப் பயிற்சி உள்ளவர்களாலேயே வாக்குகளை உணர்ந்து பிரயோகிக்க முடியும். பன்னெடு நாட்களுக்கு முன் கூட்டியே, 'கண்ணுடையோர் என்போர் கற்ருேர்' என்று வான்மறை கூறியுள்ளதை நாம் எப்படி மறக்கக் கூடும்?

நமது அரசியல் அமைப்புத் திட்டத்தில் 'ராஜாங்கக் கோட்பாடுகள்' (Directive Principles of State Policy) என்ஞெரு பகுதி உள்ளது. இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள லட்சியங்களை நிறைவேற்றி, நாட்டை ஒரு நன்னல நாடாக (Welfare State) ஆக்குவதென்று அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுத்தார்கள். அவற்றில் ஒன்று: அரசியல் அமைப்பு அமலுக்கு வந்து பத்து ஆண்டுகளுக்குள் இந்நாட்டில் 6 வயது முதல் 14 வயது வரை உள்ள எல்லா மக்களுக்கும் 'கட்டாயக் கல்வி' (Compulsory Education) வழங்குவது ஆகும்.

1944-ல் அதாவது, நம் நாடு விடுதலை அடையும் முன், மத்தியக் கல்விக் குழுவினர் ஒரு கல்வித் திட்டம் வகுத்தனர். 'ஸார்ஜென்ட் திட்டம்' (Sargent's Scheme) இது. பெரும்பான்மையான அம்சங்களில் இதை அரசாங்கம் ஏற்றது. நாற்பது ஆண்டுகளுக்குள் நாட்டில் எல்லோருக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்குவது இதன் குறிக்கோள். ஆனல், அதன் பின் கேர் (Dr. Kher) தலைமையில் நிறுவப்பட்ட கமிட்டி, மேற்படி திட்டப்படி நாற்பது ஆண்டுகள் மிக அதிகம்; பதினறு ஆண்டுகளுக்குள் அறியாமை அரக்கனை விரட்டிவிட வேண்டும் என்று தீர்மானித்தது.

விடுதலை ஒளி பெற்ற நவபாரதமும் அவ்வளவு காலம் கூடப் பொறுத்திருக்க முடியாதென்ற துடிப்புடன் பத்தே பத்து ஆண்டுகளில் எழுத்தறிவு என்ற துணிச்சலான லட்சியத்தை நிர்ணயித்துக் கொண்டு விட்டது.

இந்நாட்டு மக்களுக்கு உகந்த ஒரு கல்வித் திட்டம் பற்றித் தமது சிந்தனையை ஈடுபடுத்திஞர் நம் தேசத் தந்தை காந்திஜி. அது 1937-ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே அவருடைய எண்ணத்தில் குடி கொண்டது. தனக்கே உரிய குறி தவருத பாணியில் அவர் தீர்மானம் செய்தார். இந்நாட்டில் வழங்கி வரும் 'ஆரம்பக் கல்வி முறை' (Primary Education) கோளாருனது என்பதையும் குழந்தைகளின் சூழ்நிலைக்கும் ஆரம்பப் பள்ளிப் படிப்புக்கும் சம்பந்தமே இல்லை என்பதையும் அவர் உணர்ந்தார். இத்தகைய இணைப்பை ஏற்படுத்தும் புதிய கல்வித் திட்டம் பற்றிச் சர்ச்சை செய்ய வார்தாவில் மகாநாடு கூட்டிஞர். அந்த மகாநாட்டின் விளைவாகத்தான் 'வார்தா முறையிஞலான ஆதாரக் கல்வித் திட்டம்' (Wardha's Scheme of Basic Education) வடிவெடுத்தது. எந்த முறையிலும் இதை 'ஆதாரக் கல்வித் திட்டம்' என்று நாம் சொல்லலாம். இதுவே 'நயித்தாலிம்' என்று அழைக்கப்படுகிறது.

கல்வி வளர்ச்சிக்கும் ஜீவனேபாயத்திற்கும் ஆதாரமானது இம்முறைதான். டாக்டர் ஜாக்கீர் ஹுஸேன் (Dr Zakir Hussain) இத்திட்டத்திற்கான அலுவல்களை நிறைவேற்றும் பொறுப்பைச் சுமந்தார். சேவா கிராமத்தில் இந்தப் புதுமுறைக் கல்வியைப் போதிப்பதற்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஒரு நிலையம் ஆரம்பிக்கப் பட்டது. சமீபத்தில் சேவா கிராமத்தில் கிராமிய சர்வ கலாசாலையும் (Rural University)

தொடங்கப் பெற்றது. ஆரம்பக் கல்விக்கு மட்டுமே யல்லாமல், ஸெகண்டரி கல்வி, உயர் கல்வி இவற்றிலும் ஆதாரக் கல்வி முறையை அமல் செய்வது பற்றிய ஆராய்ச்சிகள் நடத்தி வழி வகுப்பதும் இந்தச் சர்வகலாசாலையின் திட்டம் ஆகும்.

'அடிப்படைக் கல்வி' என்பதும் 'ஆதாரக் கல்வி' என்பதும் ஒன்றே தான். 'ஆதாரக் கல்வி' (Basic Education) என்றால் என்ன என்று இப்பொழுது பார்ப்போம்:

'ஆதாரக் கல்வி என்பது ஒரு வரப்பிரசாதம்; அது ஒருபுது ஒளி' என்று பல காந்திய அறிஞர்கள் கூறுகிறார்கள். பள்ளிப் படிப்பில் ஏட்டுக் கல்வி மட்டுமே இடம் பெறாமல், ஒரு தொழில் முறையையும் பயிற்றுவிப்பது ஆதாரக் கல்வியின் சிறப்பாகும். நூல் நூற்றல், தறி வேலை, தச்சு வேலை, காய்கறி பழத் தோட்டம் போடுவது, சமையல் வேலை, நல்ல பழக்க வழக்கங்களைப் போதனை என்ற முறையில் கசக்கும்படி எடுத்துக் கூறாமல், அன்றாட நடவடிக்கைகளில் இணையும்படி அமைப்பது, சிறு அளவிலான கைத்தொழில்கள் – இவையனைத்தும் ஆதாரக் கல்வி போதிக்கப்படும் பள்ளிகளின் அட்டவணைகளில் இடம் பெறுகின்றன.

மொத்தம் 30 கோடிக்கு அதிகமான ஜனத்தொகைக்குக் கல்வியறிவு வழங்குவதற்கு எத்துணை பிரம்மாண்டமான முதலீடு தேவையாகுமோ என்பதைச் சிந்தித்த காந்தியடிகள், அந்தச் செலவைக் குறைக்க ஒரு வழி வகுத்தார்.

ஆதாரக் கல்வி பயிலும் மாணவர்கள் செய்யும் பொருள்கள், தயாரிக்கும் காய்கறி கனி வகைகள் முதலியனவற்றை விற்பனை செய்வதன் மூலம், பள்ளிச் செலவின் பெரும் பகுதியைச் சமாளிக்கலாம் என்று அன்று காந்திஜி கூறியபோது, பரிகசித்தவர்கள் உண்டு. ஆனால் அன்று அவர் சொன்னது காரிய சாத்தியமானது என்பது இன்றைக்கு நிரூபிக்கப்பட்டுவிட்டது.

ஆதாரக் கல்வியின் தாரக மந்திரம் இதுதான்: 'செயல் மூலம் கல்வி பயிலுதல்'. (Learn by doing) இக்கல்வி முறையின் உயிர்ப்பான மூன்று குறிக்கோள்கள்: 1. சுய தேவைப் பூர்த்தி (self-sufficiency); 2. தன்னடக்கம் (self-control); 3. தனக்குத் தானே சார்ந்திருத்தல் (self-reliance).

ஆதாரக் கல்வி வளர்ச்சியில் அரசாங்கத்தின் சாதனைகளைப் பற்றி எண்ணுவோம்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 169 கோடி ரூபாய்–அதாவது திட்டத்திற்கான மொத்த முதலீட்டில் 7 சதவிகிதம் – கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது. திட்டம் பூர்த்தியாவதற்குள்-அதாவது இவ்வாண்டு மார்ச் 31–ஆம் தேதிக்குள் சாதிக்க வேண்டிய லட்சியங்கள் என்று குறித்தவை:

1. 6 வயது முதல் 11 வயது வரை நாட்டில் உள்ள மொத்தக் குழந்தைகளில் 100க்கு 60 பேருக்காவது கல்வி வழங்குவது. திட்டம் தொடங்கப் பெற்ற 1950–51ல் இத்தகைய குழந்தைகளில் 100க்கு 45 பேர்தான் கல்வியறிவு பெற்று வந்தார்கள். வளர்ந்து வரும் ஜனத்தொகையில் 100க்கு 15 அதிகக் குழந்தைகள் கல்வி பெற வசதியளிக்கும் இந்த லட்சியம் மகத்தானது.

2. 11 வயது முதல் 17 வயது வரை உள்ள சிறுவர் சிறுமியர்

> எவன் ஓர் ஆத்மாவை வாழ வைக்கின்றானோ அவன், மனிதர்கள் யாவரையுமே வாழ வைத்தவன் போலாவான்.
>
> — திருக் குர் ஆன்

100க்கு 11 பேர்கள்தான் 1950-51-ஆம் ஆண்டில் கல்வி பெற முடிந்தது. 100க்கு 15 பேர் இத்தகைய வாய்ப்புப் பெற வசதி தேடித் தருவது இந்தத் திட்டத்தின் கனவு.

3. 14 வயது முதல் 40 வயது வரை உள்ளவர்களில், 100க்கு 30 பேர்களுக்காவது 'சமுதாயக் கல்வி' (Social Education) கற்றுக் கொடுப்பதென்பதும் ஒரு பிரிவாகும். கண்ணெனத் தகும்படியான எண்ணையும் எழுத்தையும் போதிப்பதுடன், அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் பொது அறிவுப் பாடங்களையும் சொல்லிக் கொடுப்பதும் இதன் நோக்கம்.

நம் நாட்டில் ஒவ்வொரு பிரஜையும் கல்விக்காகச் செலவிடும் தொகை நான்கு ரூபாய்கூடத் தேறவில்லை. 1952-53ல் சராசரிக் கணக்கு தந்த முடிவு இது. மிகக் குறைவான தொகைதானே இது?

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பக் கல்வியை ஆதார முறையில் அமைப்பதின் அவசியம் அங்கீகரிக்கப் பட்டது. மூளையையும் மனத்தையும் மட்டுமே வளர்த்து, கைகளைச் சூம்பிப்போக விடக்கூடாது என்பது தெளிவாயிற்று. வலுவுள்ள கைகள், அகன்ற மனம், தெளிவுள்ள சிந்தனை-மூன்றும் சேர்ந்தால்தான் இன்னிசை தரும் நல்ல வீணையைப் போன்ற நல்ல பிரஜை உருவாக முடியும்.

அடிப்படைக் கல்வி வளர்ச்சிக்கென்று உருவான திட்டங்கள்:

1. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஆதாரக் கல்விப் பயிற்சிக் கல்லூரி அமைப்பது.

2. இந்தப் பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தர, மேல்நிலைக் கல்லூரி அமைப்பது.

3. ஐந்து சமுதாய நல நிலையங்கள் நிறுவுவது.

4. வாசகசாலை ஏற்படுத்துவது.

5. கிராமத்தில் தலைமைப் பயிற்சி வழங்க ஒரு ஜனதா கல்லூரி அமைப்பது.

ஒவ்வொரு அரசாங்கமும் இந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

1956-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய, முதல் ஐந்தாண்டுத் திட்டப் பிரகாரம், இந்த ஆதாரக் கல்வி அடிப்படையில், 20,000 ஆரம்பப் பள்ளிகளும், 5,700 ஜூனியர் ஆதாரக் கல்வி நிலையங்களும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1950-51ல் இருந்ததைவிட 1953-54ல் 23 லக்ஷம் அதிகப்படியான குழந்தைகள் ஆதாரக்கல்வி பெற்றனர்.

இம்முறையில் ஏற்படும் குறைகளை நிவர்த்திக்கவும், மேற்கொண்டு அதிக வளர்ச்சி காட்டவும் உதவும் வகையில், மத்திய ஆராய்ச்சி நிலையம் (National centre for Research in Basic Education) ஒன்றும் அண்மையில் ஆரம்பிக்கபடவிருக்கிறது.

ஆதாரக் கல்வி முறை எவ்வாறு செயல்படுகிறதென்பதைக் கணக்கிடும் பொருட்டு மத்திய அரசினர் ஒரு கமிட்டியை நிறுவினார்கள். இதன் அங்கத்தினர்கள்: திருவாளர்கள்: ஜி. ராமச்சந்திரன் (சென்னை); ராமசரண் உபாத்யாய (பீஹார்); டாக்டர் ஸையத் அன்ஸாரி (டெல்லி). ஜே. ஸி. போஸ் இக்கமிட்டிக்கு காரியதரிசி; அங்கத்தினருங்கூட.

ஆரம்பக் கல்வி முழுவதையும் ஆதாரக் கல்வியாக-அதாவது அடிப்படைக் கல்வியாக மாற்ற வேண்டுமென்று மத்திய சர்க்கார் மதிப்பீட்டுக் குழுவினர் அறிவுறுத்தி, ராஜ்யங்கள் இதை நியாயமான கால வரையறைக்குள் செய்யவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர். இது அண்மைச் செய்தி.

1951ல் முதல் ஐந்தாண்டுத் திட்டம் சென்னையில் ஆரம்பமானபோது, 268 ஆதாரக் கல்விக் கூடங்கள்தாம் இருந்தன. 629 புதிய ஆதாரப் பள்ளிக்கூடங்களை

நிறுவுவதென்று தீர்மானிக்கப்பட்டது. 1953-54 முடிவில் 575 புதிய ஆதாரக் கல்விச் சாலைகள் உருவாயின. புதிதாக ஆரம்பமான ஆதாரக் கல்விப் பயிற்சிக் கூடங்கள்: 1951-52ல் 4; 1952-53ல் 3; 1953-54ல் 1.

'கிராமசுயராஜ்ய அமைப்புக்கு அடிப்படைக் கல்வி முறையே அஸ்திவாரம்' என்று எடுத்துக் கூறப்படுகிறது.

சென்னையில் நடத்தப்பட்டு வரும் 'ஒளவை அகம்' ஆதாரக் கல்வி அடிப்படைப் பட்டதே; 'India, The New Pattern' என்ற தம்முடைய நூலில் இதைப் பாராட்டி எழுதியுள்ளார், பிரிட்டிஷ் ஆசிரியையான லேடி ஹார்டாக் (Lady Hartog). சென்னை ராமகிருஷ்ண மாணவர் இல்லமும் இந்த அடிப்படையில் இயங்குவதேயாகும்.

காஞ்சிபுரத்தில் நடந்த எட்டாவது சர்வோதய மகாநாட்டுடன் ஆதாரக் கல்வி பற்றிய மகாநாடும் மூன்று நாட்கள் நடைபெற்றது என்பதையும் குறிப்பிட வேண்டும். ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத், வினோபாஜி போன்ற தலைவர்கள் கலந்து கொண்டனர்.

சில வாரங்களுக்கு முன்னம், காந்தி கிராமத்தில் நடைபெற்ற ஆதாரக் கல்வி ஆசிரியர்கள் மகாநாட்டிலே ராஜாஜி பேசிய பேச்சில் குறிப்பிடத் தக்கவையான வரிகள் இவை:

"ஆதாரப் பள்ளிகளில் படித்து வெளிவரும் மாணவ-மாணவிகள் மற்றப் பள்ளிகளில் படித்து வெளிவரும் மாணவ-மாணவிகளை விட எல்லா விதத்திலும் உயர்ந்தவர்களாக விளங்குவது நிச்சயம். அறிவும் முக்கியம்; பிழைப்புக்கான வழியும் அவசியம்; கல்வியின் உன்னத லட்சியம் உண்மைப் பண்பாடு. ஆதாரக் கல்வியின் மதிப்பை அதன் உற்பத்தி சக்தியைக் கொண்டோ, அல்லது அதனால் கிடைக்கும் அறிவின் அளவைக் கொண்டோ கணக்கிடக் கூடாது. அதன் மூலம் சிறுவர்–சிறுமியர் பெறும் பண்பாட்டின் மதிப்பைக் கொண்டுதான் அளவிட வேண்டும்."

சென்னையில் 2½ லட்சம் குழந்தைகள் அடிப்படைக் கல்விப் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 28,000 பள்ளிகள் ஆரம்பித்து, 30 லட்சம் மாணவர்களுக்கு ஆதாரக் கல்வி போதிக்க வேண்டுமென்பதும் அரசினரின் திட்டமாகும்.

அண்ணல் மகாத்மாவின் புனித உள்ளம் தொடங்கிய இந்த அடிப்படைக் கல்வி—அதாவது ஆதாரக் கல்வி, நவபாரதத்தின் ஒளி விளக்காகத் தோன்றி அனைவருக்கும் வழி காட்டும் என்பது அறிஞர்களின் நம்பிக்கை. வணக்கம். ★

தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம்.

ஒரு பெரிய பைண்டு புஸ்தகம்.

விலை ரூபாய் 5—0—0

தையல் கட்டிங் & மானுவல்!

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும், எவர் உதவியைக் கொண்டும் தையல் வேலையை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபாய் 3—8—0

ஹிந்தி ஆசான்

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றித் தானே சுலபமாகப் படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபாய் 1-12-0

V. P. செலவு ரூ. 0-12-0.

VANI BOOK DEPOT (U)
Post Box No 239. MADRAS-1.

போட்டிக் கதை:

அந்தி வானம்

இரா. மாத்தம்மாள்

"நெரித்த திரைக் கடலில் நின்முகம்
கண்டேன்;
நில விசும்பினிடை நின்முகம் கண்டேன்;
திரித்த நுரையினிடை நின்முகம் கண்டேன்;
சின்னக் குமிழிகளில் நின்முகம்
கண்டேன்!"

பாரதியின் பாடலை அழகிய பண்ணுக இசைத்துக் கொண்டே நான் இருந்த அறைக்குள் நுழைந்தாள் வேதா. எனக்குச் சிரிப்பு வந்தது. நான் கூறினேன்:

"வேதா, இன்னும் ஒரு அழகான வரியைப் பாடாமல் விட்டு விட்டாயே?

'பிரித்துப் பிரித்து நிதம் மேகம் அளந்தே
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை'

என்ருல்தான் உன் பாடல் பூரண அழகையும் பெறுகிறது."

அவள் என்னை ஏறிட்டுப் பார்த்தாள். செக்கர் வானத்தின் செம்மை அழகை நான் அதிகமாக அனுபவித்ததில்லை. ஆனல், வேதாவின் முகத்தில் படரும் செம்மை, எனக்கு அந்த அந்திவானத்தைத் தான் நினைவூட்டும்.

"இங்கே பார், அண்ணு! இனிமேல் என்னை நீ இப்படிக் கேலி பண்ணினல்...."

"நிஜமாகவே 'அந்தி வானம்' உன்னுடைய முகத்தில் தங்கி விடுமாக்கும்...?"

வேதாவிற்குச் சிரிப்பு வந்து விட்டது.

குளித்துவிட்டு அறைக்குள் நுழைந்தான் ரகு. அவன் முகத்தைப் பார்த்தால், தன் ஒரே தங்கையின் மணத்திற்காகப் பாடுபட்டதில் முதுமை பெற்றுவிட்டதாகத் தோன்றியது. ஏன்? நான் மட்டும் வேதாவின் திருமணத்திற்காகக் கவலைப் பட்டதில்லையா? விசித்திரமான கேள்விதான்! தன் குழந்தை வாழவேண்டுமென்று எந்தத் தாய்தான் விரும்புவதில்லை? அறியாப் பருவம் முதல் சேர்ந்து வளர்ந்த அன்புப் பிணைப்பு மட்டுமா எங்களுடையது? 'அண்ணு' என்ற அவளது அமுத கீதத்தைக் கேளாது என் கண்கள் என்றுமே தூக்கத்தைத் தழுவியது கிடையதே! ஆனல், ஆனல்...! எவ்வளவு தான் அன்பைச் செலுத்திலுைம், வேதா என் கூடவே இருந்துவிட முடியுமா? என்ன பைத்தியக்கார எண்ணமிது? வேதாவின் இன்பம், என் இன்பம் அல்லவா? அது மட்டுமா? அது, ரகு—அவள் உடன் பிறந்த அருமை அண்ணுவின் இன்பம்; கணவனை இழந்து, தன் இரு குழந்தைகளையும் செல்வத்தின் துணையினலேயே வளர்த்து வரும் அவள் அன்புத்தாயின் பேரின்பம்!

"ஏய், தூங்குமூஞ்சி! ஆபீஸிற்கு நேரமாகவில்லை? உன் தங்கையின் மணத்தைப் பற்றிய கனவு அப்புறமாகட்டும்!"—ரகு ஓர் அதட்டல் போட்டான்.

நான் சமாளித்துக்கொண்டேன்.

"ஏன் ரகு, வேதாவிற்கு நம்மை விட்டுப் போவதில் வருத்தமே இல்லையா?"

"என்ன கேள்வியடா இது? எந்தப் பெண்ணுக்குத்தான் மணமாகித் தன் புருஷன் வீட்டுக்குப் போவதில் இன்பம் இருக்காது?"

நான் வேதா நின்ற திசையை நோக்கினேன். அவள் எப்பொழுதோ போய்விட்டிருந்தாள். ரகுவிடம் விடை பெற்றுக்கொண்டு ஆபீஸிற்குப் புறப்பட்டேன். ரகு சும்மா இருந்தாலும் சரி, கற்பனபுரியில் சஞ்சரித்தாலும் சரி,

அவன் செல்வம் அவனுக்குச் சோறு போடும்; அவன் வாழ்வில் எந்த நிமிடத்திலும் வறுமைக்கு இடமில்லை. ஆனால், நான்? நான் சும்மா இருந்தால்? நல்ல கேள்வி! என்னை நம்பி வாழும் நான்கு ஜீவன்களுக்கும் உலகம் ஒரு நாள் உணவு அளிக்குமா?

* * *

பார்க்கப்போனால் வேதாவின் குடும்பத்திற்கும் என் குடும்பத்திற்கும் பழக்கம் நேரிட்டதே விசித்திரமானதுதான். வேதா சின்னஞ்சிறு பருவ முதலே என்னைத்தான் 'அண்ணா' என்று அழைப்பது வழக்கம். பக்கத்து வீட்டுக்காரர்களாக மட்டுமன்றி, இணைந்த அன்புக் குடும்பங்களாகவே நாங்கள் வாழ்ந்து வந்தோம். ஆனால், அவளுக்கும் எனக்கும் செல்வத்தைப் பொறுத்தவரையில் மலைக்கும் மடுவிற்குமுள்ள வித்தியாசம். நான் தந்தையை இழந்து, குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்போடு, தாயையும் தந்தையையும் இழந்துவிட்ட அண்ணாவின் இரு குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டேன். ஆனால், ரகு தன் தந்தைக்குப் பின் அவரது வாரிசு. இந்த அன்பு, பணத்தையா எதிர் பார்க்கிறது? அது வேதாவிடம் மாறுதலை ஏற்படுத்தவில்லை; ரகுவிடமும் மாறுதலை உண்டாக்கவில்லை.

ரகு மனிதர்களிடம் எப்பொழுதுமே சகஜமாகப் பழகமாட்டான். ஆனால் சிறு பருவ முதலே எனக்கும் வேதாவிற்கும் ஊர் வம்பை விலைக்கு வாங்குவதுதான் வேலை. அப்பப்பா! நாங்கள் ஆற்றங் கரையில் அடித்த கொட்டம்! மாமரத்திலேறி, மாங்காய் என்று சொல்லிக் கல்லை விட்டெறிந்தது, ரகுவை அசடாக்கி வேடிக்கை பார்த்தது—ஆக எல்லாம் கூடி வேதாவிற்கு ரகு 'அசட்டு ரகு' வாகவும், நான் அன்புச் சகோதரனுமாகவும் மாறி விட்டோம். எனக்கு மட்டுமென்ன? வேதா ஒருத்திதான் உலகமாகத்தோன்றினாள். என் மனத்திரையில் என்றும் நீங்காத இடம் பெற்ற சம்பவம் ஒன்று என் சிறு பருவத்தில் நிகழ்ந்தது.

அப்பொழுது வேதாவின் தந்தை இறந்து இரண்டு மூன்று நாட்களிருக்கும். அவளுக்கு அப்பொழுது வயது பத்து. ரகுவும், நானும் உயர்தர வகுப்பு மாணவர்கள். வேதாவிற்கு அவள் அப்பாவிடம்தான் அன்பு அதிகம். ஆகவே தந்தையை இழந்த துக்கத்தால் அந்தப் பிஞ்சு உள்ளம் வெம்பியது. என்னால் அப்பொழுது என்ன ஆறுதல் கூற முடியும்? அவள் அழும் போதெல்லாம் நானும் கண் கலங்கினது தான் மிச்சம். ஒரு நாள் நான் அவள் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அம்மா ஆசையுடன் செய்து கொடுத்த மைசூர்பாகு என் கையில் இருந்தது. என் கண்கள் வேதாவைத் தேடின. வீடு முழுவதும் தேடியலைந்து விட்டு

'அந்திவானம்' ஆசிரியை திருமதி இரா. மாத்தம்மாள், நாகர்கோவில் 'ஸ்காட் கிருஸ்தவக் கல்லூரி'யில் பொருளாதாரத்தை விருப்பப் பாடமாகக் கொண்டு நான்காம் பல்கலைக்கழக வகுப்பில் படித்து வருகிறார். இந்தக் கதைதான் இவரது முதல் கதையாம். மனஸ்த்துவம் விசித்திரமான கோணத்தில் பேசுகிறது. எழுத்துத் திறம் நிரம்பப் பெற்றுள்ள இவருக்கு நல்ல எதிர்காலம் இருக்கும்.

மாடிக்குச் சென்றேன் நான். வேதா அங்கு ரகுவுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தாள். எனக்கு ஆத்திரம் வந்தது.

"ஏண்டா ரகு, இனிமேல் அவளை ஏதாவது பண்ணினே, அப்புறம் தெரியும்," என்றேன் நான்.

ரகு என்னை முறைத்துப் பார்த்தான். வேதா விம்மிக் கொண்டே, "பார் அண்ணு! உன் அப்பாவும் செத்துப் போகவேண்டுமாம்....ரகு சொல்கிறுன். அப்புறம் நீயும் என்னைப்போல் தானே இப்படி அழுதுகொண்டிருப்பாய்?"

அவளால் இந்தத் துக்கத்தைத் தாள முடியவில்லை. எனக்கு அந்தச் சமயத்தில் மேனி சிலிர்த்தது. "அவன் கிடக்கிறுன் வேதா, எங்கப்பா ஒன்றும் சாகமாட்டார். இதோ இங்கே பார், உனக்குத் தின்பதற்கு என்ன பலகாரம் வைத்திருக்கிறேன் என்று!"

ரகு முகத்தை வெட்டிக்கொண்டு புறப்பட்டான். வேதா கண்ணீர் வழிந்த முகத்துடன் என்னைப் பார்த்தாள். அவளுக்கு மிகவும் பிடித்தமான அந்தச் சுவைப் பலகாரம் என் கையில் பிசுபிசுத்தது. அதைப் பார்த்து விட்டு அவள் அழகாக முறுவலித்தாள்.

"ஏன் வேதா, இதற்காகவா அசடு மாதிரி அழுகிறுய்?" என்று பரிவுடன் வினவினேன்.

"பார் அண்ணு! என் அப்பா செத்துப்போயிட்டதாலே நானும், ரகுவும், அம்மாவும் எவ்வளவு வருத்தப்படறோம். அதுமாதிரி நீயும் ஆயிட்டா, எனக்கு அப்புறம் யார் அண்ணு உன்னைப் போல ஆறுதல் சொல்லுவாங்க?"—அவள் விசும்பினுள். என் குழந்தை உள்ளமும் அவள் அன்பைக் கண்டு வியந்தது. 'அன்பு தெய்வீகமானது' என்பதுதான் எவ்வளவு உண்மை!

"அண்ணு, உன்னை ஏன் எனக்கு இவ்வளவு பிடிக்கிறது?"-மைசூர்ப் பாகை மென்றுகொண்டே அந்தப் பெண் வேதா கேட்டாள்.

"மைசூர்ப் பாகைப் போலப் பிடிக்கிறதா, வேதா?" என்றேன் நான்.

"ஊஹூம், அமுதம் போல, அம்மாவைப் போல, நீ எனக்கு, அண்ணு!"

“ரகு யார் பின்னே...?”

“அவனா?”– வேதா திகைத்தாள். “ஏன் அண்ணா, அந்த

அசடை உங்க வீட்டிற்கு அனுப்பி விட்டு நீ இங்கேயே வந்துடறியா? நான் எப்போதும் உன் பக்கத்திலேயே இருப்பேன். அப்போ நீ என் சொந்த அண்ணாதானே?”

எனக்கு அவள் கொண்டிருந்த அசட்டு ஆசையை நினைத்துச் சிரிப்பு வந்தது.

“வேதா, இதை உன் அம்மா கேட்டால் கோபிப்பாங்க, தெரியுமா? இப்போதும் பார், ரகுவை விட நான்தானே உனக்கு மேலாக இருக்கிறேன். அவனைத்தான் அடித்து விரட்டி விட்டாயே?”

“அசடு போகிறது! அண்ணா, வர்றியா ஆற்றங்கரைக்குப் போவோம்,” என்று வேதா என் கையைப் பற்றினாள். எனக்கு ஆற்றங் கரையை நினைத்து ‘குஷி’ பிறந்தது. எங்கள் உள்ளம் அன்பு வெள்ளத்தால் நிறைந்து உவகை அலைகளை வீசியது. நாங்கள் குதி நடை போட்டுக்கொண்டு ஆற்றங் கரைக்குக் கிளம்பினோம்.

ஆற்றிலே புது வெள்ளம் கரை புரண்டு ஓடியது. ஆனால் மீன் குஞ்சுகளாக வளர்ந்து விட்ட எங்களுக்கு எதைப் பற்றிப் பயம்? தண்ணீரைப் பார்த்தவுடன் எங்கள் ஆசையும் கரை புரண்டது.

வேதாவும் நானும் தண்ணீரில் குளிக்கத் தயாரானோம். நீரை நோக்கித் தாழ்ந்து வளர்ந்திருந்த இலுப்பை மரத்தின் கிளையில் ஏறி, தண்ணீரில் குதிக்கத் தொடங்கினோம். நாங்கள் மூன்று தடவை குதித்து எழும்பிக் கரையேறி, நான்காவது தடவையாகவும் குதிக்க மரத்தில் ஏறியபோது எங்கிருந்தோ ஓடி வந்தான் ரகு. நாங்கள் அவனைக் கவனிக்கவில்லை.

“ஒன்.... டு.... த்ரீ....” – முடிக்கவில்லை. பின்னாலிருந்து ரகு என்னைத் தண்ணீரில் வேகமாகத் தள்ளினான். எதிர்பாராத இந்தச் செய்கையால் நான் நிலை குலைந்து தண்ணீரில் மூழ்கினேன். சோர்ந்திருந்த என் கைகள் தண்ணீர் மட்டத்திற்கு வந்ததும் நீச்சலடிக்க மறுத்தன. “வேதா! வேதா!” என்று கத்தினேன் நான். மரத்தின் மேலே வந்து நின்ற வேதா, செய்வதறியாது திகைத்தாள். அவள் குதித்துத்தான் என்னை எப்படிக் காப்பாற்ற முடியும்?

“ஐயோ! அண்ணாவைத் தள்ளிட்டானே....!”–அவள் குரல் என் காதிலும் எதிரொலித்தது. ரகு, தன் செய்கையின் பலனைப் பார்த்துத் திகைத்திருக்க வேண்டும். படாரென்று நீரில் குதித்தான். அவன் ஒரு கையால் நீச்சலடித்துக் கொண்டு, மறு கையால் என்

''ஏன் வேதா அங்கே போய்க் குதித்தாய்?''

''நீ செத்து, நான் பிழைத்திருந்தால் எப்படி அண்ணு தனிமையாக இருப்பது?...''— வேதாவின் கண்கள் கலங்கின. பண்ணையாள் சிரித்தான். ரகு வெட்கினுன். என் உள்ளத்திலே வீசிய அன்புத் தென்றலிலே உவகை அலை மெல்ல எழும்பியது.

இந்தச் சம்பவத்திற்குப் பின் என் இருபதாவது வயதில் என் அன்புத் தந்தையை இழந்தேன். அப்போது வேதா பெரிய பெண்ணுக வளர்ந்து விட்டாலும், அவள் அழுத அழுகை மிக அதிகம்!

இத்தகைய அன்புத் தெய்வத்தை, இன்னும் மூன்று வாரத்தில் எங்கிருந்தோ வரும் வேற்று மனிதனின் கையில் ஒப்படைத்துவிட்டு, நான் அவள் பிரிவிற்காக ஏங்க வேண்டும்! — ஆமாம்; விசித்திரமான வழக்கம் இந்த மனிதருடையது!

ஆபீஸில் எனக்கு வேலையே ஓடவில்லை. ஒரு யோசனை தோன்றியது. வேதாவின் பிரிவை சகிக்க இப்பொழுதிருந்தே பழகிக்கொண்டால் என்ன? — இந்த யோசனை தோன்றியதுமே என் உள்ளம் வலித்தது. ஆயினும் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அடுத்த மூன்று நாட்களும் வேதாவின வீட்டிற்கே செல்லாமல் ஊரைச் சுற்றினேன். வேதாவையும், ரகுவையும் பார்க்காமல் கழிந்த அந்த மூன்று நாட்களுக்குப் பின், அன்று பொழுது விடிந்தது. வேதாவின் மணத்திற்கு இன்னும் இரண்டே வாரங்கள்தாம் இருந்தன!

ஆற்றங் கரையை நோக்கிச் சென்றேன் நான்.

ஆற்றில் துளிகூட வெள்ளமில்லை. என் மனத்தைப்போலவே

லைக் கரையை நோக்கி இழுத்தான். இந்த நிலையில் இன்னும் ஐந்து நிமிட நேரமிருந்தால் இருவருமே மூழ்கி இருப்போம். ஆனல் அதற்குள் எங்களைத் தூரத்திலே பார்த்த வேதா விட்டுப் பண்ணையாள் விழுந்தடித்து ஓடிவந்து இருவரையும் கரையில் இழுத்துப் போட்டான். இரண்டு நிமிடம் அப்படியே அசைவற்றுக் கிடந்த நான் ''வேதா!'' என்றேன். ஆனல் பதில் இல்லை. சிறிது நேரத்தில் தொப்பலாக நனைந்திருந்த வேதாவைத் தூக்கிக் கொண்டு வந்தான், எங்களைக் காப்பாற்றியவன். நாங்கள் இருவரும் அலறினேம். ''வேதாவிற்கு என்ன?'' என்று நான் கத்தினேன்.

பேச்சு மூச்சற்றிருந்த அவளைக் கீழே கிடத்திய பண்ணையாள், ''நன்ருக இருக்கிறது.... அந்திநேரத்தில், புதுவெள்ளத்தில் இப்படியா விளையாடுவது? இன்னும் கொஞ்ச நேரம் ஆகி இருந்தால் மூவருமே செத்திருப்பீர்கள்,'' என்ருன்.

வேதா மெதுவாகக் கண்ணைத் திறந்தாள்.

''அண்ணு, நீ சாகலியே? நீங்களிருவரும் தண்ணீரில் செத்துப் போவீர்களே என்று நினைத்துத் தான் நானும் சுழலில் குதித்து விட்டேன்.''

அதுவும் வறண்டு கிடந்தது. 'அன்பு' என்பது என்ன? அது காட்டாற்று வெள்ளமா? நான் என்னையே கேட்டுக்கொண்டேன். என்ன பயங்கரமான கேள்வி! உயிரை அழிக்கும் அன்பு ஊற்று நீர் அல்லவா? ஆனால் அதுதானே மனத்தையும் அரிக்கிறது! என் சிந்தனை தலைவலியை அதிகப்படுத்தியது. எவ்வளவு நேரம் ஆற்று மணலிலே இருந்தேனே, தெரியாது. மேற்கு வானத்தே படர்ந்த செம்மை என்னைக் கவர்ந்தது. வேதாவின் முகம் அதில் பளிச்சென்த் தெரிந்தது.

''செக்கரின் வானத்தே உன் முகம் கண்டேன்''—என் வாய் என்னை அறியாமலேயே முணுமுணுத்தது.

''அண்ணா!'' வேதாவின் குரல் என்னை உலுப்பியது.

''வேதா! நீயா? இந்த நேரத்தில் எங்கே வந்தாய்?''

''கமலி உன்னைத்தேடி வீட்டிற்கு வந்தாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நீ இங்கேதான் வந்திருப்பாயென்று ஒருவருக்கும் தெரியாமல் வந்தேன்.''

''என்ன காரியம் செய்தாய், வேதா? இன்னும் இரு வாரத்தில் மணமாகப் போகிற பெண் தன்னந் தனியாக ஆற்றங் கரைக்கு வருவது எவர் கண்களுக்கும் குற்றமில்லாமல் படாது.''

''அண்ணா, நீதானா பேசுகிறாய்? நிஜமாகவே நீ என்னை மறந்து விட்டாயா....?''

''வேதா, தாயை குழந்தை மறக்குமானால்.... மழையைப் பயிர் மறக்குமானால்.... நான் உன்னை மறப்பதும் உண்மை....!''

''அப்படியானால், மூன்று நாட்களாய் நீ ஏன் எங்கள் வீட்டுப் பக்கமே வரவில்லையாம்....?''

''ஆபீஸ் வேலை அதிகமாக இருந்தது, வேதா.''

''நிஜமாகவா? எந்த ஆபீஸ் வேலையிலும் என்னை இதற்கு முன்னால் ஒரு நாளாவது பார்க்காமல் இருந்திருக்கிறாயா, அண்ணா?''

நான் அவளது கேள்வியின் சக்தியைத் தாங்காது எதிர்ப்புறம் நோக்கினேன். மங்கிப் போகும் கதிரவனின் ஒளியிலே எனக்கு ஒரு பெரிய உண்மை புலனாகியது. இவ்வளவு நாட்களுக்குப் பின் புலனாகிய அந்த உண்மை என்னை அதல பாதாளத்தில் தள்ளியது.

"வேதா! நேரமாகிறது, வீட்டிற்குப் போ; நான் நாளை வீட்டிற்கு வருகிறேன்," என்று நான் எழுந்து நடையைக் கட்டினேன் – வேதாவைத் திரும்பிப் பாராமலேயே.

* * *

ஊரை விட்டுப் போய் ஒரு வாரமே ஆகி இருந்த போதிலும், எனக்கு எத்தனையோ யுகங்கள் சென்று விட்டன போலிருந்தது.

வீட்டிற்குள் நுழைந்த என்னை, அம்மா முதன் முதலில் கேட்ட கேள்வி "ரகுவைப் பார்த்தாயா?" என்பதுதான்.

"ஏன் அம்மா?" என்றேன் நான்.

"என்னவோ, அந்தப் பிள்ளையின் முகத்தில் சுரத்தே இல்லை. நேற்றிலிருந்தே நீ வந்து விட்டாயா, வந்து விட்டாயா என்று ஆயிரம் தடவை கேட்டு விட்டான். ஏதோ கலியாண விஷயமோ என்னவோ?"

நான் திடுக்கிட்டேன். அவசர அவசரமாக அம்மா கொடுத்த காப்பியைக் குடித்துவிட்டு வேதாவின் வீட்டை நோக்கி நடந்தேன்.

வாசலிலேயே என்னை வரவேற்றாள் வேதா. அவள் தோற்றம் என்னைத் தூக்கி வாரிப்போட்டது. ஒரு வாரத்திற்குள் துரும்பாக இளைத்திருந்தாள் வேதா. அவளது அம்மாவைக் காணவில்லை. மாடியறையிலே கட்டிலில் உட்கார்ந்து மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டிருந்தான் ரகு. பதட்டத்துடன் உள்ளே நுழைந்த நான் "ரகு" என்றேன்.

"வந்து விட்டாயா, சுகுமார்? இனிமேல் நான் என்ன செய்யப் போகிறேண்டா?" என்று ரகு என் கையைப் பற்றிக் கொண்டு அலறினான். பின்னர், என்னிடம் ஒரு கடிதத்தை நீட்டினான்.

"ரகு அவர்களுக்கு,

மனத்தை வேறு ஒருவனுக்குப் பறிகொடுத்த மங்கையை என் தலையில் கட்ட முற்படுவீர்கள் என்று நான் கனவிலும் கருதவில்லை. தங்கள் சகோதரி சுகுமார் என்ற வாலிபனுடன் ஆற்றங் கரையில் உரையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்ததாக எத்தனையோ கடிதங்கள் வந்து விட்டன. ஊரிலேயே நல்ல பெயர் எடுக்காத குடும்பத்தோடு நான் சம்பந்தம் செய்து கொள்ள விரும்பவில்லை...."

அதற்கு மேல் என்னால் வாசிக்க முடியவில்லை. என் தலை சுற்றியது. ஆற்றங்கரையில் எங்களைப் பார்த்தது யார்? வேதாவிடம் அன்றே நான் சொன்னேனே? கடைசியில் என் வேதாவின் வாழ்விற்கு நானா சூறாவளியாக ஆக வேண்டும்?

"ரகு, எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கே!" என்று விம்மினேன் நான். இந்தச் சமயத்தில் அறைக்குள் நுழைந்த வேதா, "ரகு, உன்னை அம்மா கூப்பிடுகிறாள்" என்றாள். ரகு கீழே இறங்கினான். என்னைப் பார்த்து வேதா, "ஆற்றங் கரைக்குப் போங்கள், இதோ பின்னால் வருகிறேன்," என்றாள்.

நான் திகைத்தேன். என் வேதாவா இப்படிப் பேசுவது?

ஆற்றங் கரைக்கு வரும் வரை இவ்வுலக நினைவின்றியே நடந்தேன். ஒரு வாரத்திற்கு முன் நான் கண்ட காட்சிக்கும், இன்று நான் காணும் காட்சிக்கும் தான் எவ்வளவு வித்தியாசம்! எதிர்பாராது பெய்த மழையினால் ஆற்றிலே நீர் நிறைந்து அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது. கரைகளிலே தான் என்ன பசுமை! ஆனால் ஒரு வாரத்திற்கு முன்வரை எனக்குத் தோழமையாக என் உள்ளத்தைப் பிரதிபலித்த ஆறு, இன்று என் மனத்தை எள்ளி நகையாடுவது போலிருந்தது. அன்றும் இன்றும் ஒரே ரீதியிலிருந்த அரச மரத்தடியில் போய் நான் உட்கார்ந்தேன்.

வேதா என்னை நோக்கி வந்து கொண்டிருந்தாள். என்னுடைய பக்கத்தில் வந்ததும் அவள் ஆற்றைக் கூர்மையாக நோக்கினாள்.

"என்ன வேதா, ஒரு தடவை செய்த குற்றத்திற்கு வருந்துவது போதாது என்று மீண்டும் என்னை இங்கு வரச் சொன்னாய்?...."

"யார் தவறு செய்தது? ஐந்து வயதிலே நாம் ஆற்றங் கரையில் பேசிக் கொண்டிருந்தது மட்டும் ஏன் தவறாகப் படவில்லை?"

"என்னிடம் கேட்க வேண்டிய கேள்வியா இது?"

"நீங்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டாம்; எதற்காக சென்னையில் ஒரு வாரமாக அஞ்ஞாத வாசம் புரிந்தீர்கள்?"

வேதாவின் 'பன்மை'ப் பேச்சினால் திகைப்படைந்த நான் "வேதா!" என்றேன்.

கீழே குனிந்த அவள், "என் கேள்விக்குப் பதில்?" என்றாள்.

அம்மா என் தலையில் ஒரு பெண்ணைக் கட்ட முடிவிட்டதை அவளிடம் ஏன் சொல்ல வேண்டும்? நான் மேற்கு வானத்தைப் பார்த்தேன்.

"வானத்திலா பதில் எழுதி ஒட்டி இருக்கிறது?" என்று கேட்டு விட்டு வேதா சிரித்தாள்.

"ஆமாம், வேதா! அந்தி வானம் காட்டிய அந்த உண்மையை நான் இந்த ஜன்மத்தில் வெளியிட முடியாது!"

"நீங்கள் கூறினால் நானும் ஒரு பெரிய உண்மையை இப்பொழுது உங்களிடம் சொல்லுவேன்."

"என்ன வேதா அது?"

"என்னைப் பற்றி மொட்டைக் கடிதம் எழுதியது யார் என்பதைச் சொல்லுவேன்!"

"யார் வேதா அது?" என்றேன் படபடப்புடன்.

இலுப்பை மரத்தின் வேரிலேயே கண்களைப் பதித்த வேதா, "நான் தான்!" என்றாள்.

ஆற்றங் கரையே நிலைபுரண்டு சுற்றியது எனக்கு.

"வேதா, எதற்காக நீ அப்படி எழுதினாய்? சொல்....!"

"என் கேள்விக்குப் பதில் சொன்னால்தான், விடை....!"

"வேதா! நான் சொல்லி விடுகிறேன்; நம் அன்பிற்குப் பெரிய துரோகம் பண்ணி விட்டதை அந்த அந்தி வானம் எனக்குச் சொல்லியதுதான் காரணம். ஆம், வேதா! நான் உனக்கு சகோதர ஸ்தானத்திற்கு உரியவனாக இருந்த காலம் இறந்து விட்டது."

"அதே குற்றத்தை நானும் செய்ததுதான் இந்த மொட்டைக் கடிதம் எழுதத் தூண்டியது."

என் உள்ளம் ஆற்றோடு போட்டியிட்டது. பசுமை எங்கிருந்து அங்கே பறந்து வந்ததோ?

"வேதா, அப்படியானால் நீ அன்று பாடியதெல்லாம்...."

"நான் ஒன்று நினைத்துப் பாட, அதை நீங்கள் தவறாக எடுத்துக் கொண்டால், நானா அதற்குப் பொறுப்பாளி....?"

எனக்கு மெய் சிலிர்த்தது.

"வேதா, உன் அம்மா சம்மதிப்பாங்களா?" என்றேன் நான்.

"என் இன்பம் தான் அவள் இன்பம்." என்று தூய்மை மிளிரச் சிரித்தாள் வேதா.

ஆஹா! அரசலாற்றங் கரைக்குத்தான் இத்துணை அழகு என்று வந்தது? என் வேதா என்றும் என்னை விட்டுப் பிரியாமலேயே இருப்பாள் என்ற உண்மையை அறிந்ததும்தான் அதுவும் சிரிக்கிறதோ?

"பிரித்துப் பிரித்து நிதம் மேகம் அளந்தே;
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை."

நான் பாடிக் கொண்டே வேதாவை நோக்கினேன். இப்பொழுது உண்மையாகவே 'அந்தி வானம்' மேற்கே இல்லை! ○

பெண்டிர் நிலை

ஆ. ரா. இந்திரா

முற்பகுதி நவம்பர் 'உமா'வில் இடம் பெற்றிருந்தது. இது பிற்பகுதி. திருமதி ஆ. ரா. இந்திரா அவர்கள், சென்னை, எத்திராஜ் பெண்கள் கல்லூரியின் தலைமைத் தமிழ்ப் பேராசிரியை. எம். ஏ. பட்டம் பெற்றவர்.

பெண்களின் பண்பாடுகளை ஆராய முற்பட்ட வள்ளுவர் 'வாழ்க்கைத் துணை' என்றே அவர்களைக் குறிப்பிடுகின்றார். ஆனால், ஒன்று. முன்பு கண்ட கலித்தொகைப் பாட்டை ஆதாரமாக வைத்துக்கொண்டு, களவுக்குப் பின், 'உடன் போக்கின்' மூலமாகத்தான் இக் கற்பு வழியை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும் என்று இலக்கியம் வற்புறுத்துவதாகக் கொள்ள முடியாது. பண்டையத் தமிழ்ச் சமுதாயத்தில், ஓர் ஆணோ அல்லது பெண்ணோ அவரவர் மனத்திற்குகந்த துணைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை ஓரளவு இருந்தது. இந்த உரிமையைச் சமுதாயம் முழுவதும் பாராட்டி, ஆதரித்ததாகக் கொள்வதற்கில்லை. அப்படி இருந்திருந்தால், தலைவி ''அன்னை காணின் என் செய்கோ'' என்று அஞ்சும் நிலையோ, ''ஊரில் தூற்றுவார்களே'' எனப் பதறும் நிலையோ சங்க இலக்கியத்தில் இடம் பெற முடியுமா? 'உடன் போக்கு' என்னும் துறைக்குத் தான் தேவை ஏது? கவிஞர் உலகம் மட்டும் சமுதாயச் சூழ்நிலையைச் சித்திரிப்பதோடு, அன்புடை நெஞ்சங்களின் கலப்பினால் ஏற்படும் தெய்வீக உணர்ச்சியைப் பாராட்டி, அந்த உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டெழும் வாழ்வை இலட்சிய வாழ்வாகச் சொல்லில் வடித்திருக்கிறது. உடன்போக்கின் விளைவான கற்பு வாழ்க்கையானாலும், பெற்றோர் செய்து வைக்கும் திருமணத்திற்குப் பின் ஏற்படும் இல்லற வாழ்க்கையானாலும், அவ்வாழ்க்கைக்கு ஒளிவீசும் சுடராகப் பெண்களைப் போற்றியிருக்கிறது. பெண்களின் இந்தப் பெருமையைச் சமுதாயமும் பாராட்டி, அவர்களின் உயர்ந்த நிலையாக ஏற்றுக் கொண்டது.

ஆமாம், சமுதாயமும், இலக்கிய உலகமும் இதை ஒப்புக்கொண்டால் போதுமா? இந்த நிலையைப் பெற்ற பெண்கள், தங்களைப் பற்றி என்ன எண்ணினார்கள் எனக் கேட்கிறீர்கள், இல்லையா?

இல்லற வாழ்க்கையில் முதலடி எடுத்து வைத்துள்ள பெண்ணொருத்தி சமயலறையில் நிற்கிறாள், அவளைக் கேட்போம். மோர்க்குழம்பு தயாரிக்க, புளித்த தயிரைக் கடைந்த தன் செந்தளிர்க் கரங்களால், நெகிழ்ந்த புடவையை அவசரத்தில் திருத்திக் கொள்கிறாள். சேலையில் அவள் கைப்பட்ட இடங்களில் அங்கங்கே தயிர்த்துளி. தாளிப்புப் புகை இவள் கண்களைச் சிவக்கடித்து விட்டது. இவள் அமுதக்கரம் திண்டிய குழம்பு அவள் கணவன் நெஞ்சைக் குளிர்வித்தது என்பதைச் சொல்லவேண்டுமா? தான் அவனுக்காகச் சமைத்த உணவை "இனிது" என அவன் உண்ணும் போது, இவள் முகத்தில்தான் எவ்வளவு மலர்ச்சி!

"முளி தயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல்
முகனே."

இந்தக் குறுந்தொகைப் பாடல் தீட்டும் பெண்ணின் முகப்பொலிவு, அவளுக்குக் குடும்ப வாழ்கையில் இருந்த ஈடுபாட்டினைப் பேசாமல் பேசி விடுகின்றதல்லவா?

இத்தகைய ஈடுபாடு செல்வத்தில் திளைத்து, வசதி நிறைந்த வாழ்க்கை நடத்தும் போது மட்டும் ஏற்படவில்லை. அப்படி இருந்தால் அது ஈடுபாடாகுமா? உண்மையான அன்பாகுமா? பொருள் வளம் வறண்டு விட்ட போதும், அன்பு ஊற்று வற்றாமல் பொங்கி யெழுந்தால் அல்லவா அது அன்பு? இதற்கு எடுத்துக் காட்டாக, செல்வத்தில் மிதக்கும் தன் பிறந்த வீட்டையும், தன் ஏழைக் குடிலையும் எண்ணி ஒரு தலைவி பேசுகிறாள்:

"தேனும், பாலும் கலந்த கன்னல் நீரானாலும் அதை என் பெற்றோர் வீட்டில் இருந்து பெறுவதைவிட, என் கணவனுடன் இருந்து-என் குடும்பத்தின் அரசியாய்—ஒரு சிறு மான் பருகுவதற்கும் போதாத எங்கள் கிணற்றின் கலங்கிய நீரே எனக்குச் சிறந்தது."

சமுதாயத்திலும், இலக்கியத்திலும் பெண்களின் தகுந்த நிலையாகத் தரப்பெற்ற குடும்பப் பொறுப்பினைப் பெண்களும் மகிழ்ச்சியுடனேயே ஏற்றுக் கொண்டிருந்தார்கள். வாழ்க்கைத் துணைக்குரிய எல்லா நலங்களையும் பெற்றிருந்தார்கள். மனை விளக்குகளாக வாழ்ந்து, வீட்டிற்கும் ஒளி தந்து, தங்களையும் ஒளி வட்டத்தில் நிறுவிக் கொண்டார்கள். குடும்பப் புகழ் தேயாமல், விருந்தினரை உபசரித்து; சமுதாயத்துடன் ஒப்புரவு குன்றாமல் வாழ்ந்தார்கள். பெருமன நிறைவுடன் அன்பு வாழ்க்கையை அவர்களே ஏற்று நடத்தும்போது, கொண்ட கணவனைத் 'தோன்றாத் துணைவனின்' தோற்றமாய், தங்கள் கண்கண்ட தெய்வமாய்த் தானே அவர்கள் காணமுடியும்? கணவனிடம் குன்றாத அன்புடனும், மண வாழ்வின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட மலர்ச்சியுடனும் வாழ்ந்த அவர்களிடம் 'கற்பு எனும் பெருந்திண்மை' தானாகச் சரணடைந்தது.

பெண்ணின் இப் பெருமையை அக்கால ஆண்மகனும் உணர்ந்திருந்தான். வீட்டரசிக்குப் பல விஷயங்களில் முழு உரிமை; சில வற்றில் சம உரிமை. ஏழைப் புலவர்—ஆனால், சிந்தையின் நிறைவில் பெருஞ் செல்வந்தர்—பெருஞ் சித்திரனார், தான் பரிசிலாகப் பெற்று வந்த பொருளை என்ன செய்தார், தெரியாதா? தன் இல்லக் கிழத்தியை அழைத்து, "இதோ, இந்தப் பொருள்களை நீ நாளைக்கு வேண்டுமே என்று

ஒதுக்கி வைக்க வேண்டாம். யார் யாருக்கு உதவவேண்டும் என்றிருக்கிறதோ, அவர்களுக்கெல்லாம் தாராளமாகத் தயக்கமில்லாமல் கொடு. என்னைக் கூடக் கேட்க வேண்டாம். நீ வீட்டுக்குத் தலைவியல்லவா?

இன்னோர்க்கு என்னாது என்னொடுஞ்சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழவோயே!''

என்கிறார்.

பழந்தமிழ் மகளிர் இல் வாழ்க்கையில் இவ்வளவு உரிமையுடன், தலைவனோடு ஒற்றுமையாக வாழ்ந்தனர். பயிர்களுக்கு நடுவே களைகள் விளைவதுபோல், பெண்டிர்களிலேயே சிலர் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடாமல், பிற குடும்பங்களின் அமைதி கலைவதற்கும் ஆதாரமாக இருந்திருக்கலாம். அப்படி இல்லை என்றால் 'பரத்தையிற் பிரிவு' முதலான துறைகள் சங்க இலக்கியத்தில் வளர்ந்திருக்குமா? சமுதாய வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும் ஏற்படக் கூடிய சில சிக்கல்கள், அத்தகைய சூழ்நிலைக்கும் இடமளித்தனவோ, என்னவோ? இந்த ஆராய்ச்சியில் இறங்க இப்போது தேவையில்லை. பொதுவாகப் பழந்தமிழ் இலக்கியமும், சமுதாயமும் பெண்மைக்குப் பெருமதிப்பு தந்தது; வீட்டில் அவ் அன்பு விளக்குகளை அரசிகளாக வாழ்வித்தது.

இப்படிக் கொள்வதனால் 'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்த விந்தை மனிதரே' தமிழர் என்பது ஆகாது; கல்வியிலும், கலையிலும் தேர்ச்சி பெறுவதற்கு விரும்பிய பெண்கள், தங்கள் முயற்சியில் ஈடுபடுவதைச் சமுதாயம் தடுத்து நிறுத்தவில்லை. இசைக் கலையில் பெண்கள் கொண்டிருந்த நாட்டமும், பயிற்சியும் அவர்கள் தினசரி வாழ்க்கையுடன் கலந்து விட்டன. அம்மானை, ஊசல், கந்துகவரி முதலான பாடல்களே இதற்குச் சாட்சி. நாட்டியத்தில் பெண்கள் பலர் ஈடுபட்டு, 'விறலியர்கள்' என நின்றார்கள். கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்று, சிறந்த புலவர்களாக விளங்கிய ஔவையார், காக்கைப் பாடினியார், பொன்முடியார் முதலியோரின் பெருமை தெரியாதா?

இப்படித் தனிப்பட்ட கலைகளில் தேர்ச்சி யடைந்ததோடுமல்லாமல், சமுதாய உணர்ச்சியும் நாட்டுப் பற்றும் மிகுந்து, நாட்டுக்காகத் தொண்டு புரிந்த வீரமங்கையரும் தமிழ் நாட்டில் இருந்தனர். நாட்டின் மீது படையெடுத்து வந்த பகைவனோடு போர் செய்யச் சென்ற தன் கணவனும், தமையனும் போர்க் களத்தில் இறந்த பிறகும், முரசைக் கேட்டவுடன் தன் ஒரே மகனைப் போர் முனைக்கு அனுப்பினாள் ஒரு வீரப் பெண். அவள் துணிவால் ஏற்பட்ட நடுக்கம், புலவர் குரலில் எவ்வளவு தெளிவாகத் தெரிகிறது:

'' கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிர் ஆதலின் தகுமே
..............................இன்றும்
இருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
....
ஒரு மகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே.''

இப்படி எத்தனையோ வீரத்தாயர்கள் சங்கப் பாடல்களில் காட்சியளிக்கின்றனர்.

இத்தகைய செய்திகளெல்லாம் பெண்களுக்குப் பல துறைகளில் இருந்த சிறப்பான ஆற்றலையும், பழந்தமிழ்ச் சமுதாயம் அவற்றைப் பாராட்டினமையையும் தெரிவிக்கின்றன. ஆனால், அவர்களுடைய தனிச்சிறப்பாக – உயர்ந்த நிலையாகப் பேசப்படுவது அவர்கள் மனையறம். பிறந்த இடத்திலிருந்து விலகி எங்கு சென்றாலும், தாமாகவே வாழ்வை அமைத்துக் கொண்டாலும், பெற்றோர்கள் வாழ்வை அமைத்துக் கொடுத்தாலும், அவர்கள் வாழ்க்கை சந்தனம் போல் மணம் வீசிற்று; முத்தைப் போல் சுடர் தெறித்தது; இசையைப் போல் ஆன்ம இன்பத்தைக் கொடுத்தது. எல்லாம் இல்லறத்தில்தான். இதுதானே பெண்டிரின் உயர்நிலை?

''அறம் தலை பிரியா ஆறும் மற்று அதுவே!'' என்னும் சொல் நினைவில்லையா? ★

இந்தப் புனைபெயர்

'கலைப்பித்தன்'

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் – அந்த ஒரு நாளிலே....!

ஆலயத்தில் பாதிரியார் என் தலையில் தண்ணீர் ஊற்றி, 'சுந்தர ராஜன்' என்று பெயர் வைத்தார். 'குவா, குவா' என்று அழுதேன். ஆம்; பிறந்த பொழுதும் அழுதேன், பெயர் வைக்கும் பொழுதும் அழுதேன்; எழுதும் பொழுது அழக் கூடாது என்பதற்காகத் தான் 'கலைப்பித்தன்' என்ற புனை பெயரிலே நான் புகுந்தேன்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன், முதன் முதலில் ஒரு கட்டுரையெழுதி, அதை 'ஹிந்துஸ்தான்' என்ற வாரப் பத்திரிகைக்கு அனுப்பினேன். அதன் ஆசிரியர் திரு ரா. நாராயண அய்யங்கார் என் கட்டுரையைப் பிரசுரித்து, என் புனை பெயரைக் கௌரவித்தார். பின்னர் தொடர்ந்து அதில் எழுதினேன். பத்திரிகை உலகில் நான் திரு ரா. நா. அவர்கட்கு என்றும் கடமைப் பட்டுள்ளவன்.

இந்தப் பெயர் வெறும் பெயரல்ல. உண்மையிலேயே கலையின் மீது எனக்குப் பித்து; கன்னித் தமிழின்பால் எனக்குக் காதல். அடியேன் இருபத்து நான்கு மணி நேரமும் சிந்திப்பதற்காக ஆண்டவன் என்னை ஊனமாக்கி விட்டான் போலும்! 'கால் நடையின்றி இவரது தமிழ் நடை முழுவேகத்துடன் செல்கிறது' என்று 'சுதந்திர தீபம்' என்னும் என் நூலுக்கு முன்னுரை எழுதிய சுவாமி சுத்தானந்த பாரதியார் சொல்கிருர்.

1946-ஆம் ஆண்டு நான் ஆசிரியருக இருந்த 'கலைமல'ரில் 'நக்கீர வாரிசு' என்ற புனைபெயரில் புத்தக விமர்சனம் செய்து வந்தேன். 'அம்புலி' என்ற சிறுவர் வாரப் பத்திரிகையில் 'கலையண்ண'வாக இருந்தேன்.

ஆனுல் ?....

'ஆனுல்' என்ற இந்த வார்த்தையை மனவேதனையுடன் வெளியிடுகிறேன். என் புனைபெயரோடு போட்டியிட்டு, இப்பொழுது எத்தனையோ 'கலைப்பித்தர்கள்' தோன்றி விட்டனர். கீரைக் கடைக்கு எதிர்க்கடையாகக் கீரைக் கடையே வைக்கும் தமிழர்கள், 'கலைப்பித்தன்' என்ற என் பெயர்மீது காதல், அல்ல – அல்ல – மோகங் கொண்டு என் புனைபெயரில் புகுந்து வருகிருர்கள். இந்த 'உமா'வைக் கண்ணுற்ற பிறகாவது, அவர்கள் என் புனைபெயர் மீது கொண்ட மோகத்தைக் கை விடுவார்களா ?

'கோவிலிலே வைத்த இயற்பெயரை விட்டுவிட்டானே!' என்று ஒரு கும்பல் அங்கலாய்க்கிறது. யார் எதைச் சொன்னல் என்ன ? என் புனைபெயர் என்னோடு இணைந்து விட்டது; ஆம்....! ★

சொந்தப் பெயர்களுக்குத் திரை போட்டுக் கொண்டு உலவி வரும் பேனக்கள் பல உண்டு. எழுத்துலகிலே புனைபெயர் விளக்கம் சுவைமிக்க வரலாறு; சிலருக்கு அது சிதம்பர ரகசியம்; பலருக்கு அது உண்மைக் கதை. இப்பகுதியில் இதுவரை பங்கெடுத்துக் கொண்ட பெயர்கள் இவை: **மகரம், ஜெகசிற்பியன், வாசவன், மாறன், ஜடாதரன், சுகி, கஜமுகன், நவீனன், கேதாரி, இளம்பாரதி.** அசல் கலைப்பித்தன் – ஏன், முதற் கலைப்பித்தன் இப்பொழுது விளக்கம் தருகிருர் – வேதனையோடு. ஆம்; இவர் முழு நேரச் சிந்தனையாளர். பெரிய தமிழ்ப் பைத்தியம்.

1973/17

உமா–ராஜன் தம்பதியைப் புதுடில்லி வரவேற்றது; புது மணம் தந்தது. சுவையான அனுபவங்கள்தாம்!

புது மணம்

'கஜமுகன்'

1. புது டெல்லி வந்துவிட்டது!

ஜி. டி. எக்ஸ்பிரஸ் ஆக்ராவை விட்டுப் புறப்பட்டு நல்ல வேகத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. ஆம்; புது டில்லி வந்து விட்ட மாதிரிதான்!

புத்தம் புது மலராக, புது மெருகுடன் மினு மினுக்கும் உமா, ராஜனைக் கைப்பிடித்து வாழ்க்கைப் பாதையில் முதல் பிரயாணம் தொடங்கியிருக்கிருள். எட்ட இருந்து ரசித்தது போய், கிட்ட நெருங்கித் தொட்டு மகிழும் உரிமையை அவன் பெற்று விட்டான். அவனுக்காகவே வளர்ந்த உமா, இப்போது அவனுடைய உடைமையாகி விட்டாள்.

பெற்று வளர்த்தவர்களை விட்டுப் பிரிந்த துயரம் பேஸின் பிரிட்ஜ் ஜங்ஷனைத் தாண்டியவுடனேயே மறைந்து விட்டது. கணவன் கிடைத்துவிட்டால், இந்தப் பெண்களுக்குத்தான் எவ்வளவு இறுமாப்பு வந்து விடுகிறது! அவன் அவளது கழுத்தில் மூன்று முடிச்சுகள் போடுகிறவரை, நாணிக் கோணி, கூனிக் குறுகி, அடக்க ஒடுக்கமாயிருந்ததெல்லாம் சற்றுத் தளர்ந்து, சுதந்தரத்துடன் தலை நிமிர்ந்து பார்க்கும் தைரியமல்லவா வந்து விடுகிறது?

புதுமணத் தம்பதிகளுக்கு ரெயில் பிரயாணத்தைப் போல மகிழ்ச்சி தருவது வேறு எதுவுமே இருக்க முடியாது.

சென்னையை விட்டுப் புறப்பட்டதிலிருந்து ரெயிலில் கழித்த அந்த நாற்பத்து நாலு மணி நேர வாழ்வும் ராஜனின் மனக் கண் முன்னே தோன்றி அவனை மெய்ம் மறக்கச் செய்தது.

'டிபன் ஸெட்'டில் கொண்டு வந்த புளியோதரையும், தயிர்ச் சாதமும், மிளகாய்ப் பொடி தூவிய இட்டிலியும், பொற் கரங்களால் அவள் எடுத்துக் கொடுக்கக் கொடுக்க, அவன் அடங்காப் பசியுடன் உண்டபோது, இந்த லோகத்திலேயே இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை.

பக்கத்திலிருந்த பிரயாணிகளைக் கூடப் பொருட்படுத்தாமல் அவர்கள் சிரித்து மகிழ்ந்ததை நினைத்தால் வெட்கமாகக்கூட இருந்தது உமாவுக்கு.

மதுரா ஜங்ஷனில் வண்டி நின்றதும், அவன் சிந்தனை கலைந்தது.

"எழுந்திருக்கலாமா?" என்று உமா கண்ணை மூடியவாறே மெல்லிய குரலில் கேட்டாள்.

"இப்போதுதான் மத்ரா வந்திருக்கிறது."

ஆயிற்று. கோஸிக்கலன் வந்ததும் உமாவை எழுப்பினன். இருளும் நீங்கி, உதயத்தின் வெளிச்சமும் வந்து விட்டது.

உமா பல் துலக்கி விட்டு வந்து. படுக்கையை உதறிக் கட்டினள், கரி படிந்திருந்த புடவைக்குப் பதிலாக வேறு நல்ல புடவை ஒன்றைக் கட்டிக் கொண்டு வந்தாள்.

டெல்லி நெருங்கி விட்டதற்கு அடையாளமாக மசூதிகளும, இடிந்த கோட்டைகளும் அங்கங்கே விரவிக் கிடந்தன. ஹுமாயூன் கல்லறை, புராணக்கிலா, வரிசை வரிசையாக ஸர்க்கார் கட்டிக் கொடுத்த அழகற்ற மொட்டை வீடுகள் எல்லாம் கிடந்தன. புது டெல்லியும் வந்து விட்டது.

"இதுவா புது டெல்லி ஸ்டேஷன்?" என்ருள் உமா.

"ஆமாம்."

"கும்பகோணம் ஸ்டேஷன்கூடத் தேவலையே! என்னமோ தலை

நகரமென்றீர்கள், இவ்வளவு சின்ன தாய், அழகே இல்லாமல் அழுது வடிகின்றதே...?''

''நீ அடுத்த தடவை ஊரிலிருந்து வரும்போது இந்த ஸ்டேஷன் அடையாளம்தெரியாமல் மாறி விடும்....! அதோ பார், கட்டிக் கொண்டிருக்கிறார்கள்...'' என்று அங்கு ஒரு பக்கத்தில் நடந்து கொண்டிருந்த கட்டிட வேலையைச் சுட்டிக் காட்டினான்.



''இப்போதுதான் வந்து இறங்கியிருக்கிறோம். அதற்குள் ஊருக்குப் போகிறதைப் பற்றிப் பேசுகிறீர்களே!'' என்று முகத்தில் செம்மை படரத் தோளில் இடித்துக் கொண்டாள் உமா.

நண்பர் குழாம் அவனை வரவேற்கக் கூடி விட்டது.

உமா ஒதுங்கி நின்றாள்.

ஸ்டேஷனுக்கு வெளியே திறந்த டாங்கா வண்டியில் புதுத் தம்பதி இருவரும் ஏறிக் கொண்டார்கள். நண்பர் குழாம் சைக்கிள்களில் வண்டியைத் தொடர்ந்தது. கல்யாணத்தின் போது ஸாரட்டில் ஊர்வலம் போன இனிய நினைவு அது சமயம் அவளுக்கு வந்தது.

2. ''இதுதான் வீடா?''

வண்டி ஒரு பங்களாவுக்குள் நுழைந்த போது, உமாவுக்குப் பெருமையாக இருந்தது.

''இவ்வளவு பெரிய பங்களாவா நமக்கு?'' என்று கேட்டாள்.

ராஜன் சிரித்து விட்டான்: ''லோயர் டிவிஷன் க்ளார்க்கிற்கு இவ்வளவு பெரிய பங்களாவைக் கட்டிக் கொடுத்தால் சர்க்கார் கதி என்ன ஆவது? இந்தப் பங்களாவுக்குப் பின்புறம் அவுட் ஹவுஸ் என்ற மாளிகையிருக்கிறது. அது தான் நமது இல்வாழ்க்கையின் அரண்மனை,'' என்று சொல்லி வீட்டின் பின்புறம் வண்டியை ஓட்டச் சொன்னான் ராஜன்.

நாலைந்து ஒற்றையறை வீடுகள் தமிழ் நாட்டு நகர ஸ்டோர் பாணியில் அமைந்திருந்தன.

உமா சுற்று முற்றும் பார்த்தாள். சலவைத் தொழிலாளி ஒருவன் அழுக்குத் துணிகளைப் பிரித்துக் குறி போட்டுக் கொண்டிருந்தான். பால்க்காரன் ஒருவன் அழுக்கு மயமான கட்டில் ஒன்றில் உட்கார்ந்து ஹுக்கா பிடித்துக் கொண்டிருந்தான். தமிழ் நாட்டு சாஸ்திரி ஒருவர் தருப்பைக் கட்டு சகிதம் சைக்கிளில் ஏறி 'சவாரி' புறப்பட விருந்தார்.

''உமா, என்ன ஒரேயடியாய் திகைத்துப்போய் விட்டாய்? இவர்களுடன்தான் நாம் குடியிருக்க வேண்டும். வர்க்க பேதமற்ற சமுதாய வாழ்வுக்கு இது ஒரு உதாரணம்,'' என்று சொல்லிச் சிரித்தான் ராஜன்.

அவன் சொன்னது அவளுக்குப் புரியவில்லை. கிராமத்தில் ஐந்தாவது வரைப் படித்தவளுக்குப் பெரிய அரசியல் வார்த்தைகளுக்குச் சட்டென்று எப்படி அர்த்தம் தெரிய முடியும்...?

''உமா, இது ஒன்றுதான் நமக்கு அறை. இதில்தான் சமையல், சாப்பாடு, தூக்கம் எல்லாம். நண்பர்களையும் இதில்தான் நாம் இருவரும் வரவேற்க வேண்டும்.''

சாஸ்திரிகளின் மனைவி உமாவை அன்புடன் வரவேற்றாள்.

> தகுந்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்; தீச்செயல்களுக்குப் பயப்பட வெண்டும்; கெட்டவர்களைக் கண்டால் தூரத்திலேயே ஒதுங்கிவிட வேண்டும்; ஆண்டவனிடம் பக்தி கொள்ள வேண்டும்.
>
> — விவேக சிந்தாமணி

ராஜன் விஷமச் சிரிப்புடன் வெளியே போனான்.

"வரலாம்," என்று குரல் கொடுத்தாள் உமா.

அவள் கட்டிக் கொண்டிருந்த புடவையைப் பார்த்துத் திடுக்கிட்டான். கூறைப் புடவையை எடுத்துக் கட்டிக் கொண்டிருந்தாள் அவன் மனைவி.

"உமா, இவ்வளவு ஜரிகை போட்ட புடவையெல்லாம் வேண்டாம். 'புஸு புஸு'வென்று நடக்க முடியாமல் தடுக்கும். இதெல்லாம் கல்யாண வீடுகளுக்கு வைத்துக் கொள். பளிச்சென்று ஒரு 'வாயில்' புடவையை எடுத்துக் கட்டிக் கொள்."

உமாவுக்கு முகம் சிறுத்துவிட்டது. கல்யாணப் புடவையை மறுபடியும் கட்டிக்கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்று மகிழ்ந்தாள். ராஜனின் வார்த்தைகள் அந்த மகிழ்ச்சியில் மண்ணைப் போட்டுவிட்டன.

'வாயில்' புடவை ஒன்றைக் கட்டிக்கொண்டு வந்தாள். ராஜன் அவளை ஏற இறங்கப் பார்த்து முகத்தைச் சுளித்தான்.

"ஏன், நன்றாக இல்லையா?"

"அப்படிச் சொன்னேனா? புடவை கணுக்காலுக்கு மேல் உயர்ந்திருக்கிறது. இன்னும் தழையக் கட்டிக்கொண்டால்தான் அழகாயிருக்கும்."

"தெருவைப் பெருக்கிக் கொண்டு போக வேண்டுமா?"

"வெளியில் வந்து பிறரைப் பார்த்தால் நீயே வெட்கப்படுவாய். கொஞ்சம் தழையக் கட்டிக் கொள், உமா....!"

புது டெல்லியின் வீதி அமைப்புக்களையும், இந்தப் பரந்த நாட்டின் பல்வேறு வகைப்பட்ட மக்களும் விதவிதமாக உடை அணிந்து செல்வதையும், பார்த்து அனுபவித்த

"மடி, விழுப்பு என்று சாஸ்திரம் கொண்டாடும் நாங்களே இங்கே இருக்கிறபோது நீ ஏனம்மா வருத்தப்படுகிறாய்? இன்னக்கி எங்களகத்திலேயே சாப்பிடலாம். இந்த ஊரிலே கரி அடுப்பிலேதான் எல்லாம் செய்ய வேண்டும். அது மூட்ற விதமெல்லாம் சொல்லித் தருகிறேன்," என்று அந்த அம்மாள் கனிவுடன் பேசி, உமாவின் சஞ்சலத்தைப் போக்கினாள்.

இந்த நடுக்காட்டில் நம்முடன் வசிக்க தமிழ் பேசும் ஓர் அம்மாளாவது இருக்கிறாளே என்று உமா சந்தோஷப்பட்டாள்.

3. கன்னாட் ப்ளேஸ்

அன்று ராஜன் சற்று சீக்கிரமே அலுவலகத்திலிருந்து வீடு வந்து சேர்ந்து விட்டான்.

உமா டீ போட்டுக்கொடுத்தாள்.

"உமா, வந்து ஒரு வாரமாகிறதே? இந்த ஊரையெல்லாம் பார்க்க வேண்டாமா?"

"வீடு இப்பதானே ஒழுங்காகியிருக்கிறது? பார்த்துக் கொண்டால் போகிறது."

"இன்று, கன்னாட் ப்ளேஸுக்குப் போகலாம்."

"அது என்ன?"

"வா காட்டுகிறேன். போய், வேறு அழகான புடவையாக எடுத்து மாற்றிக்கொண்டு வா."

"எங்கு போய் மாத்திக்கொள்கிறது? நீங்கள் கொஞ்சம் வெளியே போய் இருங்கள்....!"

வண்ணம் உமா சென்று கொண்டிருந்தாள். நடு நடுவே பல கேள்விகளைப் போட்டு ராஜனைத் துளைத்துக் கொண்டிருந்தாள். அவனும் தன் புது மனைவிக்குப் பொறுமையுடன் பதில் சொல்லி வந்தான்.

தீய எண்ணத்துடன் ஒருவன் பேசினாலும், செயலில் இறங்கினாலும், வண்டியை இழுக்கும் மாட்டின் காலை வண்டிச் சக்கரம் பின் பற்றிச் செல்வது போல, துன்பம் அந்த மனிதனைப் பின்பற்றிச் செல்கிறது.

— புத்தர்

'குயீன்ஸ் வே' வழியாக வந்து 'கன்னட்' வட்டத்துக்குள் பிரவேசித்து, 'வராண்பி' பாதையில் சுற்றி வர ஆரம்பித்தார்கள்.

''சன்னு ஜோரு காரம்'' என்று ஒரு பையன் கூக்குரலிட்டுக் கொண்டு வந்தான்.

''இது என்ன?''

''காரமும் மசாலாவும் தடவிய கடலை. வேணுமா?''

''வேண்டாம். அதோ யாரோ பானையிலே கொண்டுபோறானே?''

''அதுவா, கோல்குப்பேன்னு பெயர். ஏதோ புளித்த தண்ணீரை அகல் அளவு பூரி மாதிரிப் பண்ணி அதிலே விட்டுக் கொடுப்பான். இந்த ஊரிலே நடுரோடிலே நின்னு அதை வாங்கித் தின்னுவார்கள். சாப்பாட்டு விஷயத்திலே இந்த ஊர்க்காரன் இடம் பார்க்க மாட்டான். கிடைத்த இடத்தில் கிடைத்த பண்டத்தை வாங்கிச் சாப்பிட்டு விடுவான். 'ஆலு சோலே' என்று ஒன்று உண்டு. கொத்துக் கடலையைச் சுண்டல் மாதிரி செய்து அதில் உருளைக் கிழங்கை முழுசாக வேக விட்டுப் போட்டு, பச்சை மிளகாயை முழுசாகப் போட்டுக் கொடுப்பான். ஒரு பிளேட் சாப்பிட்டால், வேறே ஒன்றும் வேண்டாம்....''

''சரி சரி, வாருங்கள் போகலாம். நடந்து தானே போக வேண்டும்?''

''ஆமாம்; பஸ்ஸுக்குக் காசேது? நாளையிலிருந்து சைக்கிளில் போகலாம்....''

''அய்யய்யே, நான் மாட்டேன். புது வழக்கம் இது!''

''அசடே, வர்றவழியிலே பார்க்கவில்லையா? பின்னே மனைவி, அவள் மடியில் ஒரு சிசு, முன்னே ஒரு குழந்தை. ஜாம் ஜாம்னு போயிட்டிருந்தானே ஒரு ஆசாமி! இங்கே இதெல்லாம் வெட்கப்பட வேண்டிய சமாச்சாரம் இல்லை. ஏழைகள் வாகனம் சைக்கிள். அதுதான் நமது மோட்டார்.''

4. செங்கோட்டை

நவம்பர் மாதம் பிறந்தது. கொஞ்சம் கொஞ்சமாகக் குளிர் பரவத் துவங்கியது. பகலில் வெய்யில் அடித்தாலும், இரவில் நன்றாகக் குளிர்ந்தது. ராஜன் முன் யோசனையோடு, இரண்டு பேருக்குக் காணும்படியாக 'ரஸாய்'— பஞ்சு மெத்தை தைத்து வைத்திருந்தான். அவளுக்கு ஒரு 'ஸ்வெட்டர்' வாங்கிக் கொடுத்திருந்தான். 'அதை எப்போதும் போட்டுக் கொண்டிருக்க வேண்டும்; இல்லாவிடில் நிமோனியா வந்துவிடும்' என்று பயமுறுத்தினான்.

ஒரு ஞாயிற்றுக் கிழமை.

செங்கோட்டை முன் மைதானத்தைக் காட்டி, ''உமா, இங்கு ஆகஸ்டு பதினைந்தாம் தேதி ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடி, நமது பிரதம மந்திரி கொடி ஏற்றுவதைப் பார்ப்பார்கள்,'' என்று ராஜன் கூறினான்.

கோட்டை பூராவையும் சுற்றிக் காண்பித்தான். அரச வாழ்வின் போகங்கள் எப்படியிருந்திருக்கும்

என்பதை உமா கற்பனை செய்து பார்த்தாள். மயிலாசனம் இருந்த இடம் காலியாக இருப்பதை அவன் காண்பித்தான். யமுனை நதி கோட்டையை ஒட்டி ஓடுவதை மதில் மாடத்திலிருந்து பார்த்து மகிழ்ந்தாள் உமா.

நண்பர்கள் சிலர் சந்தித்துப் பிரிந்தார்கள்.

''உமா, உன்னை அறிமுகம் செய்து வைத்தால் நமஸ்காரம் என்று நீ சொல்ல வேண்டாமா? அப்படி நீதான் சொல்லவில்லை; அவர்கள் சொன்ன பிறகாவது பதிலுக்குச் சொல்லவேண்டாமா? பிரபாகர் என்னுடைய செக்ஷன் ஆபீஸர். மாலதி அவரது மனைவி....!''

''எனக்கு நடு ரோடில் யாரையும் அறிமுகம் செய்து கொண்டு பழக்கமில்லை. வீட்டுக்கு வருகிறவர்களைத்தான் ''வாருங்கள்'' என்று அழைக்கத்தெரியும். பட்டணத்து மரியாதையெல்லாம்...''

''பட்டிக் காட்டுக்கு எப்படித் தெரியும்?'' என்று கோபத்தோடு சீறி விழுந்தான் ராஜன்.

5. குதுப்மினார்

டிசம்பர் மாதம். எதைத் தொட்டாலும் ஐஸ் கட்டியைத் தொட்டது போலிருந்தது!

''கொஞ்சம் உள்ளடக்கமாக ஒரு வீடு பாருங்களேன். உங்களுக்குச் சிரமம் இல்லாமல், நான் எழுந்து காரிகளைப் பார்க்கிறேன்.''

''உமா, இந்த ஊரில் குடியிருப்பது ரொம்ப சிரமம். சர்க்கார் வீடு கொடுத்தாலும், அவனவன் தான் கட்டிய வீடு போல நினைத்துக் கொண்டு அதிகாரம் பண்ணுவான். இந்த வீடு அவுட் ஹவுஸாயிருந்தாலும் பிடுங்கல் இல்லாமல் இருக்கிறோம். நம்ம கூட இருக்கிறவண்ணானும் பால்காரனும் காட்டுகிற அன்பும் ஆதரவும்கூட 'நம்ம மனுஷாள்' என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் காட்ட மாட்டார்கள். பாவம், நீ ரொம்ப அவஸ்தைப்படுகிறாய். பிரபாகரனிடம் சொல்லி வைக்கிறேன்.''

அப்போது பிரபாகரனும் அவன் மனைவி மாலதியும் அங்கு வந்து விட்டார்கள்....!

''உமாவுக்குக் குளிர் தாங்க முடியவில்லை. நீங்கள் ஏதாவது வீடு பார்த்து சொல்லுங்களேன்....''

''அதற்குத்தான் உன்னைத் தேடி வந்தேன். மாலதி

ஊருக்குப் போகிறாள். வருவதற்கு ஆறு மாதங்களாவது பிடிக்கும். நீங்கள் வந்து விடுங்கள் என் வீட்டிற்கு. என் மனைவி வருவதற்கும், உன் மனைவியை அனுப்புவதற்கும் சரியாயிருக்கும்....!''

உமா மனசில் நினைத்துக்கொண்டாள்: ''என்ன இப்படி வெட்கமில்லாமல் பேசிக் கொள்கிறார்கள்?''

அதற்குள் மாலதி, ''உமா, அன்று உன்னைப் பார்த்ததுமே, உன்னைத்தான் என் வீட்டில் வைத்துவிட்டுப் போக வேண்டுமென்று தீர்மானித்து விட்டேன். உனக்கு ஆட்சேபணையில்லையே!'' என்று கேட்டாள்.

''எனக்கு என்ன ஆட்சேபணை? இப்படி யார் வலிய வந்து வீடு கொடுக்கப் போகிறார்கள்?''

''ராஜன், நாளை கிருஸ்துமஸ் லீவு ஆரம்பமாகிறது. குதுப் மினாருக்கு 'பிக்னிக்' போய் வரலாமா? உன் மனைவியும் குதுப்மினார் பார்த்ததில்லையே!''

''நான் எதற்கு சார்....?''

''அதனால் என்ன? நண்பர் ஒருவரின் கார் ஒன்று கிடைக்கிறது. போய் வரலாம். உன் மனைவியும் மாலதியும் பழகுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்,'' என்றான் பிரபாகரன்.

மறுநாள் பத்து மணிக்கு மேல் பிரபாகரன் தம்பதியும் ராஜன் தம்பதியும் குதுப்மினாருக்குப் புறப்பட்டார்கள்.

வழி நெடுகிலும் இடிந்த கோட்டைகளும் மசூதிகளும் மறைந்த மாட்சியை நினைவூட்டிக் கொண்டிருந்தன. கால வெள்ளத்தில் மாறி மாறி வந்த அரசாட்சியின் சின்னங்களாக அவை அப்பகுதிகளில் எஞ்சி நின்றன.

உமாவுக்கு ஒவ்வொரு சிதிலத்தையும் பற்றிய வரலாற்றை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தாள் மாலதி.



நெடிதுயர்ந்து நின்ற குதுப் மினாரைப் பார்த்து உமா வியந்து போனாள். அடுக்கடுக்காகக் கட்டப்பட்டிருந்த அந்த மினார் அடி அகலமாகவும் உச்சி குறுகியும் காணப்பட்டது. உச்சிவரை ஏறிச் செல்வதற்குப் படி வரிசை இருந்தது.

மாலதியும் – பிரபாகரனும் மினாரில் ஏறவில்லை. உமாவும் – ராஜனும் ஏறினார்கள். மேலே போகப் போகப் பாதை குறுகி, ஒரே இருட்டு மயமாகி வந்தது. பழைய கட்டடங்களுக்குரிய தனி நாற்றம் வீசியது. சுமார் இருநூற்றைம்பது படிகளைத் தாண்டி உயரே ஏறிவிட்டார்கள். உச்சியில் கம்பிகள் போட்டு வளைத்திருந்தார்கள். மேலே வானம். கீழே கண்ணுக்கெட்டிய தூரம் வரை மரம் செடி கொடிகளும், வறண்ட நிலங்களும் காட்சியளித்தன. பதினேரு மைல்களுக்கப்பால் தலைநகரம் ஒரு பொம்மை நகரம் போலிருந்தது!

உமா ஒரு குழந்தையைப்போல் ஒவ்வொன்றையும் காட்டி ஆர்ப்பரித்தாள்.

விடுமுறைக்குள்ளேயே பிரபாகரன் வீட்டுக்குக் குடிபோய் விட்டான் ராஜன்.

சொற்ப நாள் பழக்கத்திலேயே உமா, பால்காரன் குடும்பத்துடனும், சலவைத் தொழிலாளி குடும்பத்துடனும், சாஸ்திரி மனைவியுடனும் ஒட்டி உறவாடி விட்டாள். ஆதலால் அவர்களைப் பிரிந்து செல்வது கஷ்டமாகத்தான் இருந்தது.

பிரபாகரன் இருந்த லோதி ரோடு வீடு பெட்டி போல் குளிருக்கு அடக்கமாயிருந்தது.

அவர்கள் அங்கு போன ஒரு வாரத்துக்கெல்லாம் மாலதி ஊருக்குப் புறப்பட்டு விட்டாள். அவளுக்குப் பிரயாணத்துக்கு வேண்டிய உணவையெல்லாம் உமாதான் தயாரித்துக் கொடுத்தாள்.

''உமா, எங்கள் கல்யாணத்துக்குப் பிறகு என் கணவர் இப்போதுதான் தனியாக இருக்கப் போகிறார். பார்த்துக் கொள். குளிர் முடியும் வரை வெந்நீர் மட்டும் போட்டுக் கொடுத்து விடு.''

''ஏன், எங்கள் வீட்டில் சாப்பிடக் கூடாதா?''

''அதெல்லாம் வேண்டாம். அனாவசியமாகச் சிரமப்படாதே!''

''காப்பியாவது சாப்பிடட்டும்.''

''அது அவர் இஷ்டம்.''

''சீக்கிரம் வந்து விடுவீர்களா?''

''கவலைப் படாதே. நான் வந்து உன்னை அனுப்பி வைக்கிறேன்.''

உமா வெட்கமுற்றுப் பேசாமல் இருந்தாள்.

மாலதி ஊருக்குப் போய் விட்டாள். பிரபாகரன், மிகுந்த வற்புறுத்தலின் பேரில் காலை காப்பி மட்டும் சாப்பிட்டான். லீவு நாட்களில் எங்கேயாவது போய்விடுவான்.

கொல் மார்க்கெட், பகாட்கஞ்ச், பழைய டில்லி, லக்ஷ்மி நாராயண மந்திர், புத்த விஹார், ஆந்தி ஆகிய பெயர்கள் அவளுள் சுழன்றன. உமா சிரித்துக்கொண்டாள்!

6. குழந்தை பிறந்தது

''உமா, உமா!'' என்று மகிழ்ச்சி பொங்க ராஜன் கூப்பிட்டான்.

''உமா, மாலதிக்கு...''

உமா பரக்கப் பரக்க வந்தாள்!

''குழந்தை பிறந்து விட்டதா? பெண்தானே?'' என்று மகிழ்ச்சியுடன் கேட்டாள்.

''ஆமாம்; நீதான் ஜெயித்தாய். நீ சொன்னபடிதான்....!''

''நாளைக்கு ஒரு விருந்து வைக்க வேண்டியதுதான். பிரபாகரனை நம் வீட்டில் சாப்பிடச் சொல்லி விடுங்கள்.''

7. "போய் வா!"

"உமா, உங்கப்பாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது....''

"என்ன எழுதியிருக்கிறார்?''

"இந்த மாதம் இருபதாம் தேதி நல்ல நாளாம்.''

"அதற்குள்ளாகவா?''

"மாதம் ஆறாகி விட்டதே? அப்புறம் ரயில் பிரயாணம் செய்வது சிரமம். மாலதியும்தான் நாளை வந்து விடுகிறார்களே...!''

"ஹூம்....''

உமா பெருமூச்சு விட்டாள். எட்டு மாதங்கள் ஓடி விட்டன. புதுடெல்லி ஸ்டேஷனில் நேற்றுத்தான் இறங்கியது போலிருந்தது. மறுபடியும் பிரயாணம். வரும்போது புதுமணத் தம்பதியாகச் சேர்ந்து வந்தாள். மணவாழ்வின் இன்ப நினைவுகளுடன், கற்பனைகளுடன் வந்தாள். இப்போது தனியாக, வேறு யாரோ துணையுடன் செல்ல வேண்டும். பிரிவை நினைக்கும் போதே துக்கம் துக்கமாக வந்தது.

மாலதி குழந்தையுடன் வந்தாள். குழந்தை அழகாக 'கொழு கொழு'வென்றிருந்தது.

"என்ன உமா, நாம் இரண்டு பேரும் சேர்ந்திருக்க முடியாது போலிருக்கிறதே? நான் வந்தவுடன் நீ கிளம்புகிறாய்....!''

"நீங்கள் அப்படித்தானே ஆசீர்வாதம் செய்து விட்டுப் போனீர்கள்....! அதுவும் தவிர, நீங்கள் வந்ததற்கப்புறம் வீட்டில் இடம் போதுமா? நாங்கள் வேறு வீடு பார்த்துக் கொண்டு போக வேண்டியதுதானே?''

"யார் சொன்னார்கள் அப்படி? உங்களை வேறு வீட்டுக்குப் போகச் சொல்லி நான் எழுதினேனா? நீ என்னுடன் தான் இருக்கவேண்டும், உமா. நீ ஊருக்குப் போய் விட்டு வந்ததும் என்னுடன் இருக்கலாம். உன் கணவரும் இப்போது வேறு இடத்துக்குப் போக வேண்டாம். நீ என் கணவருக்குச் செய்த உதவிக்காக இதை நான் செய்யவில்லை. உன்னிடம் எனக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டு விட்டது. நீ எனக்குத் தங்கைபோல....''

உமாவால் பதில் பேச முடியவில்லை. பெற்றவர்களையும், கொண்ட கணவனையும் தவிர, பிறரிடம் இவ்வளவு அன்பை அவள் கண்டதில்லை. மனத்தில் மூண்ட உணர்ச்சி, கண்களின் வழியே நீராகக் கசிந்தது.

"உமா, உன்னைப் போல நான் மணமாகி வந்தபோது, இந்த ஊரில் என் மீது அன்பு காட்ட ஒரு பிராணி கிடையாது. நான் அன்புக்காக ஏங்கித் தவித்த தவிப்பைச் சொல்ல முடியாது. பிறகு பழகியவர்களும் மனிதப் பண்புடையவர்களாக இல்லை. பொறாமையும், போட்டியும்தான் அவர்களிடமிருந்தன. நான் குடியிருந்த வீடுகளில் பெண்கள் தாடகைகளும் சூர்ப்பனகைகளுமாக இருந்தார்கள். நான் எவ்வளவோ செல்வமாக அண்ணன் தங்கைகளிடையே வளர்ந்தவள். இங்கே வந்தால், அசோக

தேவை

இவரைத் தெரியுமா?
சோர்வுற்றிருக்கும் இவருக்கு அயர்வைப் போக்க ஒரு சிட்டிகை ரத்தினம் பொடி தேவை

T.A.S.ரத்தினம் பட்டணம் பொடி

தபால் பெட்டி - 1151 சென்னை - 2

வனமாக இருந்தது. ராவணன் இலங்கையில் பிறக்கவில்லை. புது டில்லியில்தான் பிறந்து ஆண்டிருக்கவேண்டும்! கொஞ்சம் கொஞ்சமாக நானும் இந்த ஊரின் பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொண்டேன். ஒப்புக்காக உபசாரம் செய்வது, பெருமைக்காகப் பார்ட்டிகள் கொடுப்பது, எந்த நாளும் கொண்டாட முடியா விட்டால் பிறந்த நாளையாவது கொண்டாடி நாலு பேருக்குச் செலவு வைப்பது, குழந்தையில்லாத விடாயிருந்தாலும் நவராத்திரி கொண்டாடி ஒவ்வொரு நாளும் வருவோருக்கு என்ன கொடுத்தால் நம் மதிப்பு உயரும் என்று மண்டையைக் குழப்பிக் கொள்வது—இத்யாதி வழக்கங்களை நான் அனுசரிக்கவில்லை. அவற்றைத் தெரிந்து கொண்டு, அத்தோடு விட்டு விட்டேன்....'' என்று விளக்கினாள் மாலதி.

இருபதாம் தேதி வந்தது. உமா பெரும் மனச்சுமையுடன் சாமான்களை எடுத்துப் பெட்டிக்குள் அடுக்கினாள். மாலதி அவளுக்குப் பிரயாணத்துக்கு வேண்டிய சாப்பாடு தயாரிப்பதில் ஈடுபட்டாள்.

மணி நாலாயிற்று. பிரபாகரன் வீட்டைப் பார்த்துக் கொள்வதாகச் சொல்லவே, ராஜனுடன் மாலதி ஸ்டேஷனுக்குப் புறப்பட்டுச் சென்று விட்டாள்.

பழைய டில்லி ஸ்டேஷன். ராஜனைப்போல் எத்தனையோ கணவர்கள், மனைவியரை ஊருக்கு அனுப்ப வந்திருந்தார்கள்.

வண்டி புறப்பட்டது.

''போனவுடன் தந்தி கொடுக்கச் சொல்லு. உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்... உன் கணவரைப் பற்றிக் கவலைப் படாதே; நான் பார்த்துக் கொள்கிறேன்,'' என்றாள் மாலதி, தாய்மையான பாசத்தோடு.

''உங்களைப் போல் ஒரு சிநேகிதி கிடைப்பார்கள் என்று கனவிலும் நினைக்கவில்லை....'' என்றாள் உமா, தழ தழத்த குரலில்.

வண்டி ஊதியது. உமாவுக்கு இத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த அழுகை வெடித்து வந்தது.

''அழாதே! சந்தோஷமாய்ப் போய்த் தாயாகத் திரும்பி வா!'' என்றாள் மாலதி.

உமா திரும்பும்போது ராஜனுக்கும் பதவி உயர்ந்து விடும். வரப்போகும் குழந்தை உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிதான்!

''போகலாமா?'' என்ற மாலதியின் குரல் கேட்டுச் சிந்தனை கலைந்தான் ராஜன்.

''மன்னிக்க வேண்டும். என்னை மறந்து விட்டேன்,'' என்றான் ராஜன்.

''ஒன்றும் புதிதல்ல!'' என்றாள் மாலதி—குறும்புப் புன்னகையுடன் சிரித்தவாறு! ★

உங்கள் அதிருஷ்டம் 1957க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1-4-0-க்கு (தபால் செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில் லாப நஷ்டம், உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.

Shree Swami

SATNARAIN JYOTISH ASHRAM
(U. M.) HOSHIARPUR (Pb.)

தோல்வியில் வெற்றி

நா. பார்த்தசாரதி

கையிலிருந்த அழைப்பிதழைப் பார்த்த மரகதம், என்றோ நடந்ததை எண்ணாமலிருக்க முடியவில்லை. 'கணீர், கணீர்' என்று பேசும் அந்த இனிய குரல் அவளுடைய செவிகளில் கேட்பது போலிருந்தது. அனுதாபம் நிறைந்து தோன்றும் சோக நிழலிட்ட நீண்ட முகம் இன்னும் அவளது கண் இமைகளுக்குள்ளேயே இருந்தது. மறக்க முடியாத அந்தக் குரல், மங்காத அந்த முகம், எல்லாம் நினைவளவில் இருந்தன. இருந்தவை பிரமை. அதற்குரியவர் இறந்தபின் விட்டுச் சென்ற வெறும் நினைவுகள்.

"நான் போய் வரட்டுமா? ஞாயிற்றுக் கிழமை மாலை நான்கு மணிக்குக் கார் அனுப்பி விடுகிறோம். பரஞ்சோதி நினைவு நாளில், முதல் சொற்பொழிவு உங்களுடையதுதான். மறந்து விடாதீர்கள்!"

"சரி, கட்டாயம் வந்து விடுகிறேன். பரஞ்சோதி அத்தானைப் பற்றிப் பேசுவதில் எனக்குப் பெருமைதான்."

அவர் வணங்கி விட்டுச் சென்றார். மரகதம் நாற்காலியில் உட்கார்ந்தாள். ரோஜா நிறக் காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருந்த அழைப்பிதழ் மேஜைமேல் மடிந்து கிடந்தது. மடிந்தவரைப் பாராட்டுகிற அழைப்பிதழ் தானே? அதனால்தானோ என்னவோ, மடிந்து கிடந்தது. அது காகிதம்—வெறும் பொருள். அதனால் அப்படிக் கிடக்கலாம்; கிடக்க முடியும். அவள் உயிருள்ளவள். அவளுடைய எண்ணங்கள் உயிருள்ளவை. அவற்றால் மடிந்து கிடக்க முடியவில்லை. பழம் நறுக்கும்போது கூரிய கத்தி விரலில் பாய்ந்து விட்டால் 'குபுகுபு' வென்று பாயுமே, இரத்தம்! அந்த மாதிரிப் பாய்ந்தன — அவளது இதயத்தில் கட்டுண்டு கிடந்த பழைய எண்ணங்கள்.

* * *

மரகதத்திற்கு அப்பொழுது பதினேழு வயது. கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். அத்தான் பரஞ்சோதிக்குத் தான் அவளுடைய அக்காளைக் கொடுத்திருந்தது. அந்த வகையில் அத்தானுக்கு அவள் இரட்டை உறவு. அத்தானுக்கு அவள் மைத்துனியும் ஆகிறாள் அல்லா? அத்தானுக்கு இலக்கிய ஆர்வம் அதிகம். ஒரு நல்ல இலக்கிய எழுத்தாளரும் கூட. தம்மை ஓர் இலக்கிய எழுத்தாளர் என்று கூறிக் கொள்வதில் மட்டுமில்லை; அதன் படியே இலட்சியத்தோடு எழுதுவதிலும் அத்தானுக்குப் பெருமை அதிகம். மரகதம் அத்தானுடன் சிரித்துப் பேசிச் சுலபமாகப் பழகுவாள்.

அன்று ஒரு நாள். ஞாயிற்றுக் கிழமை. மரகதம் தன் அத்தானிடம் பேசிக்கொண்டிருந்தாள். கல்லூரி விடுமுறை. எனவே பேச்சு எழுத்துத்துறை பற்றிப் பலவிதமாகப் படர்ந்து சென்றுகொண்டிருந்தது.

"அத்தான், உண்மையிலேயே நீங்கள் வாழத் தெரியாதவர். எதையோ எண்ணிக் கனவு காண்கின்றீர்கள்."

"உண்மை, மரகதம்! ஆனால் ஒரு திருத்தம் — உங்கள் வாழ்க்கையை வாழ எனக்குத் தெரியவில்லை. என் வாழ்க்கை உங்களுக்குப் புரியவில்லை."

"நல்ல வாழ்க்கை!.... நல்ல எழுத்து! எல்லோருக்கும் புரியும்படியாகச் சாதாரணமாக எழுதினால் என்ன குடிமுழுகிப் போகிற

தாம்? அப்படி எழுதினல் நாலு பேர் புகழ்வார்கள்; நாலு காசும் மிச்சம் பிடிக்கலாம். எதுக்கு இந்தப் புரியாத தத்துவமெல்லாம்?''

''இரும்புப் பெட்டியை நிறைப்பதற்காக எழுத வரவில்லையே; இதயத்தை நிறைப்பதற்காகத் தானே எழுதுகிறேம்!''

''யார் இதயம்? படிக்கிற எல்லோருடைய இதயங்களுமா? அல்லது உங்கள் ஒருவருடைய இதயம் மட்டுமா?''

''முதலில் என் இதயம்.... பின்பு படிக்கிறவர்கள் இதயம்!''

''நான் ஒன்று சொல்கிறேன். கோபித்துக் கொள்ள மாட்டீர்களே, அத்தான்?''

''எனக்கென்ன கோபம்? சொல்லேன்.''

''அந்த 'மன்மத பாணம்' ஆசிரியர் கேட்டாரே 'காதற் சுவை' ததும்பும் ஒரு தொடர் கதை—அதை எழுத நீங்கள் ஒப்புக்கொண்டால் என்ன? நிறையப் பணம் கிடைக்குமல்லவா....?''

''அது எனக்குச் சம்மதமில்லை?''

''அந்தப் பத்திரிகையைப் படிக்காத கல்லூரி மாணவர்களே இந்தத் தமிழ் நாட்டில் கிடையாது. அவ்வளவும் காதல், சினிமா, இக்காலக் காலேஜ் வாழ்க்கை, இவைகளைப் பற்றிய மணி மணியான 'காதல் கண்ணுமூச்சி'க் கதைகள்!''

''மரகதம், நீ சிறு குழந்தை. பெரிய விஷயத்தைப் பற்றி என்னேடு பேசுகிருய். என் கதைகளைப் போலவே நான் பதில் கூறினுலும் அவை உனக்குப் புரியாமல் போகலாம்....!''

''என்ன அத்தான், பதில் சொல்லாமல் ஏமாற்றுவதற்காக என்னைச் சிறு குழந்தையாக்கி மழுப்பப் பார்க்கிறீர்களே?''

''ஏமாற்றவில்லை; கூறுகிறேன். கடைசிவரை இருந்து நீ பொறுமையாகக் கேட்பாயா?''

''சொல்லுங்கள்; கேட்கிறேன்.''

''கூர்மையாக, மழுமழுவென்று அழகாக இருக்கிறது கத்தி. பிரியப்படுகிறது என்பதற்காக அதைக் குழந்தையின் கையில் கொடுத்து விடலாமா?''

''கூடாது....! எதற்காக இந்தக் கேள்வி?''

''சொல்லுகிறேன், கேள். மக்களின் தேவை எதுவோ அதை நிரப்புவதல்ல இலக்கியம்.''

''நான் சொல்வது அது இல்லை, அத்தான். உடனடியாக உங்களுக்குப் பொருளையும் புகழையும் தரக் கூடிய கதைகளை எழுதுங்களேன். உயர உயர இலட்சியம் என்று பறக்க முயல வேண்டாமே?''

''புகழும் பொருளும் கிடைக்காமல், நானும் என் இலட்சியமும் தோல்வி யடைவதற்காகத்தானே நான் எழுதுகிறேன்!''

''தோற்பதற்காக ஒரு இலட்சியமா? வேடிக்கையாகத்தான் இருக்கிறது உங்கள் எழுத்தும் இலட்சியமும்!''

''என் இலட்சியம் இன்றைக்கே, இப்பொழுதே வெற்றி அடைந்து விட்டால், நாளைக்கு எனக்கு வேலை என்ன? இலட்சியம் தோல்வி யடைந்து கொண்டிருக்கிற வரை தான் எனக்கும் பெருமை; என் எழுத்துக்கும் பெருமை.''

''அப்படியானல், என்றைக்குத் தான் உங்களுக்கு வெற்றி?''

''என்றைக்காவது ஒருநாள்!''

''என்றைக்காவது ஒருநாள் வரப்போகிற வெற்றிக்காக இருமலும் கண்வலியும் பட்டுக் கைகடுக்க எழுதுவானேன்?''

''மற்றவர்கள் வாழும்போதே சாக விரும்புகிருர்கள். நான் செத்த பின்னும் வாழ விரும்புகின்றேன்.''

''ஜனங்களை ஏமாற்றுவதாக இருந்தாலும், உயிரோடு இருக்கும்

போதே புகழும் பணமும் கிடைக்குமல்லவா? அது போதுமே எழுத்தின் வெற்றிக்கு?''

''மரகதம், குழந்தைகளை நினைவு தெரிகின்றவரை ஏமாற்றலாம். நினைவு தெரிந்தவர்களை அறிவு தெரிகின்றவரை ஏமாற்றலாம். அறிவு தெரிந்தவர்களைத் தெளிவு பெறுகின்ற வரை ஏமாற்றலாம். தெளிவு பெற்றவர்களைப் பொய் சொல்லி ஏமாற்றலாம். சத்தியத்தை எப்படி அம்மா ஏமாற்றுவது—ஏமாற்ற முடியும்?''

''சத்தியத்தை ஏமாற்றுவது தானே கதை, கற்பனை, இலக்கியம் எல்லாம்....?''

''அப்படித் தான் இப்போது எண்ணுகிருர்கள்

இப்படி ஒரு காதல் கண்ணுமூச்சிக் கதை...!

பலர். அது தப்பு. சத்தியத்தை வளர்ப்பதுதான் இலக்கியம். சத்தியத்தை ஏமாற்றுவதற்காக எவன் ஒருவன் பேனுவைப் பிடித்து எழுதுகிருனே, அவன் தன்னையே ஏமாற்றிக் கொள்கிருன்.''

''இப்படி எண்ணி எண்ணித் தான் நீங்கள் கவைக்கு உதவாத ஏதோ கோழிக்கனு கண்டு கொண்டிருக்கிறீர்கள்.''

''என்னுடைய கனவு சத்திய வித்து. நான் போய்விட்டாலும், அது போகாது. என்றைக்காவது அது முளைத்தே தீரும்.''

இன்னெரு நாள். பரஞ்சோதியினுடைய சிறுகதைத் தொகுதி ஒன்றுக்கு ஒரு பத்திரிகையில் மதிப்புரை வந்திருந்தது.

'ஆசிரியர் உயர்ந்த நடையில், என்றும் அழியாத மையக் கருத்துக்களை வைத்து இந்தக் கதைகளை எழுதியுள்ளார். சாகா வரம் பெற்ற உயரிய இலட்சிய எழுத்தாளர்கள் மக்களுக்குச் சுலபமாகப் புரிகிற விஷயத்தைச் சுலபமான நடையில் எழுதினல், நிகழ்கால சமூகத்திற்கு எவ்வளவோ பயன் கிடைக்கும். மக்கள் தேவையைப் பூர்த்தி செய்வதுதானே இலக்கியம்? எழுதுகிறவருடைய பூரண ஞானமும் அதில் தெரிய வேண்டிய அவசியமில்லை. படிக்கிறவர் மனம் மகிழ எழுதுவதே முக்கியம். ஆசிரியர் பரஞ்சோதி அவர்கள் இனியாவது இதை உணர்வாரென்று நம்புகிறேம்.'

''பார்த்தீர்களா, அத்தான்? நான் உங்களிடம் அடிக்கடி எதைச் சொல்லுவேனே, அதையே இந்த மதிப்புரையிலும் எழுதியிருக்கிருர்கள்.''

''மக்கள் சாக்கடைச் சேற்றை விரும்புகிருர்கள் என்பதற்காக அதை என் கையால் வாரிக் கொண்டுபோய் அவர்கள் மூக்கருகில் காட்ட வேண்டுமா?''

''பின், யாருக்காகத்தான் நீங்கள் எழுதுகிறீர்களாம்....?''

''தலைமுறை தலைமுறையாக வந்து கொண்டிருக்கும் வாசக சமூகத்தில் என்றுவது ஒரு நாள் எவனவது ஒரு நல்ல வாசகன் எனக்குக் கிடைப்பான். அவனை நம்பித்தான் எழுதுகிறேன்.''

'''அவனுக்கு' எழுதுவதோடு இன்றைக்கு இருப்பவர்களுக்கும் கொஞ்சம் எழுதுங்களேன்....!''

''பார்த்துக் கொண்டிருக்கிற 'ஆடியன்ஸி'ன் கவனத்தைக் கவர்வதற்காகச் சினிமாவிலும் நாடகத்திலும் கண்ணருவியாக அழகு காட்டும் இளம் நடிகைகளைப் போல என்னையும் என் இலக்கியத்தில் ஆபாசம் பண்ணச் சொல்கிருயா நீ?''

அத்தானுடைய இந்தப் பதிலைக் கேட்டதும் மரகதத்திற்கு முகம் 'ஜிவ்'வென்று சிவந்து விட்டது. அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

அன்று மாலை. அத்தான் ஏதோ ஓர் இலக்கியக் கூட்டத்துக்குப் போயிருந்தார். அவருடைய மேஜைக்குப் பக்கத்திலிருந்த ஒரு புத்தகத்தை எடுப்பதற்காக அவர் அறைக்குப் போன மரகதம், சில காகிதத் துணுக்குக்கள் மேஜையின் கீழே கசங்கிக் கிடப்பதைக் கண்டாள். 'என்ன எழுதிக் கசக்கிப் போட்டிருக்கிருர்?' என்று பார்க்கும் ஆசையை அடக்க முடியாமல், அவற்றைக் கையிலெடுத்துப் பார்த்தாள்.

'ஊதுபத்தி, தான் எரிந்த பின்புதான் மணக்கிறது. அகில் தன்னை நெருப்பில் ஆஹுதி செய்து பிறர்க்குத் தன் சரீரத்தைப் புகையாக்கி மணமளிக்கிறது. சந்தன மரம் காய்ந்து பட்டுப் போன பின்னும் தன்னை அரைத்து மணத்தைக் கொடுக்கிறது. பரஞ்சோதி அழிந்து விடலாம். அதைப் பற்றிப் பரஞ்சோதியே கவலைப்படவில்லை. ஆனல் பரஞ்சோதியோடு, பரஞ்சோதியின் இலக்கிய சிருஷ்டிகளும் அழிந்துவிடக் கூடாது.'

'சத்தியத்தைக் கண் பொத்தி விளையாடிக் காசு சம்பாதிக்க வேண்டுமாம்! யாருக்கு வேண்டும் இந்தக் காசு? இலக்கியத்திலும் பத்தினித் தன்மை வேண்டும். யாருக்கு எது வேண்டுமானாலும், அதை எழுதி விற்று வயிற்றை நிரப்பி விடலாமா? வயிறு நிரம்ப ஞானத்தை அடகு வைக்க முடியுமா?'

இப்படி இன்னும் என்னென்னவோ எழுதி அந்தக் காகிதங்களைக் கசக்கிப் போட்டிருந்தார்— எழுத்தாளர் பரஞ்சோதி.

கசங்கிக் கிடந்த காகிதங்களுக்குள் ஒரு நல்ல உள்ளமும் கசங்கிக் கிடந்ததை மட்டும் அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. வேறொன்றும் புரியவில்லை. மற்றவர்கள் மூட்டி விடுகிற ஏக்கத் தீயைத் தானே அவிக்க முயன்றாலொழிய வேறு வழியில்லை, கிரந்த கர்த்தாவுக்கு.

எண்ணங்களின் பிறப்பு, எண்ணங்களின் இறப்பு, எல்லாம் ஒரே இடத்தில்தான் நிகழ வேண்டும்—அவன் மனத்தில்.

"சே, சே! இனிமேல் அத்தானிடம் 'எழுத்து விஷயமாக' வாயைக் கிண்டவே கூடாது. நமக்கென்ன? நாம் பேசி விட்டு மறந்து விடுகிறோம். அவர் பாவம்! அதையே எண்ணிப் புழுங்குகிறார். இதோ, இந்தக் கசங்கிய காகிதங்களே அந்த மனப் புழுக்கத்துக்குச் சரியான அடையாளங்கள்."—மரகதம் தனக்குள் எண்ணி, தன்னையே நொந்து கொண்டாள்.

கசங்கிய அந்தக் காகிதங்களை எடுத்துக் கொண்டுபோய்ப் பத்திரப் படுத்தி வைக்கவேண்டும் போல் தோன்றியது அவளுக்கு. அப்படியே செய்தாள் மரகதம்.

மற்றொரு காட்சி. இறுதிக் காட்சி. எலும்புந் தோலுமாக அத்தான் கூடத்தில் படுத்திருந்தார். க்ஷயக் கிருமிகள் அவர் உடம்பைக் கொத்தவரங்காயாக ஆக்கிக் கிடத்தியிருந்தன. அடிக்கொருதரம் 'கொள்ளு, கொள்'ளென்று இருமிக்கொண்டே அருகிலிருந்த பேஸினில் கோழையைத் துப்பிக் கொண்டிருந்தார் பரஞ்சோதி.

வெள்ளிக்கிழமை. எண்ணெய் தேய்த்து நீராடிய கூந்தலை 'தொளதொள' வென்று நெகிழப் பின்னிக் கொண்டு காலேஜுக்குப் போகத் தயாராகிக் கொண்டிருந்தாள் மரகதம். மணி ஒன்பதரை. அவளுடைய அக்கா பங்கஜம் சமையலறையில் ஏதோ காரியமாக இருந்தாள்.

"மரகதம், காலேஜுக்குப் புறப்பட்டுட்டியா அம்மா?"

"ஏன் அத்தான், இதோ புறப்படப் போறேன். உங்களுக்கு ஏதாவது செய்யணுமா?"

"நீ எனக்குச் செய்ய இனிமேல் என்ன இருக்கு? நான் தான் உனக்கு ஒண்ணு செய்யணும்?"

"என்ன சொல்றீங்க, அத்தான்? ஒண்ணும் புரியல்லியே?"

"கொஞ்சம் இப்படிக் கிட்ட வர்றியா? சொல்றேன்!"

மரகதம் அத்தானின் படுக்கை அருகிலே போய்க் குனிந்து உட்கார்ந்து கொண்டாள்.

அவருடைய குழிவிழுந்த கண்களிலிருந்து இரண்டு பக்கங்களிலும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

"இதென்ன, அத்தான்? ஏன் இப்படி அழறீங்க? பார்த்திங்களா, பார்த்திங்களா? இந்த அசட்டுத் தனம் கூடாது....நீங்க ஏன் இப்ப அழவேணும்?"

"என்ன செய்கிறது, அம்மா? இது சிரிக்கவேண்டிய நேரந்தான். எனக்கும் தெரிகிறது. ஆனால் என்ன பண்ணுவேன்? அழுகை தானே வருகிறது!"

"அடாடா, அசட்டுப் பிசட்டென்று எதையாவது உளறிக் கொண்டு இருக்கீங்களே?...."

"இல்லை, உளறவில்லை. நீ காலேஜிலேயிருந்து எத்தனை மணிக்கு வருவாய்? சொல்!"

"ஏன், அஞ்சு மணியாகும்!"

"இந்தா, இந்தக் கவரை பத்திரமாய் வச்சுக்க...."

வாழ...!

நீளமான கவரை எடுத்து அவள் கையில் கொடுத்தார் ஆசிரியர் பரஞ்சோதி.

"இப்ப அவசரமில்லை. சாவகாசமா இருக்கிறப்ப பிரிச்சுப்பாரு."

"என்ன அது? கதையா?"

"கதை....! ஆமாம், ஆமாம். இதுவும் ஒரு கதைதான். வரட்டுமா மரகதம்....?"

"என்ன? வரட்டுமாவா?.... எங்கே போறீங்க?"

"அடடே! அப்படியா சொன்னேன்? வாய் தவறி வந்திடுச்சு. 'நீ போயிட்டு வர்றியா'ன்னு கேட்கிறதுக்குப் பதிலாக என்னமோ உளறிட்டேன்."

மரகதம் தன் அத்தானை ஒன்றும் புரியாமல் மிரள மிரளப் பார்த்துக் கொண்டே கடித உறையுடன் எழுந்திருந்து போனாள்.

வடபுறம் தலைவைத்துப் படுத்துக் கொண்டிருந்த பரஞ்சோதி, தென்புறம் தலையை வைத்துக் கொண்டு வடபுறம் காலை நீட்டிப் படுத்துக் கொண்டார்.

"ஐயையோ, இதென்ன, ஆகாத்தனமெல்லாம் வேண்டிக் கெடக்கு? சீக்காக் கெடக்கறவங்க தெற்கே தலைவச்சுப் படுக்கலாமா?"—ஏதோ காரியமாக அந்தப் பக்கம் வந்த அவர் மனைவி பங்கஜம் அவரைக் கண்டித்தாள்.

சிந்திக்க...!

"சரிதான் போ! எமனுக்கு வடக்கே வர வழி தெரியாதோ?"—பங்கஜம் மறுபேச்சுப் பேசவில்லை. பேசாமல் உள்ளே போய் விட்டாள்.

ஐந்து மணிக்கு மரகதம் கல்லூரியிலிருந்து திரும்பி வந்தபோது, வீட்டில் மயான அமைதி. வெட்டித் துண்டு விழுந்த மூங்கில் கழிகளும், எருவில் தட்டிய வரட்டிகளும் கிடந்தன. அத்தான் அமரராகி விட்டார்....!

மரகதம் 'கோ'வென்று கதறியழுதாள். அந்தக் கவரை அவள் அதுவரைப் பிரித்துப் பார்க்கவே இல்லை. பரபரப்போடு இப்போது பிரித்தாள். அது ஓர் உயில். கூட ஒரு கடிதமும் இருந்தது.

"மரகதம், எனக்கு வேளை வந்துவிட்டது. நீ அடிக்கடி சொல்வதைப் போல வாழத் தெரியாதவனாகவே—வாழ்வைப் புரிந்து கொள்ளாதவனாகவே இங்கிருந்து போய் விடுவேன் போலிருக்கிறது. என்ன செய்யலாம்? நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். என் புத்தகங்கள் எல்லாவற்றின் உரிமையையும் உன் பேருக்கு உயிலெழுதி வைத்திருக்கிறேன். உன் அக்காவைப் பார்த்துக் கொள். எனக்கு வர்ழ்க்கைப்பட்டு அவள் பட்ட சுகம் ஒன்றுமில்லை. பாவி! கழுத்துக் கயிற்றைக் கூடச் சீக்கிரமே அறுத்துப் போட வேண்டியிருக்கும். என்றாவது ஒரு நாள் என் சிருஷ்டிகளுக்குப் பெருமை ஏற்பட்டால் அந்தப் பெருமை உன் விலாசத்துக்கே வந்து சேரும். உன்னால் முடிந்தால் புரிந்து கொள்ள முயற்சி செய்."

அத்தான்,
பரஞ்சோதி."

* * *

அமராகிவிட்ட பரஞ்சோதியின் புகழ் 'கிறு கிறு'வென்று ஏறியது. புத்தகங்களெல்லாம் ஐந்தாறு பதிப்புக்கள் அச்சாகி வேகமாகத் தீர்ந்து கொண்டிருந்தன. இலக்கிய அன்பர்கள் பரஞ்சோதியின் நினைவிற்கு நிதி திரட்டும் போது, மரகதம் தான் பத்திரப்படுத்தி வைத்திருந்த அத்தானின் கசங்கிய துண்டுக் காகிதங்களை ஏலத்துக்கு அனுப்பினாள். இலக்கியப் பித்து மிகுந்த அன்பரும் செல்வந்தருமாகிய ஒருவர், இரண்டாயிரம் ரூபாய்க்கு ஏலம் கேட்டார் – அந்த இரண்டு கசங்கிய துணுக்குகளையும்.

திடீரென்று அவள் மனம் மாறிவிட்டது. "முடியாது, முடியவே முடியாது. இவை விலை மதிக்க முடியாதவை. அத்தான் எனக்காகவே விட்டுச் சென்ற அழியாத சம்பத்துக்கள்" என்று ஏலத்திற்குத் தர மறுத்து விட்டாள். அமங்கலியான ஸ்ரீமதி பரஞ்சோதியிடம் ஒரு லட்ச ரூபாய் நிதி திரட்டிக் கொடுத்தார்கள்.

மரகதம் படித்துப் பட்டம் பெற்ற அதே கல்லூரியில் ஆசிரியை ஆனாள். இப்போது இருபத்து நான்கு வயது. இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை. அத்தானின் வழியை உணர்ந்து, அந்த வழியில் இலக்கிய சேவையும் புரிகிறாள் அவள்.

"என்னடீ இது, நாற்காலியில் உட்கார்ந்து அழுதுக் கிட்டு....? எதை நெனைச்சு அழறே இப்போ? சாப்பிடலையா?"

வெள்ளைப் புடவை கட்டிய முப்பது வயது அம்மாள் திருமதி பரஞ்சோதி மரகதத்தின் அறைக்குள் நுழைந்தாள்.

"ஒண்ணுமில்லே, அக்கா! வருகிற ஞாயிற்றுக்கிழமை அத்தான் நினைவு நாளைக் கொண்டாடுறாங்களாம். என்னைப் பேசக் கூப்பிட்டாங்க. சரின்னேன். இப்பதான் அழைப்பிதழ் கொடுத்திட்டுப் போறாரு அந்தச் செயலாளர். அழைப்பிதழைப் பார்த்ததும் ஏதோ பழைய நினைவுகளெல்லாம் வந்திட்டுது."

அந்த அம்மாள் முன்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டு விருட்டென்று திரும்பிப் போனாள். மரகதம் அந்த அழைப்பிதழை மீண்டும் எடுத்துப் பார்த்தாள். "தமிழ் இலக்கியத்தின் தந்தை அமரர் பரஞ்சோதி நினைவு நாள் விழா" என்று அழகாக அச்சிடப்பட்டிருந்தது.

'அத்தான், நீங்கள் வாழும் போது உங்கள் இலட்சியம் தோல்விப் பள்ளத்தில் கிடந்தது. நீங்கள் வாழாதபோது, இன்று அது வெற்றிச் சிகரத்தில் நிற்கிறது. நீங்கள் கூறி விட்டுச் சென்றது போல அது சத்திய வித்து. தோற்பது போல் தோன்றி, வெல்வதே சத்தியத்தின் முறை!' என்று தனக்குத் தானே தாழ்குரலில் கூறிக் கொண்டாள் மரகதம். ★

ஜாதி ரோஜா

3. "எனக்கு நானே விடுகதை ஆனேன் ...!"

'அழகேசன் விலாசம்' பங்களாவிற்குள் அந்தக் கார் நுழைந்தது; குழல் ஒலி கேட்டு வாசற் கதவுகளைத் திறந்த பணியாள், கேள்விக் குறியை நெற்றியின் வரம்பில் தேக்கியவாறு நின்று கொண்டிருந்தான். வேலைக்காரி வள்ளிதான் காரின் கதவுகளைத் திறந்து விட்டாள். அவளுக்கு உதடு கொள்ளாத சிரிப்பு; உள்ளம் கொள்ளாத மகிழ்ச்சி. இல்லற தெய்வத்தைத் தரிசித்துவிட்டாளல்லவா...?

அழகேசன் முன் கதவைத் திறந்து கொண்டு இறங்கினான். தன்னுடைய பங்களா அன்றைக்கு —அப்பொழுது அவனுக்குப் புதுமையைக் காட்டிக் கொண்டிருந்தது. எண்ணும் எண்ணத்தில் புதுமை; காணும் காட்சியில் புதுமை; நோக்கும் பார்வையில் புதுமை. புதுமை அவனுள் ஒரு பகுதியாக மாறியது; அவன் புதுமையினுள் ஒரு பகுதியாக மாறினான்.

இளந் தேனிலவு எங்கும் பொழிந்து கொண்டிருந்தது.

"ஏ, வள்ளி! கொஞ்சம் இப்படி வருகிறாயா? அழகி அம்மாவை உள்ளே கூடத்துக்குக் கொண்டு போகவேண்டும்; ஒரு கைகொடுப்பாயா?" என்றான் அழகேசன்.

பூவை

உத்தரவு புறப்படுவதற்கு முன், அவளாகவே புறப்பட்டு வந்து தயாராக நின்று கொண்டிருந்தாள்.

கூடத்தில் இருந்த 'ஸ்பிரிங்' கட்டிலில் பட்டு மெத்தையில் அழகி கிடத்தப்பட்டாள்.

அழகேசன் பெருமூச்சு விட்டவாறு, 'எங்களுடைய முதல் இரவுக்காக—சாந்தி முகூர்த்தத்துக்காகத் தயாரிக்கப் பட்டவை இந்தக் கட்டிலும் பட்டு மெத்தையும்! அந்த முதல் இரவு என்றுதான் வருமோ?.... மலர்ந்த ரோஜாவாக இனிய மணம் வீசி நிறைந்திருக்க வேண்டிய அழகியை வாடிய பூவாகக் கண்டு எடுத்து வந்து இப்போது மெத்தையில் கிடத்த வேண்டியிருக்கிறதே!....' என்று நினைத்தான். அவளுக்காக அனுதாபப்பட வேண்டிய அவன், தனக்காக அனுதாபப்படலானான்.

உலக உருண்டை அப்பொழுது அந்த அதிசயப் பெட்டிக்குள் சுழன்றது. 'ஆல் இண்டியா ரேடியோ—செய்திகள் வாசிப்பது, பூர்ணம் விசுவநாதன்' என்று பேசியது ரேடியோ.

நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டு, மின்சார விசிறிக்கு உயிர் தந்தான். கூடத்து வாசலில் ஒன்றும் தோன்றாமல், கண்கலங்க சோமநாதன் நின்று கொண்டிருந்தார்.

"அப்பா, நம் அழகி — என் மனைவி அப்பா....! அதோ பாருங்

கள்!'' என்றான் அழகேசன், மகிழ்ச்சி பொங்க.

''அழகியா? நம் அழகியா? கற்பகாம்பிகை, இப்போதுதான் உனக்கு மனம் இரங்கியதா?'' என்று கேட்டுக் கொண்டே தள்ளாடித் தள்ளாடி நடந்து, அழகி படுத்திருந்த கட்டிலை நெருங்கினார் சோமநாதன்.

அழகியின் கண் இதழ்கள் குவிந்திருந்தன. மூக்கின் நுனியிலும் இமைப் பகுதியிலும் ரத்தக்கறை படிந்திருந்தது.

''என்ன தம்பி, இதெல்லாம்?''

''காரில் அடிபட்டு விட்டது, அப்பா. ஒன்றும் பயமில்லை; மயக்கமாக இருக்கிறாள் என் மனைவி. டாக்டருக்கு போன் செய்யப் போகிறேன். ஒரு சமயம் நீங்கள் மனம் நொந்து என்னிடம் சொன்னீர்களே, நினைவிருக்கிறதா, அப்பா?....'பெற்ற பாசம் அடையும் வேதனை என்னை உயிரோடு சாகடித்து விடும் போலிருக்குது!' என்றீர்களே?...ஓடிப் போன இறந்த கால நினைவுகளைத் தேடிப் பிடித்துச் சாட்சி சொல்ல அழைக்கிறேனே யென்று நீங்கள் ஆச்சரியப் படுகிறீர்களா?........அன்று உங்களிடம் நான் சொன்ன சமாதானத்தைத்தான் இப்பொழுதும் திரும்பப் படிக்கிறேன்........என்னை நம்புங்கள் அப்பா, நம்புங்கள். நான் தவறு ஏதும் செய்யவில்லை அப்பா...!''

''சரி, சரி! அழகேசன் விலாசம் இப்பொழுதுதான் களைகட்டியிருக்கிற மாதிரி எனக்குத் தோன்றுகிறது; முன்பொரு நாள் உன்னைத் தோளில் சார்த்திக் கொண்டு வந்து நல்லபடியாக இங்கே சேர்ப்பித்தாள் அழகி. அப்பொழுது, 'எங்கள் தெய்வம் எங்களைத் தேடி வந்து விட்டது!' என்று கூத்தாடினேன் நான். ஆனால், கண் மூடிக் கண் திறக்கும் நேரத்திற்குள், கண்ட இன்பக் கனவு, துன்பக் கனவாக மாறி விடை பெற்றுச் சென்றது. அழகி போய் விட்டாள்!...அப்பொழுது போன என் உயிர் இப்பொழுது எப்படியோ மீட்கப்பட்டிருக்கிறது. உயிரை மீட்டுத் தந்தவள் என் மருமகள் அழகியேதான்! ஆகவே, மனை மிதித்த சீதேவியை மனை விளக்காக்கி ஒளி காட்டச் செய், அழகேசா. உன்னுடைய நாடகத்தைப் பற்றியெல்லாம் இப்போது சிந்திக்க எனக்குத் திராணி வற்றி விட்டது. வயசு காலத்தில் ஒரு மாமனாருக்குச் சிசுருஷை செய்யவாவது ஒரு மருமகளை வாழ வைத்து விடு. தேடிக் கிடைக்காத தங்கம் அழகி; அவள் காணக் கிடைக்காத சிப்பி முத்து. சீக்கிரம், டாக்டருக்கு போன் செய்; அல்லது காரை எடுத்துக்கொண்டு போய்க் கையுடன் அழைத்துவா. ஓடு!'' என்று உத்தர விட்டார் பெரியவர். உடல் தளர்ச்சி குரலில் இல்லை. நடந்து வந்த பாதையின் பழைய முட்பாதை ஒவ்வொரு மைல் கல்லாக அவருடைய நெஞ்சிலும் நினைவிலும் தோன்றி உறுத்திக் கொண்டிருந்தது. ரத்தக் கண்ணீர்த் துளிகள் வழிந்தோடின.

கையில் வைத்திருந்த வெள்ளிப் பூண் இட்ட பிரம்புக் கம்பு கை நழுவியதுகூட அவருக்கு நினைவில்லை. கட்டிலின் அருகிருந்த நாற்காலியில் அமர்ந்தவாறு, தன் மருமகளை விழி வலிக்க, நெஞ்சு இனிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார் முதியவர் சோமநாதன்.

டெலிபோனில் எண்கள் திருப்பப்படும் ஓசை கிழவருக்கு நிம்மதி தந்தது.

மங்கிய நிலவு உறங்கிக் கொண்டிருந்தது; வாடிய ரோஜா துயில் வளர்ந்து கொண்டிருந்தது; இசை கூட்டும் எழில் யாழ் நாதம் பரப்ப விருப்பமற்று, பஞ்சு மெத்தையில் தஞ்சம் அடைந்திருந்தது.

சோமநாதனுக்கு, உலகம் என்ற ஒன்று இருக்கிறது என்னும் ஞாபகங்கூட உதிக்கவில்லை. மனத்தில் நிம்மதி நிரம்பி வழியும் போது, மனிதனுக்கு உலகம் மட்டுமென்ன, உலகத்தைப் படைத்த அலகிலா விளையாட்டுடையானைப்

பற்றிக்கூடச் சிந்தனை பிறப்பது கிடையாது. ஒரு விநாடி, அப்படிப் பட்ட மனநிலைதான் உருவாகி யிருந்தது. பொழுது விடிந்து பொழுது போனதும், 'கற்பகாம் பிகே, என் மருமகளை என் மகனி டம் கொண்டு சேர்த்துவிடு. உனக் குத் தேனபிஷேகம், பாலாபிஷே கம் செய்கிறேன். சந்தனக் காப்பு சார்த்துகிறேன்; தங்கக் கண் மலர் செய்து அணிவிக்கிறேன்' என்று வேண்டுதல் விடுத்துக் கொண்ட அவர், அப்பொழுது தெய்வத்திற்கு நன்றி செலுத்த ஏனோ மறந்து விட்டார்.

அம்பிகை சுவரில் இருந்தாள். கிழவர் விழிப்புப் பெற்றார். ஓடி னார்; தண்டனிட்டு விழுந்தார். அழுதார், அழுதார், அப்படி அழு தார்: "தாயே, நீ கண் கண்ட தெய்வம். என் மருமகளை என் மக னிடமிருந்து மறுபடியும் பிரித்து

ஏடெடுத்தேன் பாட்டெழுத: 2

ஐப்பசியும் கார்த்திகையும்

வித்துவான் சி. இரத்தினவேலனர்

ஐப்பசியும் கார்த்திகையும்
அடமழையின் காலமடா;
செய்ப்பயிர்க்கும் யோகமடா;
செழுமை நாட்டில் நிலைக்குமடா!

ஏரிகுளம் நிரம்புமடா;
இன்பம் பொங்கி வழியுமடா;
நீரின்காடு எங்கணுமே
நீந்திச் செல்லத் தோணுமடா!

இயற்கை தரும் நன்மையடா;
ஈடிதற்கு இல்லையடா;
செயற்கையுந்தான் நீரிலாமல்
செய்பவர்கள் இல்லையடா!

ஒளி தருவான் சூரியனே
உலகுயிர்க்குத் தந்தை என்றால்;
அளிதருமிந் நீருலகில்
அன்னை என்று சொல்லுமடா!

இன்பமொடு துன்பமுந்தான்
இயற்கை என்று சொல்லுமடா;
மன்பதைகள் இதை உணர்ந்து
மாநிலத்தில் வாழுமடா!

வைத்துவிட மாட்டாயே?.... அழ இக்கு நல்ல மனசைக் கொடு!.... உன்னுடைய திருவாசலுக்கு நாங் கள்—நான், என் மகன், என் மரு மகள் மூன்று பேரும் வந்து திரு விளக்கு ஏற்றி வைத்து மகிழ அனுக்கிரகம் செய், அம்மா!" என்று புலம்பினர்.

இரவுப் பூஜை நடந்து கொண் டிருந்தது, கபாலீஸ்வரர் கோயி லில். மணி ஒலித்தது. "ஆஹா, தாயே! நல்ல சகுனம் காட்டுகி றாயா?....ஆஹா!" என்று மெய்ம் மறந்து பேசினர்—தனக்கு மட்டும் கேட்கும்படியாக அல்ல—தனக்கு இவ்வளவு சந்தோஷத்தை வாரிக் கொடுத்த தெய்வத் தாய்க்கும் கேட்கும்படியாகப் பேசினர்.

நிலைப்படியில் ஒற்றைக் காலால் நின்று கொண்டிருந்த வேலைக்காரி வள்ளி, வெளி வாசலில் வந்து நின்ற காரைக் கண்டவுடன் இரட் டைக்காலால் நடந்துபோய், டாக் டருடைய மருந்துப் பையை வாங் கினள். அழகேசன் டாக்டரை வரவேற்றான்.

தன்னை மறந்தோ, மறக்கா மலோ — அல்லது மறக்க முடியா மலோ துயில் புரிந்து கொண் டிருந்த ஓர் உள்ளத்திற்காக நான்கு உள்ளங்கள் கண்ணில் விளக்கெண்ணெயை ஊற்றிக் கொண்டு கண்காணித்து வந்தன.

நாடிக்குழல், ஒரு மடக்கு மருந்து, இஞ்செக்ஷன், இரண்டு மாத்திரைகள் அனைத்தும் 'மந் திராலோசனை' செய்தன; வாதப் பிரதிவாதம் நடந்தது; கருவுற்ற திட்டம் உருப் பெற்றது. 'சபாஷ், வெற்றி!' என்று கொக்கரித்தன அவை.

கடிகார முள்ளின் முனையில் தங் கள் இதயங்களைத் தொங்கச் செய்து, கண்களை அழகியின் கண் களில் பொருத்திவிட்டு, ஆதரவற் றவர் போல—அனாதைகள் போல, நின்றார்கள் தந்தையும் தனயனும்.

வாரிச் சுருட்டிக் கொண்டு படுக் கையை விட்டெழுந்தாள் கதாசி ரியை திருமதி அழகி. "சுசிலா

அக்கா, செந்தாமரை!'' என்று பெயர் சொல்லிக் கூப்பிட்டாள். சுற்று முற்றும் கண்களைத் தேடச் சொன்னாள். 'காணவில்லை!' என்ற ஒரு வரி விளம்பரத்தை அவளுடைய மனப் பத்திரிகை படித்தது.

"அழகி, நீ உன் வீட்டில்தான் அம்மா இருக்கிறாய்!'' என்றார் சோமநாதன், கண்ணாடியைச் சரியாகப் பொருத்திக்கொண்டு.

'ஐயோ, சிங்கத்தின் குகைக்கு நான் மறுபடியும் வந்துவிட்டேனா? என்ன விந்தை! என் வீடாமே! யார், எப்போது, ஏன் கட்டித் தந்தார்கள்? தன்னுடன் 'ஸ்கிப்பிங்' விளையாட்டு விளையாட விதி அழைத்தது; நான் மறுத்தேன். அதற்குப் பழி வாங்கவா அது இப்படி இங்கே என்னைத் தள்ளிவிட்டிருக்கிறது!...இதயத்தை விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலையில் தங்களைப் பக்குவப் படுத்திக் கொண்டிருக்கிறவர்களிடமா நான் அடைக்கலம் புகுந்திருக்கிறேன்? அடைக்கலமாவது, மண்ணாங்கட்டியாவது....? ஏதோ சூது நடந்திருக்கிறது. அழகேசன்தான் எல்லா சாகஸச் செயல்களிலும் வல்லமை படைத்தவராமே! திருமணப் பந்தலிலேயே என்னை மயங்கச் செய்வதற்கு, மயக்கும் ரோஜாப் பூவை நாடி என்னையே ரசாயன மாற்றம் செய்யத் துணிந்த புண்ணியவானாயிற்றே அவர்!... அந்த ஆறு புகைப்படங்கள் போட்ட விடுகதைகளுக்கு இத்தனை நாளாகியும் இன்னமும் என்னால் விடை காண முடியவில்லையே? என்னைப் படைத்தவன் விடுகதையாகி விட்டான்; வேலி கட்டிச் சுற்றும் உலகம் விடுகதை ஆகி விட்டது. என் கைத்தலம் பற்றியவர் விடுகதை ஆகி விட்டார்; ஏன், எனக்கு நானே விடுகதையாகி விட்டேன்; ஆக்கிக் கொண்டு விட்டேன்; அல்ல, ஆக்கப்பட்டு விட்டேன்!'

எள்ளத்தனை பொழுதில் ஓராயிரம் நினைவுகள் புயல் வேகத்தில் புறப்பட்டுச் சீறின; சிரித்தன!

நட்சத்திரக் குழந்தைகள் ஆடிய பின்னல்கோலாட்ட விளையாட்டுக்கு நிலவுச் சிறுமி 'இங்கிலீஷ் ட்யூன்' அமைத்துப் பின்பாட்டுப் பாடிக் கொண்டிருந்தாள்.

புடைத்தெழுந்தன நரம்புகள். தலையைப் பிடித்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்திருந்தாள் அழகி. ஒரு சில நிமிஷங்களை இறந்தகாலமாக்கிய பிறகு, அவள் தலையை நிமிர்த்தினாள். படுக்கையைப் பிரிந்து எழுந்தாள்.

"அழகி,'' என்று அழைத்தபடி, அவளை நெருங்கினான் அழகேசன்.

அவள் நிற்கவில்லை.

"அம்மா அழகி! நீ போய்விட்டாயானால், என் உயிரும் போய் விடும்,'' என்று கெஞ்சியவாறு ஓட முடியாமல் தொடர்ந்தார் சோமநாதன்.

வெளிக் கதவைத் திறந்து கொண்டு வெளியேற முதல் அடி எடுத்து வைத்தாள் அழகி.

"அழகி....அம்மா அழகி....!''

இனாம்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான கேசமும் நன்கு கருத்து, எப்பொழுதுமே கருமையாக வளரும். இது மயிர் உதிர்வதைத் தடுத்து, நீண்டு கருகருவென்று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1|15. முழு உபயோகத்திற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5|-. இந்த அற்புத தைலத்தை பிரபலப்படுத்துவதற்கென, அழகிற்கும் உறுதிக்கும் 15 வருஷ உத்தாவாதம் பெற்ற ஓர் அழகிய பான்ஸி கை கடியாரமும், ஒரு மோதிரமும் (நியூ கோல்ட்), 3 சீசா வாங்குபவர்களுக்கு 6 பான்ஸி கை கடியாரங்களும் மற்றும் 6 மோதிரங்களும் (நியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

AMRIT PHARMACY, (U.M.) Nakodar. (Pb.)

கண்ணீரைப் பாத காணிக்கையாக வைத்து, புவிகாக்கும் உலக மாதாவாக அவளை ஆக்க எத்தனிக்கவில்லை கிழவர்; கண்ணீரினால் அவளுடைய கல் நெஞ்சைக் கரைத்து மனித உணர்ச்சியைச் சுண்டிவிடத்தான் நினைத்தார் அவர்—அழகேசனின் தந்தை.

"ஐயா, நான் உங்கள் மருமகள்! எழுந்திருங்கள்....! யாராவது பார்த்தால், என்னைத் திட்டுவார்கள்....! என் உயிர் போனாலும் போகட்டும்; உங்கள் உயிர் போக விடவே மாட்டேன் ... எழுந்திருங்கள், மாமா.... எழுந்திருங்கள் !" என்று விம்மினாள் அழகி.

4. ஆம்; அழகிக்கு ஓர் அயோத்தி!

அழகுச் சாதனங்கள் என்றென்றும் மனத்திற்கு ஆனந்தம் தருபவை. கண்ணாடிப் பெட்டியில் நிறைந்திருந்த தண்ணீரில் மேலும் கீழுமாக ஓடியாடி நீந்திக் கொண்டிருந்தது பெரிய மீன் ஒன்று. பச்சை, சிவப்பு போன்ற அதன் மாறுபட்ட நிறங்களையும், அது உணவு உண்ணும் அழகையும் வெகு நேரம் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் அழகி.

"அம்மா, காப்பி பலகாரம் சாப்பிடுங்கம்மா!" என்று உபசாரம் செய்தாள் வள்ளி.

பலகாரத் தட்டை எடுத்துவந்து, தரை மீது விரிக்கப்பட்டிருந்த செட்டிநாட்டு வர்ணப் பாயில் வைத்தவாறு உட்கார்ந்தாள் அழகி. வெள்ளித் தம்ளரில் தண்ணீர் நிறைத்து வைத்தாள் வள்ளி.

ஒரு நினைவு எழுந்தது.



தன் நிலைமையையும் அந்த மீனின் நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தாள் அழகி. அவளுக்குச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. அவளுக்கும் உணவு கிடைக்கிறது; அதற்கும் உணவு கிடைக்கிறது; அவளுக்கும் அரண் இருக்கிறது; அதற்கும் இருக்கிறது; அந்த அரணையும் மீறிய ஒரு தூண்டில் அவளைப் பிடிக்கக் காத்திருக்கிறது; மீனுக்கும் அத்தகைய சங்கடம் உண்டு. அதற்கு விடுதலை இல்லை; அவளுக்கும் விடுதலை கிடையாதா? கிடையவே கிடையாதா?

உணவு கொள்ளவில்லை; இன்று மட்டுந்தானா? அழகேசன் விலாசத்தின் காற்று மேனியில் படிந்த கடந்த ஏழெட்டு நாட்களாகவே உற்சாகம் சிறிதுமின்றிக் காணப்பட்டாள் அவள். கொண்டவன் இருக்கும் இடமாயிற்றே அது?.... ஸ்ரீராமபிரான் இருக்கும் இடந்தானே சீதைக்கு அயோத்தி? ஆனால்....? அழகேசன் அந்தப் புராண புருஷனின் நிழலிலாவது ஒதுங்க முடியுமா?.... 'அவன்' பெயரை மனத்தால் தீண்டி, நினைவால் உறவாடி, நெஞ்சில் நிறைத்துக் கொள்ளவாவது அழகேசன் எத்தனம் செய்ய முடியுமா?

சோமநாதன் வந்தார். மாமனாரைக் கண்டவுடன்,

நமது செந்தமிழ் நாட்டில் இரண்டு அற்புதங்கள் உண்டு. அவை உலகில் வேறு எங்கும் காணமுடியாத அற்புதங்கள். ஒன்று மாமல்லபுரத்து அழியாப் பாறைச் சிற்பங்கள். இன்னொன்று பரத நாட்டியக் கலை.

—கல்கி

இட்டிலித் துண்டுகளைத் தொண்டைக் குழிக்குள் வேகமாகத் திணித்தாள் மருமகள்.

"சாப்பிட்டுட்டியா, அம்மா?"

"ஆமாங்க.... நீங்க....?"

"நீ சாப்பிட்டதும், வழக்கம் போலே உன் கையாலேயே பலகாரம் கொண்டு வாம்மா. இந்த ஏழெட்டு நாளாகத்தான் நான் வாய்க்கு ருசியாக என்னமோ சாப்பிட்றேன்," என்று உள்ளம் திறந்து, கண் மூடிப் பேசினார் அவர். கண்ணீரை அழகி கண்டு விடக் கூடாது என்ற நினைவு அவருக்கு.

வள்ளி பலகாரம் தயாரித்து வந்தாள். வள்ளியின் பதவியை ஏற்றாள் அழகி. சோமநாதன் ருசி பார்த்து அனுபவித்துச் சாப்பிட்டார்.

"நீ மாடிக்குப் போ, அம்மா. உன் எழுத்து வேலையைப் பார். என்ன யோசிக்கிறாய்?... அழகேசன் உன் கண்ணில் படவே மாட்டான்—பயப்படாதே! உன் விருப்பத்திற்கு விரோதமாக எந்த ஒரு சிறு காரியம் நடக்கக்கூட நான் சம்மதிக்க மாட்டேன்," என்றார் பெரியவர்.

அழகி சிரிப்பைப் பதிலாக்கி நன்றி சொல்லிய பிறகு, கூடத்தைக் கடந்து மாடிப் படி நோக்கிக் குறி வைத்தாள். கண் கொத்திப் பாம்பு ஏதாவது சுவரிடுக்கில் தலை நீட்டிப் பார்க்கிறதா என்பதை அறியவே அந்தக் குறி வைக்கப் பட்டது. 'நல்ல வேளை, அந்தப் புண்ணியவானைக் காணோம்!' என்றெண்ணி, மனத்தில் நிம்மதிக்குத் திசை காட்டியவாறு மாடிப் படி ஏறிப் போனாள்.

அப்பொழுது, "அழகி!..." என்ற குரல் கிணற்றடியிலிருந்து செத்து மடிந்து கேட்பது போல ஒலித்தது. யார் வள்ளியா? இல்லை, சோமநாதனா?...இல்லை, இல்லை! அதோ அந்தக் கண் கொத்திப் பாம்பு....!—அதோ, அந்தப் புண்ணியவான்!—ஆமாம், திருவாளர் அழகேசன்!

அழகி திரும்பினாள். அவளுடைய பிம்பத்தைப் படம் பிடித்துக் காட்டிய நிலைக் கண்ணாடியில் தன் உள்ளத்தோடு உருவத்தையும் ஒட்டிப் பார்த்தாள். ஒட்டும் இரண்டு உள்ளங்களையா கண்டாள்? எப்படிக் காண்பாள்? காணுதல்தான் சாத்தியமா?....ஒரே ஒரு நெஞ்சத்தை மட்டும்தான் அவளால் காண முடிந்தது; ஒரே ஒரு பிம்பத்தை மாத்திரம்தான் காண முடிந்தது. அது அழகேசனுடையதாக எப்படி இருக்க முடியும்? முடியாது, முடியவே முடியாது! அணைபோட்டுத் தடுக்கப்பட்ட அகழியில் பொங்கிப் புரளும் புது வெள்ளத்தின் சுழிப்பை, தாபத்தை, தாகத்தைத் தான் அவள் தன்னுள் – தன்னில் கண்டாள். அந்த நிலையை 'எக்ஸ்ரே' பிடித்துக் கண்டு கொண்டானே அழகேசன்? அதற்கு அவனுக்கு அதிகாரம் ஏது....?

ஏக்கத்தைக் கண்களில் தேக்கி, பெருமூச்சு முழுவதையும் இதயத்தில் அடைத்து நின்ற அழகேசன் தன் 'உரிமை'யை உரிமையுடன் பார்த்தான்.

"நீங்கள் யார்?" என்று கேட்டாள் அழகி. உதிர்ந்த அந்தக் கேள்வி உலருவதற்குள் மாடியில் போய் நின்று விட்டாள். அரண் அமைந்து கொண்டது. அழகி நெஞ்சு பிளக்க விம்மினாள்.

'நீங்கள் யார் என்று அவரைக் கேட்க நான் யார்?....' என்று அவளது 'மனச்சாட்சி' வினவியது.

'கையில் விரல் நெரித்துக் கால் தளர்ந்து வாய்புலர்ந்து' உட்கார்ந்தாள் அழகி – பெதும்பைப் பெண் கடற்கரையில் பிசைந்து வைத்த பெண் பாவை போல.

பார்வைக்குக் கடிவாளம் போட்டது கண்ணீர். சுவரில் ரவிவர்மாவின் சித்திரம் ஒன்று இருந்தது; அதில், அசோகவனத்துச் சீதை 'புனையா ஓவிய'மாக இருந்தாள்.

'என் நிலையைத்தான் பிரதிபலிக்கிறாயா, தாயே?' என்று மனத்துள் கேள்விக்கணை தொடுத்தாள். பேசும் சித்திரத்திற்கே பேசத் தெரியாமலிருக்கையில், பேசாத சித்திரத்திற்குப் பேச எப்படி முடியும்?

பிரிந்து கிடந்த புத்தகத்தில் சிந்தை பதித்தாள் அழகி.

'அழுவதற்கும் ஒரு காலம் உண்டு; சிரிப்பதற்கும் ஒரு காலம் உண்டு; ஓலத்திற்கும் ஒரு காலம் உண்டு; நடனத்திற்கும் ஒரு காலம் உண்டு.'

உலகம் வாழ, தன் உயிரைச் சிலுவைக்குப் பணயம் வைத்துச் சிரஞ்சீவி வழிகாட்டியாக மாறின புனித உள்ளம் அவளுக்குப் புதிதல்ல.

மற்றுமொரு சம்பவம்:

மைலாப்பூரில் அவள் சேர்ப்பிக்கப்பட்ட தினத்திற்கு மறுநாள், நர்ஸ் செந்தாமரையும் சுசிலாவும் அழகியை வந்து பார்த்தார்கள். ''அழகி, உன்னை அழகேசன் அவர்கள் இங்கு கொண்டுவந்து சேர்த்ததாக என்னாதே; தெய்வம்தான் சேர்த்திருக்கிறது. எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் முடிவு வேண்டாமா? ஆகவே, நீ அழகேசன் பவனத்தின் குடும்ப விளக்காக அமைந்து பிரகாசிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய இன்பக்கனவு. சுசிலா அக்காவுக்கும் இதேதான் ஆசை. கரிகாலனும், அவர் அத்தான் ராமலிங்கம் அவர்களும் செய்தி கேட்டு சந்தோஷம் கொண்டார்கள். முன்பு ஒருநாள் உன் கணவர் தனக்குத் தானே சொல்லிக் கொண்ட வார்த்தைகளை நான் உன்னிடம் சொல்லியிருந்தேன். இப்பொழுது திரும்பவும் ஞாபகமூட்டுகின்றேன். 'அழகி! வந்தவர்கள் போனவர்களிடம் என் கௌரவத்திற்காக இப்படி எத்தனை நாளைக்குத்தான் பொய் சொல்லித் தப்பிக்க முடியும்?.... நாம் இரண்டு பேரும் புருஷன் – மனைவியாக ஆகவே முடியாதா?....' என்று அழகேசன் மனம் நொந்து சொன்ன சொற்களை நான் மறக்க முடியவில்லை. நீயல்லவா மறக்காமலிருக்க வேண்டும்?....பெண்ணுக்கென நம் தமிழ்ச் சமுதாயம் அமைத்துக் கொடுத்திருக்கும் கட்டு திட்டங்கள் மிக அதிகம்; ஆனால் நியதிக்கு உட்பட்ட சுதந்திரங்களோ மிகக் குறைச்சல். ஆம்; நீ வாழவேண்டும் – உன் கணவருடன். நீ சிரித்து மகிழ வேண்டும் – உன் புருஷனுடன். இதுவேதான் எங்கள் எல்லோருடைய ஆசையாகும். தெய்வம் போல ஒரு மாமனார் உனக்குக் கிடைத்திருக்கிறார். ஆகையால் உன் சந்நிதானத்தில் அழகேசன் பேயாக மாறி அடியெடுத்து வைக்க இசைய மாட்டார்; பேயை, இதயமுள்ள நல்ல மனிதராக உருமாற்றிய பிறகுதான் உன் கண்ணில் தென்பட வைப்பார். இனியாவது சிரி, அழகி! ஆமாம், வாய் திறந்து மனம் திறந்து அற்புதமாகச் சிரி, அழகி. நீ பரிசு பெற்ற ஐயாயிரம் ரூபாய் செக்கைப் பெற்றுக்கொள். நாங்கள் போய் வருகிறோம்'' என்றாள் தாமரை.

> எந்தவித அடிமைத்தனமும் பொல்லாததுதான். ஆனால் பெண்ணடிமைத் தனத்தைப் போல் ஒருவனை மதி இழக்கச் செய்வது வேறொன்றுமில்லை.
>
> —கல்கி

'பூவை'யின் நவீனம்

வசந்த பைரவி

விலை அணு எட்டு

'உமா' – சென்னை-1.

அழகியால் அழத்தான் முடிந்தது. பெண் அழும்போது மட்டும் அவளுடன் சேர்ந்து யாருமே அழ மாட்டார்கள்.

மத்தியான்னம் சாப்பாடு முடிந்ததும் சோமநாதன் பின்கட்டில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார். 'அழகேசன் ஸில்க் எம்போரிய'த்தில் களவு போன விஷயமாக போலீஸ் ஜீப் இரண்டு முறை அழகேசனைத் தேடி வந்தது. இது விஷயமாக அவனுக்கு வெளி வேலைகள் இருந்தன. வள்ளியின் கணவனுக்கு உடம்பிற்குச் சுகமில்லை. அவளும் போய்விட்டாள். ஆகவே, அழகி மாத்திரம்தான் பாக்கி.

பிள்ளையார் சுழி போட்டிருந்த புதிய கதையைத் தொடங்க எண்ணி, வெள்ளைத்தாளும் வெள்ளை உள்ளமுமாகக் கட்டிலில் வந்து உட்கார்ந்தாள் நாவலாசிரியை அழகி.

"அழகி!...அழகி!" என்று கூப்பிட்டுக் கொண்டே அழகேசன் வந்தான்.

அவளுக்கு மேனி சிலிர்த்தது.

"அழகி, என்னுடைய உறவினர் இருவரும் ஒன்றுவிட்ட தங்கையும் வந்திருக்கிறார்கள். நீ கதாசிரியை என்பதை அறிந்து உன்னைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். காப்பி மாத்திரம் தயார் செய்து கொண்டு வா. என் கௌரவத்தைக் காப்பாற்று. அழகி, நான் புது அழகேசன். இது சத்தியம்...!" என்று பச்சைப் பாலகன் மாதிரி செருமினான் – முப்பது வயது ஆண் பிள்ளை.

அவர்கள் வந்தார்கள். வணக்கம் தெரிவித்தார்கள். பதில் வணக்கம் சொன்னாள். பிறகு காப்பி கொணர்ந்தாள். இலக்கியப் பயிற்சி பற்றிப் பத்திரிகை நிருபர்கள் போல அவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லக் கூடியவற்றுக்கு மட்டும் விளக்கம் தெரிவித்தாள். அவர்கள் போய் விட்டார்கள் – அழகேசன் உள்பட.

இதயம் கனியப் பெருமூச்சு விட்டவாறு கட்டிலில் வந்தமர்ந்த அழகி, அப்படியே கொத்துங் குறையுமாகப் படுத்துத் தூங்கி விட்டாள். யாரோ தன்னைத் தொட்டதறிந்து அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தாள் அவள்.

அழகேசன் கண்ணீருடன் நின்று கொண்டிருந்தான்.

"கண்ணே, என் நிலையை இன்னுங்கூட உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையா? அழகி.... நான் உன் கணவன் அல்லவா?... அழகி....!" என்று கேட்டுக் கொண்டே, அழகியை நெருங்கினான் அழகேசன்.

புயல் வெறியாட்டம் ஆடத் தளம் பரப்பு முன்னர், தென்றல் கதறியது: "ஐயோ!....மாமா!... மாமா!..."

விசித்தெழுந்த சோமநாதன் விசையாக ஓடி வந்தார்; வழியில் இருந்த கூடத்துக் கதவு தடுத்தது. அவர் நிலை குப்புறச் சாய்ந்து விட்டார். அவர், "அழகி, என்னம்மா நடந்தது?" என்று தேய்ந்த குரலில் விசாரித்தார்.

அழகி பதில் எதுவும் சொல்லத் தெம்பின்றி, சோமநாதனின் நெற்றியில் வழிந்த ரத்தத்தைச் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கண்களிலே தீப்பொறி பிறந்தது.

பாவம், அழகேசன் சாம்பராகிக் கொண்டிருந்தான்....!

(நினைவுக் குறிப்பு: **தொடரும்**)

அட்டைப்படப் போட்டிப் பரிசு

பயமும் பீதியும் பாவையின் நெஞ்சிலோ, செவியிலோ?
நா. குப்புசாமி, பம்பாய்-19.

தொல்லை தரும் எல்லையற்ற இன்பம்!
ஜோசப் ராஜேந்திரன், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

காதடைக்க வெடி கொளுத்தும் கணவன்!
ம. காளீஸ்வரன், திருச்சிராப்பள்ளி.

கானமுது பெய்யாமல், வாணவெடி பெய்யலாமோ?
ந. செந்தமிழன், திருச்சி-1.

வேடிக்கைக்கு அகப்பட்ட தொட்டாற் சிணுங்கி.
ச. மாதவன், ராஜப்பாளையம்.

துணிவு அங்கே! துணுக்கம் இங்கே!
பா. ஞானசவுந்தரி, அரசாங்கப் பெண்கள் பயிற்சி பள்ளி, பாளையங்கோட்டை.

கனல் படைப்பும், காது அடைப்பும்!
பெ. வெ. அசலம், கோயம்புத்தூர்.

'அனிச்சம்பூ நான் அத்தான், அதிர்வெடி தாங்கேன்!'
ஆ. வேதநாயகம், தமிழ் நாடு தொழிற் நுட்பக் கல்லூரி, மதுரை.

மத்தாப்பு வெடியும் மின்னல் கொடியும்.
எம். கலிராஜு, சென்னை-17.

வெடிக்காகச் செவி பொத்த, முடிக்காத கோலம்!
எம். ஆர். மணி, திருக்காட்டுப்பள்ளி.

சிற்பியின் முத்தொளிக்கு அவள்;
சிலையின் சிந்தனைச் சுழலுக்கு அவன்.
கே. முகமது, அருப்புக்கோட்டை.

குழந்தையில்லா வீட்டிலே கொண்டாடும் தீபாவளி!
க. ஜெயரத்தினம், சென்னை-11.

வெடிக்கும் பட்டாசும் திடுக்கிடும் நெஞ்சும்!
இரா. சுப்பிரமணியன், அழகப்பா கல்லூரி, காரைக்குடி.

விந்தை மொழி பேசிச் சிந்தை களிக்காது; வெடியோசை
கேட்டு இடியேறுண்ட நாகமானாள்!
எ. அர. ஏகாம்பரம், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

வெடிக்கு முன்னே துடிக்கும் உள்ளம்!
எம். ஓ. வி. எம். சமால், ரங்கூன்.

தீபாவளிக்கு ஓர் இன்ப ஒத்திகை!
சோம. ராமனுதன், கோட்டையூர்.

கொண்டவன் வெடி சுட, கொண்டவள் காதடைக்கிறாள்!
லூயி பத்மினி, தஞ்சாவூர்.

ஓசை முன்னே; ஒளி பின்னே!
குமாரி பத்மா, சென்னை-5.

ஓசை பொறுக்காத காது; நேசம் மறுக்காத நெஞ்சு!
தமிழன்பன், யாழ்ப்பாணம். ★

விமரிசனம் :

ரங்கோன் ராதா

தீபாவளியைப் பின்னோட விட்டு, முன்னோடி வந்த படங்கள் ஐந்து. அவை : 'தாய்க்குப் பின் தாரம்'; 'ரம்பையின் காதல்'; 'குல தெய்வம்'; 'வாழ்விலே ஒரு நாள்'; 'அமர கீதம்'.

திரு ச. அய்யாப் பிள்ளையின் சிந்தனை, கிராமியச் சூழலில் படம் பிடித்துத் தந்த எழிற் சித்திரம் 'தாய்க்குப்பின் தாரம்'. திரு எம். ஜி. ராமச்சந்திரன், திருமதி பானுமதி வழக்கம்போல ஜோடி சேர்ந்து நடித்திருக்கிறார்கள். 'கூண்டுக் கிளி'க்குப் பிறகு இந்தச் சமூகப் படத்தில்தான் எம். ஜி. ஆர். தோன்றுகிறார். போற்றக் கூடிய வகையில் அவர் பெயர் நம் நெஞ்சில் நிறைகிறது. பானுமதிக்கு இம்மாதிரியான பாகம் ஒன்றும் புதிதல்ல. ஆகவே, அவருடைய கடமை தானாகவே முடிந்து விடுகிறது. காளைச் சண்டை; சிலம்புச் சண்டை போன்ற சம்பவங்கள், கண்ணாம்பா, பாலையா, தேவர், போன்ற பிரபல நடிகை நடிகர்களின் உணர்ந்த நடிப்பு முதலியன இணைந்து, மேற்படி படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கத் துணை புரிந்திருக்கின்றன.

'குல தெய்வம்' அயல் மொழிச் சரக்காம். வசனம்: தமிழ்ப் பேனா — முரசொலி கேட்கிறது. திரு மாறன் உழைத்த உழைப்பு பலன் கண்டது. திரு சகஸ்ரநாமம், திரு ராஜேந்திரன், திருமதி பண்டரிபாய் சகோதரிகள் ஆகியோரின் பெயர்களை ரசிகர்கள் மறக்க முடியாது.

கலைக்கும் கலைஞனுக்கும் மத்தியில் சாவித்திரி.

— வணங்காமுடி

'வாழ்விலே ஒரு நாள்' — நாம் ஏற்கனவே அறிந்த விஷயம்தான்!

'ரம்பையின் காதல்' — காதலுக்கு இரண்டாவது பதிப்பு இது. அவ்வளவு எடுபட்டதாகச் செய்தித்தாள்கள் கூறக் காணோம்.

'அமர கிதம்' ஒரு துயரக் கதை.

தீபாவளி வெளியீட்டுப் படங்கள் இரண்டு: 'பாசவலை'; 'ரங்கோன் ராதா'.

இவை இரண்டும் வட துருவமும் தென் துருவமும் போல.

ராஜாராணி, மந்திரம், தந்திரம், பேய், பிசாசு — இன்னும் என்னென்ன உண்டோ, அவை எல்லாம் 'ஜாம் ஜாம்' என்று வருகின்றன — 'பாசவலை'யில். திரு ராதா, திருமதி வரலக்ஷ்மி இருவரின் நடிப்பிற்காகப் படத்தைப் பார்க்க வேண்டும்.

'ரங்கோன் ராதா' அந்த நாளையக் கதை. திரு அண்ணாத்துரையின் பேனா வண்ணம் தந்த அற்புதச் சித்திரம். திரு மு. க. வின் 'முத்திரை'யை நடிக-நடிகையரின் பேச்சுக்களிலே இனம் கண்டு கொள்கிறோம்; மகிழ்கிறோம்.

பக்திப் போர்வையில் உலகத்தை மட்டுமல்ல— உற்றவர்களையும் ஏமாற்றுபவனின் வேஷம் திரு சிவாஜிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய மனைவியின் பாத்திரம் திருமதி பானுமதிக்கு. கணேசனின் முகபாவங்கள், அவருடைய வாய் பேசும் பேச்சுக்களையெல்லாம் சேர்த்துப் பேசுகின்றன. தான் குற்றவாளியாக நிற்கும் சந்தர்ப்பங்களில் அவர் நடிப்பு உச்சம் பெறுகிறது. பானுமதிக்குப் பாதிக்கு மேல் நல்ல பெயர். மொத்தத்தில் இந்த ஜோடியும் நமக்குப் பழக்கப் பட்டவர்கள் தாமே! திரு ராஜேந்திரன் புகழ் ஏணியில் அடி வைக்கிறார் — நல்ல செய்திதான். திருமதி ராஜசுலோசனாவுக்கு வேலை குறைவு. திருமதி ராஜம் 'வில்லி' மாதிரி. குறை சொல்ல முடியுமா?

கலைவாணர் தம்பதிகள் நடித்திருக்கிறார்கள்; ரசிக்க முடியவில்லை.

'தேசிங்கு ராஜன்' இன்னும் சிறப்பாக அமைந்திருக்கவேண்டும். மூலக் கதையில் செய்யப்பட்ட மாற்றம், படத்தின் நீளத்திற்கு மாற்றம் தர இயலாமல் தவிக்கிறது. சோகத் துளிகள் நிரம்பி வழிகின்றன. படத்தில் இயற்கைக்குப் புறம்பான சம்பங்கள் வேறு. மு. க. வின் 'கண்ணன் பக்திப் பாட்டு' நன்றாக அமைந்திருக்கிறது. திருமதி கமலா லட்சுமணன், குமாரி இ. வி. சரோஜா நடன மாதுகளாகத் தோன்றியிருக்கிறார்கள்; போற்றும்படியாக அமையக் காணோம்.

'பார்க்க வேண்டிய' படத்தைப் 'பார்க்கத் தகுந்த' படமாக ஆக்குவதில் சிரத்தை எடுத்திருக்கிறார் டைரக்டர் திரு காசிலிங்கம்.

பானுமதியின் துயரம் கதை சொல்கிறது!

—மக்களைப் பெற்ற மகராசி

ஆசிரியையும் மாணவியும்

நடன உலகம் :

“ஏறுமயிலேறி....!”

பாரதி கலா நிலயத்தின் தலைமை ஆசிரியை திருமதி செல்வமணியின் சிஷ்யை குமாரி பிரேமாவின் நாட்டிய அரங்கேற்றம் திரு ஈ. கிருஷ்ணய்யர் தலைமையில் சிறப்பான முறையில் நடைபெற்றது. ரசிகர்கள் ஆதரித்தனர். முக்கியமாக, சங்கராபரண வர்ணமும், கமாஸ் தில்லானாவும், ‘ஏறு மயிலேறி’ அபிநயமும் சிறப்பாக அமைந்திருந்தன.

நாடக உலகம் :

முதல் முழக்கம்

பெரம்பூர் கலைக் கழகத்தினர் ‘முதல் முழக்கம்’ என்ற நாடகத்தை நடத்தினார்கள். கதை-வசனம் எழுதியவர்: திரு ‘ராஜா’. மக்களுக்கு அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன், நாடகம் பொது மக்களுக்கு எவ்வகையில் தேவை; எந்த முறையில் பயன்படும் என்பதையும் முடிவிட வேண்டாமா? கதையின் சுவைக் குறைவுக்கு ஈடு கட்டுகிறது வசனம். நடிகையர் திருமதி பிரேமலதாவும் திருமதி உமா தேவியும் திரைப்பட முதலாளிகளின் கருத்தைத் திருப்பும் வகையில் சிறப்பாக நடித்தார்கள்; நடனமாடினார்கள். திருவாளர்கள் சந்தர், ராஜாமணி, ஆறுமுகம் போன்றோரும் உணர்ந்து பணியாற்றினார்கள். அமைச்சூர் நாடகக் குழுவினரது நாடகமாதலால், பங்கு கொண்ட எல்லோருக்கும் நம் பாராட்டுதல்கள். இந்தப் பாராட்டுக்கள் மூலம், செய்யப்பட்ட குறைகள் திருத்தம் பெற வேண்டும்.

—‘பைரவி’ ★

197217.

புதியதும், ருசி யுடன் கூடியது.
ராதாஸ்
குளுகோஸ் பிஸ்கட்டுகள் கேக்குகள், பன், ரொட்டி மற்றும் பல..
புரொப்ரைடர்: T.P.G. சாமி
ESTD: 1939.
BAKERS & CONFECTIONERS
RADHA'S
Biscuits
FRESH FROM THE OVEN
REGD NO. 122117
BREAD
ராதா பிஸ்கட் பாக்டரி
பேக்கர்ஸ் & கன்பெக்ஷனர்ஸ்
161, தங்கசாலை தெரு... மதராஸ்-1.

எங்கும் புகழ்பெற்றது!
விஜயகர்
மணிலா சுருட்டுகள்
V. ஆறுமுக செட்டி
18. அண்ணா பிள்ளை தெரு, சென்னை.1.

தி. தி. ஏகப்ப செட்டி அண்டு ஸன்,

(உலோக வியாபாரம்)

அரசாங்கப் பதிவு செய்யப் பெற்ற

இரும்பு எ:கு விற்பனையாளர்

துவக்கம்: 1860

செயலகம்: 116, நைனியப்ப நாய்க்கன் தெரு,
சென்னை - 3.

உரிமையாளர்:

தி. தி. குப்புசுவாமி செட்டியாரும் அவர் புதல்வர்
தி. தி. சண்முக வடிவேலும்

எல்லா வகைப்பட்ட இரும்பு, எ:கு, கம்பி, தகடு, முதலியவைகளும், செம்பு, பித்தளைத் தகடுகளும் எங்களிடம் கிடைக்கும்.

மாய மோதிரம்! ரொக்கப் பரிசு ரூ. 1,000!

(அபூர்வ சக்தியுடையது)

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும், மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது, உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணமற் போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றி யடைவீர்கள். சுருங்கச் சொன்னல் இம் மோதிரம் ஒரு பாதுகாப்பாளனைப் போன்றது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0. ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் செலவு தனி. பலன் இல்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal: THE BENGAL MESMERISM HOUSE
(U. M.) NAKODAR, (P. B)

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்: ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ்.
4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1 (தமிழ் நாடு) போன்: 2200.


அன்னையின் உற்ற தோழி
ஐயோ பாவம்! குழந்தைக்கு மறுபடி சளிப்பு
அச்-ச அச் அச் அச
நல்ல முடக்கு வாதம்! வலி தாங்கமுடியவில்லை இன்றைக்கு ஆபீஸுக்குப் போனாற் போல் தான்.
அம்மா! என் கால் சுளுக்-கிண்டுடுத்தே. இன்னிக்கி எப்படி மாட்ச் ஆடுவேன்.
டாக்டரின் அறையில
...ஆமாம். அம்மா! தலைவலிக்கு மட்டுமல்ல. லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம், சுளுக்கு, பிடிப்பு, வாதம் மற்றும் எல்லா வலிகளுக்கும் மிகச்சிறந்தது. சளிக்கும், இருமலுக்கும், இணையற்ற நிவாரணி. நீங்கள் எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.
சில நாழிகைகளுக்குப்பின
ஓரியண்டல் பாம் தான் உங்களை இவ்வளவு சீக்கிரம் குணப்படுத்தியது.
ஆமாம்: நான் ஆபீஸுக்குக் கிளம்பியாச்சு! இலையைப்போடு
நானும் கூட இன்றைக்கு மாட்சில் சக்கை போடு போடப் போகிறேன் அப்பா!
ஒவ்வொரு வீட்டிலும் லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் அவசியம் இருக்க வேண்டும்
ORIENTAL BALM
லிட்டில்ஸ்
ஓரியண்டல் பாம்
எல்லா சளி, வலி, நோவுகளுக்கும்

Regd. No. M 6309 UMA December 1956
Registered as a Newspaper in Ceylon.

Edited, Printed and Published by G. Umapathy, at Uma Printers,
" Uma House " 4/32, Thathamuthiappan Street, Madras-1. (Tamil Nadu.)